www.padippakam.com

MR. JUDE

Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20 ரூபா 11/00

දිනමුරසු වාරමලර් நவ.22–28,1998

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 284

## சர்வதேசம் தகர்ந்துபோன அரச வியூகம்



## பிரிட்டிஷ் அமைச்சருக்கு எதிராகச் சதி



## தேவயாணியின் முறிந்த காதல்

## ரஜினிக்கு ஆபத்து

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

படிப்பகம்

# முரசம்

## இராணுவத்தீர்வு பாதுகாப்பு செலவீனம்

**அன்புள்ள உங்களுக்கு வணக்கம்.**

பட்ஜெட் விவாதங்கள்
சூடு பிடித்திருக்கின்றன!

யுத்த பட்ஜெட்டை
அரசு முன்வைத்திருக்கிறது!

வெற்றி நிச்சயம் என
இராணுவத் தீர்வு முனைப்பில்
நிற்கும் அரசினால்
இதைவிட வேறென்ன
செய்ய முடியும்?

எதிர்பார்ப்புக்கள்
அதிகம் இல்லாததால்
ஏமாற்றமும் இல்லை!

இராணுவ செலவீனம்
மேலும் மேலும் உயரும்
என்பதும்
எதிர்பார்க்கப்பட்டதே!

முதற் கோணல்
முற்றும் கோணல்!

நாட்டின் தேசிய
பிரச்சனைக்கு
கோணலான அணுகுமுறை–
இராணுவத்தீர்வு!

முதன்மையான இனப்
பிரச்சனையில்
நேரான தீர்வு
எட்டப்பட்டிருந்தால்,
ஏனைய பிரச்சனைகளிலும்
நேரான பரிகாரம் கிட்டியிருக்கும்!

யார் வீழ்ந்தாலும்–
யாது அழிந்தாலும்
'வெற்றி நிச்சயம்'
என்ற வெற்றுப்பிடிவாதம்
நாட்டைக்
குட்டிச்சுவராக்கி வருகின்றது!

குருவி தலையில்
பனங்காயை வைத்தால்கூட
குருவி தாங்காது!

குருவி தலையில்
பாறாங்கல்லை
வைத்தால் என் செய்வது?

குருவி என்பது
இலங்கைத் தீவு!
பாறாங்கல்
இராணுவத் தீர்வுக்கான
செலவீனங்கள்!

பாதுகாப்பு செலவீனம்
என்று கூறுவது
இங்கு பொருந்தாது!

அந்நிய சக்திகளிடம்
கையேந்தி
அவற்றின் தலையீட்டுக்கு
இடமளிப்பதால்
நாட்டின் பாதுகாப்புக்கு
நிரந்தர ஆபத்து!

புதிய ஆயுதங்களை
கொள்வனவு செய்தால்
தமிழ் பேசும் மக்களின்
உயிர்ப்பாதுகாப்புக்கு
நிரந்தர அச்சுறுத்தல்!

ஆகவே, பாதுகாப்பு
செலவீனங்கள் என்பது
பொருந்தாத கூற்று!

இராணுவத் தீர்வுக்கான
செலவீனங்கள்
என்பதே பொருத்தம்!

கடன் வாங்கி
கல்யாணம் செய்தாலும்
மங்கள காரியம்
என்று பாராட்டலாம்!

கடன் வாங்கி
யுத்தம் செய்வது
அமங்கலக் காரியம்!

எங்கும் அமங்கலம்
நிலவுதல் நிச்சயம்
என்பது போல
பிடிவாதம் காட்டுவதை
எப்படி விபரிப்பது!

ஒரு தனிமனிதன்
அதே காரியத்தைச்
செய்தால்
பைத்தியக்காரத்தனம்
என்றுதான் சொல்வோம்!

இங்கு அரசே
அதனைச் செய்கிறது.
என்ன சொல்வது?

கையேந்த வெட்கமில்லை;
மத்தியஸ்தம் வகிக்கிறோம்
என்று முன்வருபவர்களின்
நட்புக் கரத்தைப்
பற்றிக் கொள்ளமட்டும்
என்ன வெட்கம்?!

வெட்கமல்ல;
விவகாரமே அதுதான்!

கொடுப்பதற்கு
எதுவுமில்லாத நிலையில்,
தமிழ் பேசும் மக்களது
பேரம் பேசும் பலத்தை
பறித்தெடுப்பதற்கானதே
இராணுவத் தீர்வு முனைப்பு!

கொடுப்பதற்கு
தயார் என்றால்
மத்தியஸ்தத்துக்கு
முகம் கொடுப்பதற்கு
தயங்கத் தேவையில்லை!

மனம் இருந்தால்
மார்க்கம் இருக்கும்!

மனம் இல்லை;
ஆகவே–மத்தியஸ்த
மார்க்கம் இருந்தும்
அதனைப்
பார்க்க மறுக்கிறார்கள்!

ஆகவே, இப்போது
இராணுவத் தீர்வுக்காக
ஒதுக்கப்பட்டுள்ள நிதியும்
யானைப்பசிக்கு
சோளப் பொரிதான்!

அரசியல் வெற்றிக்காக
யுத்த அசுரனுக்கு
தீனிபோட்டே
தீர வேண்டுமானால்
நாடு நலிவுறுவதும்
தவிர்க்க முடியாததே!

■■ ■■

*மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்*

## ஆன்மீகம்

### இந்து மதத்தின் உன்னத உண்மை

இந்துமதத் தத்துவங்களும், கொள்கைகளும் சீரான மனித வாழ்விற்கு வழிகாட்டுவன. ஆனால் இன்று பல இந்து சமயத்தவர் அவற்றை வெறும் சடங்குகளாகவே அனுஷ்டித்துக் கொண்டிருக்கின்றனர்.

ஏன், எதற்காக- இக் கிரியைகள் செய்யப்படுகின்றன எனத் தெரியாமலே அனுஷ்டிக்கப்படுகின்றன. 'காலையும், மாலையும் கடவுளை வணங்கு' எனச் சொல்லப்பட்டிருப்பதால், மன ஐக்கியமின்றி கடவுளின் விக்கிரகங்கள், திரு உருவப் படங்கள் முன் கைகூப்பி நிற்கின்றோம்.

பகவத்கீதை, திருமுறைகள் போன்றவற்றை தெய்வீக நூல்கள் என்று கூறி பூஜையறையில் வைத்து வணங்குகின்றோமே தவிர, அவற்றிலுள்ள கருத்துக்களை அறிந்து, கைக்கொள்ள இன்று மறந்துவிடுகின்றோம். இதனாலேயே இந்து மதம் மூடநம்பிக்கைகளையுடையது எனத் தவறாகக் கருதப்படுவதுடன், பல போலி ஆசாமிகள்- மகான்களெனத் தோன்றி இந்து மதத்திற்கு இழுக்கினை ஏற்படுத்துகின்றனர்.

எனவே, ஒவ்வொரு இந்துவும், எப்போது தம் இந்துமதக் கோட்பாடுகளை உணர்வு பூர்வமாக அறிந்து, தம் வாழ்வில் கைக்கொள்ள முற்படுகின்றனரோ, அப்போதுதான் இந்து மதத்தின் உன்னத நிலையை உலகம் முழுதும் உணர்ந்து கொள்ளும்.

தொகுப்பு:-ஸ்ரீப்ரியா சிவபாலன், காரைதீவு.



### அத்கம் சொன்ன அந்த ஊர்

ஒருநாள் மகான் இப்றாகீம் இப்னு அத்கம் அவர்கள் ஒரு காட்டின் வழியே சென்று கொண்டிருந்தார்கள். அப்போது அக் காட்டில் திக்குத் திணறிய போர் வீரன் ஒருவன் அத்கமிடம் வந்து "அருகில் ஏதேனும் ஊர் இருக்கிறதா?" என வினவினான்.

அதற்கு அத்கம் அருகிலிருந்த ஒரு மையவாடியை (கபுறுஸ்தான்) சுட்டிக்காட்டி "இதோ ஊர்" எனக் கூறினார்கள்.

இதைக் கேட்ட போர் வீரனுக்கு கோபம் வந்துவிட்டது. தன் கோபம் தீருமட்டும் அத்கமை அடித்தான். பின் அத்கமைப் பார்த்து "அருகில் ஏதேனும் ஊர் இருக்கிறதா, என நான் கேட்டதற்கு ஏன் நீர் மையவாடியைச் சுட்டிக் காட்டுகின்றீர்?" என்றான்.

அதற்கு அறிவிற் சிறந்த அத்கம் அவர்கள் நிலைகுலையாது பொறுமையோடு "உண்மையில் மையவாடிதான் ஊர். நாம் ஒவ்வொருவரும் இறுதியில் செல்லுமிடம். 'கபுறுஸ்தான்'-அதனால்தான் அவ்வாறு கூறினேன்!" என்றார்கள். உண்மையை உணர்ந்து கொண்ட போர் வீரன் அத்கமிடம் மன்னிப்புக் கோரினான்.

எம்.சி. கலீல், கல்முனை-05.

## கவிதைப் போட்டி இல.281

பரிசுக்குரிய கவிதை



### அழகு

அச்சம் தரும்
போர்ப் பிடியில்
துச்சமென காடழிப்பு
சொச்சமிங்கு
மிஞ்சிய நாம்
அச்சமின்றி
அழகு செய்வோம்!

ரோஜா ஆனந்தராஜா–பதுளை.

இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:

### மூடிமறைப்பு!

வேருக்குள்ளே வெடிகுண்டு....
விபரம் தெரியுமுன்னே
உடல் துண்டு!
யாருக்கு யார் செய்த சதியென்று
தெரிந்தால் தணிக்கை!

செ. ஞானராசா–சின்னப்பண்டிவிரிச்சான், மடு.

### சமாதானச் செடி!

சமாதானச்
செடி முளைத்து
சந்தோஷக்
கிளை விரித்து
நிம்மதி
நிழல் பரப்பும்
வளமான நாள்
வருமோ?

ரேணுகா நிபாய்தீன்–
ஏறாவூர்–02.

### மானிட நடுகை

தம்பியரே....
இது
மரநடுகைக் காலமல்ல;
மானிட நடுகைப் போகம்!

மயூரா யோகேந்திரன்– 'துளசி'
ஆரையம்பதி–02

### சிவப்பும்! பச்சையும்!

வடக்கில்....
பயிரெல்லாம்
சிவப்பு!
தெற்கில்...
பயிரெல்லாம்
பச்சை!

கயல்வண்ணன்–
வவுனியா.

### பகற் கனவு

செம்மணி ஆதாரம்
சிதைந்த விவகாரம்....!
ஈந்தது, யார் இங்கே–
தோண்டுதற்கு அதிகாரம்....?

எஸ்.எம். நவரட்ணம்–அக்கரைப்பத்தனை.

## கவிதைப் போட்டி இல.284



### அன்னை மடி

இரசிக்க அழகு செடி
வெடிக்க கண்ணி வெடி
மடிந்த பின் கிடக்க
அன்னை மடி!

ஜெ.சந்திரதாஸ்–பொகவந்தலாவ.

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பிவையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 28.11.1998

**முகவரி:** கவிதைப் போட்டி இல.284
தினமுரசு வாரமலர், த.பெ. இல–1772, கொழும்பு.

### தீர்வு

அடியைத் தேடு
முடியைத் தேடு
கிடைக்காது தீர்வு!

க.யோகேஸ்வரன்–
கஹகல்லையூர்.

### கண்டுபிடிப்பு!

தமிழ்க் கட்சிகட்கு
ஓட்டுப்போடுவதைவிட,
மரத்தை நட்டு
நீரூற்றுவது மேல்!

அ.யாழினி– மட்டக்களப்பு.

### சமாதானம்

நீ எப்போது
பழம் தருவது?
நாங்கள் எப்போது
பசியாறுவது?

அ.சுஜிகலா–ஆரையம்பதி–02.

### சிறு(வர்) சந்தேகம்!

போரிலும் முடிவில்லை!
பொதியிலும் தீர்வில்லை!
செடியிலும் வேரில்லையோ?

கே.மர்யம்–
சிலாபம்.

## வாசக(ர்)சாலை



'முள் நிலவு' நிலாவிற்கென ஒதுக்கிய இதயத்தின் ஓரத்தில் 'டிசம்பர் பௌர்ணமி'க்கும் இப்போதே இடம் ஒதுக்கியுள்ளோம். முரசின் சிறு (தொடர்) கதைகள் கண்களை மட்டுமல்ல இதயத்தையும் அல்லவா ஈரப்படுத்துகின்றன.

எஸ்.பத்மா, உமாஜினி,
கொழும்பு–10.

ராஜேஸ்குமாரின் 'முள் நிலவு' வலம் வந்த வானத்தில் மீண்டும் ஒரு முழு நிலவு (டிசம்பர் பௌர்ணமி) வலம் வரத் தொடங்கியதையிட்டு மிகவும் மனமகிழ்வு அடைகிறேன்.

செல்வி றிஸானா சம்சுதீன்,
புதிய காத்தான்குடி.

கொழும்புத் துறைமுக தமிழ் பேசும் மக்களின் உண்மை நிலையை வெளியிட்ட முரசுக்கு எமது பாராட்டுக்கள்.

பாஹிர், ஜியாவுதீன், குகதாசன்,
கொழும்பு–01.

வீண் அகம்பாவத்தால் இயற்கை வளங்களும் விலை போகின்றன என்பதை, ஆசிரியரின் வளமழிப்பு சிறப்புத் தலையங்கம் மூலம் படித்த எனதுள்ளம் இரத்தம் கசிகின்றது. தோல்வியைக் கண்டு துவண்டுவிடாமல் மன உறுதியுடன் போராடும் போராட்டம் வெற்றியில் முடியும் என்பதற்கு ஈராக் அதிபரின் வாழ்க்கை சரித்திரச் சான்று. நான் சதாம் ஹுசைனின் இரசிகை. 'உதட்டில் ஒரு மச்சம்' எதிர்பாராத திருப்பத்தை நோக்கிப் போய்க் கொண்டிருக்கின்றது. கைகளைக் கொடுங்கள் 'சுபா' பல்சுவை அம்சங்களோடு வெளிவரும் முரசே உன்னைப்போற்ற வார்த்தைகளைத் தேடிக் கொண்டிருக்கிறேன்.

மும்தாஜ் முஹாஜிரீன், மல்லவதெனிய.

முரசு 156ல் (க.போ.இல: 153) 'வித்தை' என தலைப்பிடப்பட்ட எனது கவிதை, சேனையூர் அச்சுதன் என்பவரால் எழுத்துமாறாமல் கொப்பியடிக்கப்பட்டு முரசு 281ல் (க.போ. இல:- 278) எழுதப்பட்டுள்ளது. (கவிதைகளை இணைத்துள்ளேன்) இப்படியானவற்றில் முரசு கவனமெடுக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறேன்.

எஸ்.பிரபா–பதுளை.

மேற்கு நகரத்தை இலவசமாய் ஒரு சுற்றுலா சுற்றி வந்த உணர்வை ஏற்படுத்திவிட்டது 'மேற்கே ஒரு குற்றம்', 'உதட்டில் ஒரு மச்சம்' ஆரம்பமே அட்டகாசம். முரசுக்கும் கதாசிரியருக்கும் நன்றி.

குர்சியாம் ரஜனி, பரகாவளை, உக்குவளை.

என் சுவாச காற்று முரசே!

நீ சுமந்துவரும் ஒவ்வொரு அச்சமும் என் மனதைக் கொள்ளையடிக்கின்றன. முடிவுற்ற என் நினைவில் இருந்து நீங்காத நிலாவும், புதிதாக வந்து அசத்திக்கொண்டிருக்கும் 'உதட்டில் ஒரு மச்சம்', 'டிசம்பர் பௌர்ணமி' இவையெல்லாம் என் மனதைக் கொள்ளையடிக்கின்றன. வியாழன் காலையில் உன் முகத்தில்தான் விழிப்பேன். அடுத்த தொடர் வெள்ளிக்கிழமை வந்தால், என்னவென்று தவிப்பேன்.

கே.மனோ, கொழும்பு–13.

### கூட்டணிக்கு சவால்

முரசே! கூட்டணியினர் அரசை எதிர்த்து வாக்களிப்பது நிர்ப்பந்தம் காரணமாகவே. அய்யாத்துரையார் அவசரப்பட்டு பாராட்டிவிட்டார். பொதி நாடகத்துக்கு ஒத்துழைப்பதையும் கூட்டணி வெளிப்படையாக அறிவிக்கட்டும். இதனை ஒரு சவாலாகவே விடுக்கிறேன். கூட்டணி தயாரா? பொதியைக் காட்டி உலகை ஏமாற்றுகிறார்கள். தமிழ்க் கட்சிகள் தீர்வுப் பொதியை ஏற்றுள்ளன என்றும் வெளிநாட்டில் அம்மையார் கூறியிருக்கிறார். அதனை ஏன் கூட்டணி கண்டிக்கவில்லை? கூட்டணியை தேவையற்றுப் புகழ வேண்டாம்!

சி.ஜெகநாதன், மட்டக்களப்பு.

அன்பின் முரசே!

இரும்பு மனிதன் ஈராக் அதிபர் 'சதாம் உசைன்' அவர்களின் உண்மைக் கதையை தொடராக தரும் முரசுக்கு என் வாழ்த்துக்கள். வெற்றி வீரன் சதாமுக்கு ஒரு சபாஷ்.

எம்.எஃவ்.சுனரா, நஜிரா, குவைட்.

வன்னிச் சமர் பற்றிய எக்ஸ்ரே ரிப்போர்ட் சூப்பர். 'டிசம்பர் பௌர்ணமி'யில் நான் உலாவினேன். அவ்வளவு வெளிச்சம் வசந்த கால பௌர்ணமியாக இருக்க வேண்டும் என்று எனது ஆசை;.....

ஆ.சந்திரமோகன், புஸ்ஸலாவ.

இனிய முரசே!

நீ தாங்கி வரும் அனைத்து அம்சங்களும் சூப்பர். கிரைம் சக்கரவர்த்தி ராஜேஸ்குமாரின் 'டிசம்பர் பௌர்ணமி' தூள்.

வாரா வாரம் ஒவ்வொரு அங்க முடிவினை திரிலாகவே கொண்டு வருகின்றாய்.

செல்வி க.குணவதி, திருகோணமலை.

### ஒன்று கலக்கலாம்

தமிழ் மக்கள் தொடர்பாக ஜனாதிபதி கூறிய கருத்தை தமிழ்க் கட்சிகள் சில தாமதமாகவே கண்டித்தன. சில கட்சிகள் அதைக்கூட செய்யவில்லை. இக் கட்சிகள் பேசாமல் பொதுஜன முன்னணிக்குள் ஒன்று கலக்கலாம் தானே. ஏன் தனிக் கடைகள் நடத்தி தமிழ்க் கட்சி என்ற பெயரில் எங்கள் பெயரை விற்கிறார்கள்?

இ.விமலன், கல்லாறு.

### வாய்பொத்தி நிற்பதேன்?

இனிய முரசுக்கு;

'வந்தேறு குடிகள்' என்று கூறினும், வாலாட்டி கொண்டிருப்போரை தமிழ்ப் பத்திரிகைகள் சந்தியில் நிறுத்த வேண்டும். ஜே.ஆர்.'போரா, சமாதானமா?' என்று கேட்டார். டி.பி.விஜயதுங்கா 'நாம் மரம், தமிழர்கள் கொடி' என்றார். இன்று அம்மையார் 'நாடே சொந்தமில்லை' என்கிறார். அப்படியிருந்தும் காதுகளைப் பொத்திக்கொண்டு வாலாட்டுகிறவர்களை அடையாளம் காட்டவேண்டாமா? தந்திரம், மந்திரம் என்றுகூறி அரசை ஆதரித்தனர். மானமே போனபின்னர் தந்திரம் எதற்கு? அடி மடியிலேயே கைவைத்த பின்னரும் பொத்திய வாயை திறந்து எதிர்ப்பு தெரிவிக்காமல் இருக்கிறார்கள். இவர்களா தமிழ் பிரதிகள், வெட்கம். வெட்கம்.

யோ.காலிங்கராசா, திருக்கோணமலை.

### இப்போதாவது

கூட்டணியினர் பட்ஜெட்டை எதிர்க்கும் முடிவை எடுத்தது சரியே. ஏதோ இப்போதாவது கண்திறந்ததே. இராணுவத் தீர்வுக்கான பட்ஜெட்டை எதிர்ப்பதற்கு பாராளுமன்றத்திற்குள் இருக்கின்ற கட்சிகள் மட்டுமல்லாமல், வெளியே உள்ள கட்சிகளும் முன்வரவேண்டும்.

எஸ்.விஸ்வராஜன், அம்பாறை.

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு, வேறு பிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

-நிர்வாகி.

மடல்கள் மற்றும் ஆக்கங்கள்– உட்பட சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:–1772, கொழும்பு.
தொலை நகல்:– 074-513266

www.padippakam.com

# வெளிநாட்டு அமைச்சரின் விஜயம் தோல்வி!

## புரளிகளால் தென்னாபிரிக்கா அதிருப்தி

(நமது நிருபர்)

வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் தென்னாபிரிக்கா விஜயம் தோல்வியில் முடிந்திருக்கிறது.

பாராளுமன்றத்தில் 'பட்ஜெட்' தாக்கலாகியுள்ளது. முக்கிய அமைச்சர்கள் நாட்டில் இருப்பது அவசியம். அவ்வாறிருந்தும் தென்னாபிரிக்காவுக்கு அவசரமாக பறந்தார் லக்ஷ்மன் கதிர்காமர்.

சமீபத்தில் கொழும்பு வந்திருந்த தென்னாபிரிக்க தூதுக்குழு வெளியிட்ட கருத்துக்கள் அரசுக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியதாகத் தெரிகிறது.

அடுத்த கட்டமாக இலங்கை இனப்பிரச்சனை விவகாரத்தில் தென்னாபிரிக்கா முக்கிய முடிவு எதனையும் எடுத்து விடக்கூடும் என்று அரச தரப்பினர் கலக்கமடைந்தனர்.

இன்றைய நிலையில் யுத்தத்தை நிறுத்தக்கூடிய எந்தவொரு அழுத்தத்தையும் அரசு விரும்பவில்லை. அழுத்தம் தரக்கூடிய முடிவு எதனையும் தென்னாபிரிக்கா அறிவிக்காமல் தடுப்பதற்காகவே அவசரமாக தென்னாபிரிக்கா சென்றார் கதிர்காமர்.

பிரிட்டனில் உள்ள புலிகளின் சர்வதேச தலைமையகத்தை தென்னாபிரிக்காவுக்கு மாற்றும் எந்த அறிகுறியும் தெரியவில்லை. பிரிட்டன் அரசும் புலிகளை நிர்ப்பந்திக்கவில்லை. எவ்வித இடையூறும் அங்கில்லை.

இவ்வாறான நிலையில் தென்னாபிரிக்காவில் புலிகள் தலைமையகம் நிறுவ உள்ளதாக திட்டமிட்டே புரளிகள் கிளப்பிவிடப்பட்டன. தென்னாபிரிக்க அரசு புலிகளுக்கு உதவி விடக்கூடாது என்ற முன்ஜாக்கிரதையுடன் கிளப்பிவிடப்பட்ட புரளியே இது என்று கூறப்படுகிறது.

### ஏமாற்றம்

தென்னாபிரிக்கா சென்ற கதிர்காமருக்கு எதிர்பார்த்தளவு உபசாரம் இருக்கவில்லையாம். 'இலங்கை அரசின் குற்றச்சாட்டு ஆதாரமற்றது' என்று தென்னாபிரிக்கா சலிப்போடு நிராகரித்துவிட்டது.

இலங்கை அரசின் தீர்வுப் பொதி தொடர்பாக கருத்துக் கூறுவதையும் தென்னாபிரிக்கா தவிர்த்திருந்தது. இலங்கை அரசின் தீர்வுத் திட்டத்தை முன்னெடுக்க அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்று நெல்சன் மண்டேலா பாராட்டிக் கூறுவார் என்று கருதியே அவரிடம் தீர்வுப்பொதி பற்றி கூறப்பட்டதாம். ஆனால் அதற்கு முன்பே தீர்வுப் பொதி பற்றிய பூரண விவரங்களும், அப்பொதியால் தமிழ் பேசும் மக்களின் பிரச்சனைகளுக்குத் தீர்வு கிட்டாது என்றும் விலாவாரியாக விளக்கப்பட்டுவிட்டதாம்.

அதன் காரணமாகவே தென்னாபிரிக்க அதிபரோ, அரசோ எக்கருத்தையும் கூறவில்லை என்று தெரிகிறது.

### அதிருப்தி

தென்னாபிரிக்காவில் புலிகளின் தலைமையகம் பற்றிய புரளிகள் தென்னாபிரிக்க அரசுக்கு அதிருப்தியையும் ஏற்படுத்தியுள்ளதாம்.

இலங்கை அரசின் புகார் பற்றி விசாரிக்கலாம் என்று முன்னர் கூறிய தென்னாபிரிக்க அரசு, இம்முறை அமைச்சர் கதிர்காமர் நேரடியாகச் சென்றபோது, ஆதாரமற்ற புகார் என்று ஒரேயடியாக நிராகரித்திருக்கிறது.

ஆதாரமில்லாத விஷயத்திற்காக அமைச்சர் கதிர்காமர் அவசர விஜயம் செய்ததால் இலங்கை அரசின் உள்நோக்கம் என்னவென்பதும், சமாதானத் தீர்வுக்கு நல்லெண்ண உதவிகளை நாட விரும்பவில்லை என்பதும் தென்னாபிரிக்க அரசுக்கு விளங்கிவிட்டது என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் கூறுகின்றன.

# வவுனியாவில் தொடரும் மர்மங்கள்

## அடையாளம் காட்டுமாறு அழைத்துச் சுட்டனர்!

வவுனியா பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் எஸ். வீரசிங்கம் 15.11.98 அன்று இரவு சுடப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக முரசுக்கு கிடைத்த தகவல்கள் வருமாறு:

ஞாயிற்றுக்கிழமை இரவு 8.45 அளவில் இரு இளைஞர்கள் வீரசிங்கத்தின் இல்லத்துக்குள் பிரவேசித்தனர். இருவரும் தமது முகத்தின் பாதியை மறைக்க துணிகட்டியிருந்தனர்.

'நாங்கள் புலிகள் இருவரைப் பிடித்து வைத்திருக்கிறோம். அவர்களுடன் உமக்கு தொடர்பு இருக்கிறது. வந்து அடையாளம் காட்ட வேண்டும்!' என்று வீரசிங்கத்தை அழைத்தனராம்.

வீரசிங்கம் குடும்பத்தினர் கூக்குரலிட்ட போது, அவர்களைப் பிடித்து அறை ஒன்றுக்குள் பூட்டிவிட்டு, வீரசிங்கத்தை இழுத்துச் சென்றனர். வீட்டுக்கு வெளியே வைத்து சுட்டுவிட்டுப் போய்விட்டனர்.

வயிற்றில் காயப்பட்டுக் கிடந்த வீரசிங்கம் தன்னைக் காப்பாற்றுமாறு அபயக் குரல் எழுப்பினார். அயலவர்கள் ஓடிச்சென்று தூக்கினார்கள். மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர்.

முகத்திற்கு துணி கட்டியிருந்தவர்கள் வீரசிங்கத்தைச் சுடும்போது, அவர் சாகப் போகிறவர்தானே என்ற நம்பிக்கையில் தமது துணியை அகற்றினார்களாம். அதனால் தன்னைச் சுட்டவர்களை அவர் அடையாளம் கண்டதாகக் கூறப்படுகிறது.

பலநோக்கு கூட்டுறவுச்சங்கத் தலைவர் பதவியில் இருந்து இவரை அகற்றும் நோக்கம் கொண்ட தமிழ்க் கட்சி ஒன்றே இச்சம்பவத்திற்குக் காரணம் என்று அறியப்படுகிறது.

இச் சம்பவத்திற்கும் புலிகளுக்கும் இடையே தொடர்பு ஏதும் இல்லை என்பது நம்பகமாகத் தெரிகிறது. சுடப்பட்ட வீரசிங்கம் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கும் சங்க வேலைகள் தொடர்பாகச் சென்று வருபவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஜனாதிபதி உரை

## பிரபா கண்டனம்?

தமிழ் மக்கள் இந்த நாட்டுக்குச் சொந்தமானவர்கள் அல்ல என்று ஜனாதிபதி கூறியது தொடர்பாக புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் கண்டனம் தெரிவிக்கலாம் என்று அரசியல் நோக்கர்கள் கூறுகின்றனர்.

தனது மாவீரர்தின உரையில் அக்கண்டனத்தை பிரபாகரன் தெரிவிக்கக்கூடும் என்று அவர்கள் கருதுகின்றனர்.

ஓயாத அலைகள் 02, மற்றும் ஜயசிக்குறுய் படையினரின் முடக்கம் பற்றிய செய்திகளோடு இம்முறை மாவீரர்தின உரை உற்சாகமாக இருக்கும் என்றும் நம்பப்படுகிறது.

மாவீரர்தின உரை பிரசுரங்களாக தயாரிக்கப்பட்டு இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும் விநியோகிக்கப்பட உள்ளதாம்.

# நான்கு பேர் பலி

## கமிஷன் தகராறு காரணம்!

மன்னார் உயிலங்குளத்தில் 15.11.98 ஞாயிறு அன்று நான்கு தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

பயங்கரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டதாக அரச வானொலி செய்தி வெளியிட்டது.

சுட்டுக் கொல்லப்பட்ட நால்வரும் வியாபாரிகள். இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்து தடை செய்யப்பட்ட பொருட்களை களவாக கொண்டு சென்று விற்பனை செய்பவர்களே அவர்கள்.

சில மாதங்களுக்கு முன்னரும் இத்தகைய வியாபாரிகள் சுட்டுக் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அனுமதி கொடுப்போருக்கு கமிஷன் கொடுக்காமல் விட்டதால்தான் இவ்வாறு சுடப்படுவதாக தகவல் ஒன்று கூறுகிறது. கொடுக்க வேண்டியதைக் கொடுத்தால் தடை செய்யப்பட்ட பொருட்களும் தடையற்ற பொருட்களாகிவிடுமாம்.

இதேவேளை கொக்காவில் பகுதியில் 14.11.98இல் வான் தாக்குதலில் இரு தமிழர்கள் கொல்லப்பட்டனர். மோட்டார் சைக்கிளில் சென்றபோதே தாக்குதலுக்கு இலக்காகினர்.

# மீன்பிடிக்கு படையினர் தடை!

## நிவாரணம் மட்டும் பரிகாரமாகாது!

### யாழ் குடாநாட்டு மீனவர்கள் குமுறல்

யாழ் குடாநாட்டில் மீன்பிடித் தடை தொடர்பாக ஜனாதிபதியுடன் பேசியதாக தமிழ்க் கட்சிகள் பல செய்தி வெளியிட்டிருந்தது தெரிந்ததே.

தற்போது மேலும் மீன்பிடித் தடை விரிவாகியுள்ளது. யாழ் குடாநாடு முழுக்க மீன்பிடித் தடை அமுலுக்கு வந்துள்ளது.

மீன்பிடித் தடையை நீக்குமாறு வலியுறுத்த வேண்டிய தமிழ்க் கட்சிகள், மீனவர்களுக்கு நிவாரணம் வழங்கினாலே போதுமானது என்பதுபோல கோரிக்கைகள் விடுப்பது மீனவர்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

"சொந்தக் காலில் நின்று தொழில் செய்வதற்காகவே நாம் மறுபடியும் யாழ்ப்பாணத்திற்கு வந்தோம். சகல வசதிகளும் செய்து தருவதாகக் கூறியே அரசு அழைத்தது. தற்போது புலிகளைக் காரணம் காட்டி புதிய தடைகளை தம்மிஷ்டப்படி படையினர் போடுகின்றனர்.

மீன்பிடித்தலைத் தடை செய்துவிட்டு நிவாரணம் வழங்குவதால், மீன்பிடித்து நாம் சம்பாதிப்பதற்கு ஈடாகாது. நிவாரணம் அரைவயிற்றுக்குத்தான். கைநீட்டி நிவாரணம் வாங்கிக்கொண்டே இருக்கவும் நாம் விரும்பவில்லை. உழைத்து வாழவே விரும்புகிறோம்!" என்று மீனவர்கள் கூறுகின்றனர்.

மீன்பிடித் தடை அநியாயம் என்று கூறுவதற்கு முன்வராமல், நிவாரணம் மட்டும் கேட்பது, மீன்பிடித் தடை நியாயம் என்று ஏற்றுக்கொள்வது போன்றதே. இதனால் தடை நீண்டகாலம் தொடரும் என்றும் அவர்கள் கவலை தெரிவித்தனர்.

"நிவாரணம் வேண்டாம் என்று நாம் கூறவில்லை. ஆனால் மீன்பிடித் தடைக்கு அது பரிகாரமாகாது என்பதை வலியுறுத்தி, தடையைத் தளர்த்த போராடுவதற்கும் தமிழ்க் கட்சிகள் முன்வரவேண்டும்!" என்று மீனவர்கள் மேலும் தெரிவித்தனர்.

# படையினர் தடை! புலிகள் கடை!

கிழக்கில் பொருண்மிய மேம்பாடு என்று பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டு வரும் புலிகள் தங்களது தேவைக்கேற்ப தன்னிறைவு கண்டுள்ளனர் என்று புலிகளின் வசமுள்ள பகுதி மக்கள் கூறுகிறார்கள். அந்த வகையில் பாரிய அளவில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நெற்செய்கையையும், காய்கறிப் பயிர்ச்செய்கைகளையும் புலிகள் செய்து வருகின்றனர்.

பல நூற்றுக்கணக்கான மாடுகளையும் புலிகள் வைத்திருப்பதால் வேண்டியளவு பால், தயிர் என்பனவற்றையும் பெற்றுக் கொள்கின்றனர்.

அரிசி ஆலைகள், மர அரிவு ஆலைகள், செங்கல் உற்பத்தி என்பனவற்றையும் செய்து வருகின்றனர். அத்துடன் கட்டடப்பொருட்கள், மரத்தளவாடங்கள், எரிபொருள், பற்றரி என்பனவற்றுடன் தேவையான அனைத்துப் பொருட்களும் புலிகளின் கடைகளில் போதியளவு கிடைக்கின்றன.

படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள நகரப்பகுதிகளில் வாங்கமுடியாத பொருட்களைக்கூட புலிகளின் வசமுள்ள பகுதிகளில் பெறக்கூடியதாக உள்ளதென்று மக்கள் தெரிவிக்கிறார்கள்.

நிலைமை இப்படியிருக்க, புலிகளின் வசமுள்ள பகுதியிலிருந்து நகரப்பகுதிக்கு வந்து அன்றாடப் பொருட்களை வாங்கிச் செல்லும் பொதுமக்களுக்குத்தான் குறிப்பிட்ட அளவான பொருட்களைக்கொண்டு செல்லும் கட்டுப்பாடும், சில பொருட்களுக்குத் தடையும் படையினர் விதித்துள்ளனர்.

புலிகள் தமக்கு வேண்டிய அத்தியாவசியப் பொருட்கள் தொடக்கம் சகலவற்றையும் பல வழிகளில் பெற்றுக் கொள்கின்றனர். இந்த விடயம் படையினருக்கும் நன்கு தெரியும். அவ்வாறிருந்தும் ஏன் பொருட் கட்டுப்பாடு, பொருட் தடை என்பனவற்றை விதித்து அப்பாவிப் பொதுமக்களை வாட்டி வதைக்கின்றனர் என்ற கேள்வி சிந்திக்கத் தெரிந்தோரின் சிந்தனையைக் கிளறுகிறது.

மட்டக்களப்பு-வாகரை இராணுவ முகாமில் வைத்து அத்தியாவசியப் பொருட்கள் வாங்கிச் சென்றோர் விசாரிக்கப்பட்டபின் பலரின் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. வாகரையில் நிலை கொண்டுள்ள படையினருடன் சேர்ந்து செயற்பட்டு வரும் தமிழ் குழுக்களின் அட்டுழியங்கள் பொறுக்க முடியாதவை என்று அவ்வூர் வாசிகள் கூறுகிறார்கள்.

# ஜனாதிபதி கூறியது முற்றிலும் உண்மை

## "தமிழ்க் கட்சிகளே! பிதற்றுவதை நிறுத்துங்கள்!"

"இந்த நாட்டைச் சேராத சிறுபான்மையினர் தங்களுக்கான தனிநாடு ஒன்றைப் பிரித்தெடுக்க விரும்புகிறார்கள்!' என்று ஜனாதிபதி சந்திரிக்கா தென் ஆபிரிக்காவில் கூறிய கருத்து மறுதலிக்கப்பட முடியாத உண்மையாகும். இந்த நாட்டின் வரலாற்றின் அடிப்படையிலான உண்மை அதுதான்!" இவ்வாறு தேசிய ஒன்றிணைப்புக்குழு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறுபான்மைத் தமிழ் மக்கள் தங்கள் தனிநாட்டுக் கோரிக்கைக்கு அடிப்படையாக, 'தமிழர்களின் தாயகம்' என்ற கோட்பாட்டை முன்வைக்கின்றனர். ஜனாதிபதியின் கூற்று தமிழர்களின் அக்கோரிக்கைக்கே வேட்டுவைத்துவிட்டது.

ஜனாதிபதியின் பேச்சு தமிழ் மக்களுக்குப் பெரும் வேதனையை அளித்திருப்பதாக தமிழ் அரசியல்வாதிகள் சிலர் ஓலமிடுகின்றனர். அவர்கள் வேதனைப்பட்டாலும், ஜனாதிபதி அவர்கள் இந்நாட்டின் மாற்ற முடியாத வரலாற்று உண்மையையே தெரிவித்திருக்கிறார்.

தமிழ் வரலாற்று ஆசிரியர்களும் ஜனாதிபதியின் கூற்றுக்கு ஆதாரமான உண்மைகளை என்றோ வெளிப்படுத்தியுள்ளனர். தமிழ்த் தலைவர்கள், சிலர் ஜனாதிபதியின் கூற்றில் பிழைகண்டுபிடித்துப் பிதற்றுவதை விடுத்து வரலாற்று உண்மைகளை ஆய்ந்துணரட்டும்.

இவ்வாறு தேசிய ஒன்றிணைப்புக் குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அண்மையில் சிங்கள விசாரணை ஆணைக் குழு வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்ட சில அம்சங்களைப் பற்றியும் இவ்வறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

# பசளை கொண்டு செல்லத்தடை!

## புலிகளிடம் தாராளமான கையிருப்பு!

மட்டக்களப்பில் படையினரின் கண்காணிப்பின் கீழ் உள்ள பகுதியிலிருந்து புலிகளின் வசமுள்ள பகுதிகளுக்கு விவசாயிகள், முழுவதும் நைதரசன் செறிந்த யூரியாப் பசளை கொண்டு செல்லத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. யூரியாப் பசளைக்குப் பதிலாக அமோனியம் சல்பேற்றுக் கலந்த பசளையை எடுத்துச் செல்லலாம். புலிகள் வெடிமருந்துகள் செய்வதற்கு பாவிப்பர் என்று கூறியே படையினர் அவ்வாறு தடைவிதித்திருந்தனர்.

படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து வெகு சிரமத்திற்கு மத்தியிலேயே அனுமதி பெறவேண்டும். ஒரு ஏக்கருக்கு 1 1/2 அந்தர் விகிதமே பிரிகேடியர் அனுமதி வழங்குகிறார். அதுவும் பொருத்தமற்ற அமோனியம் சல்பேற்றுப் பசளை. இதனை வெகு சிரமப்பட்டு நகரப் புறத்திலிருந்து கொண்டு செல்ல வேண்டும். இந்தக் கஷ்டத்தைப் புலிகள் இப்பொழுது நீக்கியுள்ளதாக அப்பகுதி விவசாயிகள் 'முரசு'க்கு தெரிவித்தனர்.

முழுவதும் நைதரசன் செறிந்த யூரியாப் பசளையை விவசாயிகளின் காலடியிலேயே புலிகள் குறைந்த விலையில் விற்பனை செய்கின்றனராம்.

புலிகள் எங்ஙனம் இவ்வளவு பெருந்தொகையான யூரியாப் பசளையை படையினரின் தடைக்கு மத்தியில் தமது கையிருப்பில் கொண்டுள்ளனர் என்பது ஆச்சரியமாகப் பேசப்படுகிறது.

# மன்னாரில் புலிகள் தாக்கலாம்!

## படையினர் உஷார் நிலை

(மன்னார் நிருபர்)

புலிகளின் மாவீரர் தினத்தை முன்னிட்டு, மன்னார் நகரிலும், சுற்றியுள்ள பகுதிகளிலும் பாதுகாப்புப் படையினர் தம் பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பலப்படுத்தி வருகின்றனர்.

மன்னார்த்தீவுப் பகுதியிலுள்ள சகல இராணுவ, பொலிஸ் காவல் நிலையங்களும் மேலதிக படையினர் கொண்டுவரப்பட்டு உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

மழைகாலம் தற்போது ஆரம்பித்துள்ளதாலும், மாவீரர் தின வாரம் ஆரம்பமாவதாலும் எந்தவேளையிலும் எதுவும் நடைபெறலாம் என மக்கள் அஞ்சி பகல் வேளைகளிலும் வெளியில் நடமாடு வதைக் குறைத்து வருகின்றனர்.

வன்னிப் பகுதியிலிருந்து உயிலங்குளம் ஊடாக வரும் மக்களின் தொகையும் வெகுவாகக் குறைந்து காணப்படுகிறது.

மன்னார்-மதவாச்சி, மன்னார்-வவுனியா வீதிகளில் உள்ள படையினரின் முன்னரங்க காவல் நிலைகளில் உள்ள படையினரும் விழிப்பாக இருந்து வருகின்றனர். திடீர் திடீரென ரோந்து நடவடிக்கைகளும், சுற்றிவளைப்புகளும் ஆரம்பமாகியுள்ளன.

இதேவேளை இம்முறை மாவீரர் வாரம் தொடர்பான நிகழ்ச்சிகள் வன்னிப் பகுதியிலும், படையினர் புதிதாகக் கைப்பற்றி நிலை கொள்ளாத பகுதிகளிலும் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மன்னார்-மதவாச்சி நெடுஞ்சாலையில் அமைந்துள்ள படையினரின் முகாம்கள் புலிகளால் தாக்கப்படலாம் என்று கருதப்படுகிறது.

# உணவு முத்திரையில் 25 ரூபா வெட்டு

சுபீட்சத் திட்ட (சமுர்த்தி)த்தின் கீழ் உதவி பெறுவோருக்கு வழங்கப்படும் உணவு முத்திரைப் பணம் 250/= ரூபாவில் 25/= ரூபாவை சமூகப் பாதுகாப்புத் திட்டத்திற்குக் கழிக்குமாறு சகல பிரதேச செயலாளர்களுக்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

வெட்டப்படும் பணம் 25/=ரூபா சமூர்த்தி உணவு முத்திரை பெறுவோரின் சமூகப் பாதுகாப்பு நலன்களுக்காக அவரவரின் பெயரில் வரவு வைக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது ஒரு புறமிருக்க; ஏற்கனவே வறுமை நிவாரண உணவு முத்திரை பெற்றவர்களின் அதே எண்ணிக்கைக்கேற்பவே சுபீட்சத்திட்ட உணவு முத்திரைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இவர்களைவிடத் தகுதி பெற்ற மேலும் பல குடும்பங்கள் சுபீட்சத் திட்ட உணவு முத்திரை பெறாதுள்ளனர். இவர்களுக்கும் உணவு முத்திரை வழங்குவதில் பல இழுபறிகள் நிலவுவதாகப் பிரதேச செயலாளர் ஒருவர் சொன்னார்.

# தடை நீக்கம்!

கிழக்கில் தங்கள் வசமுள்ள பகுதிகளில் பக்திப் படங்களைத் தவிர ஏனைய சினிமாப் படங்களைத் திரையிடுவதற்கு கடந்த ஒரு மாதத்திற்கு முன்னர் புலிகள் தடைவிதித்திருந்தனர். ஆயினும் கடந்தவாரம் முதல் அந்தத் தடையைப் புலிகள் நீக்கி சினிமாப் படங்களைத் திரையிட அனுமதி வழங்கியுள்ளனர்.

# திருத்தவேலை இடை நிறுத்தம்!

மட்டக்களப்பில் புலிகளின் வசமுள்ள பதுளை வீதியில் உள்ள உடைந்த பாலமொன்றைத் திருத்தியமைக்கும் பணியில் வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஈடுபட்டிருந்தது. இதற்காக ஏறாவூர் தேசிய இயந்திர உபகரண நிறுவன உழவு இயந்திரம் வேலையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த வேளையில் கடந்த 02.11.98 அன்று புலிகள் இயக்கத்தினரால் அது கடத்தப்பட்டு விட்டது.

இதனால் உடைந்த பாலத்தைத் திருத்தியமைக்கும் வேலைகள் உடனடியாக இடைநிறுத்தப்பட்டு விட்டன. புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி உழவு இயந்திரத்தைத் திரும்பப் பெற பலமுறை முயற்சி செய்தும் இதுவரை பயனேதும் கிட்டவில்லை.

இதனிடையே சமீப சில நாட்களுக்கு முன்னர் ஓட்டமாவடி முஸ்லிம் ஒருவருக்குச் சொந்தமான வேன் ஒன்றைப் புலிகள் மாங்கேணியில் வைத்து பறித்துச் சென்றிருந்தனர். அந்த வேனை கடந்தவாரம் மீண்டும் உரியவரிடம் புலிகள் ஒப்படைத்து விட்டனர்.

# வெடி விபத்து – வெறும் புரளி!

மட்டக்களப்பு- கொக்கட்டிச்சோலை காட்டுப் பகுதியில் அமைந்துள்ள 'ரமணன் பேஸ்' என்ற புலிகளின் முகாமில் கடந்த 09.11.98 அன்றிரவு குண்டு பொருத்திக் கொண்டிருக்கும்போது பாரிய வெடிவிபத்து ஏற்பட்டது என்று பத்திரிகைகளிலும் வானொலியிலும் செய்தி வெளியிடப்பட்டது. அது பரீட்சித்துப் பார்த்த குண்டின் சத்தமே என்று புலிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை வன்னியில் வெடிகுண்டு தாக்குதல் பயிற்சியில் ஈடுபட்டிருந்தபோது ஏற்பட்ட விபத்தில் 7 புலிகள் பலியாகினர். 14.11.98இல் அச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.


படிப்பகம்

www.padippakam.com

## புதிய நிர்வாகிகள் தெரிவு

(திருமலை நிருபர்)

அகில இலங்கை தபால்தந்தி சேவையாளர் சங்கத்தின் திருகோணமலை மாவட்டக்கிளையின் ஆண்டுப் பொதுக்கூட்டம் பல வருடங்களுக்குப் பின்னர் கடந்த ஞாயிற்றுக்கிழமை பிரதம அஞ்சலகக் கட்டடத்தில் இடம்பெற்றது.

தலைமைச் சங்கத்தின் சார்பில் அதன் தலைவர் திரு.எச்.பி. ஆரியபாலவும் பொருளாளர் திரு.ஜே. குருப்பு'வும் கலந்து கொண்டனர். மாவட்டத்தில் பல அஞ்சலகங்களிலிருந்தும் உப அஞ்சலகங்களிலிருந்தும் பல ஊழியர்கள் கூட்டத்துக்குச் சமூகமளித்திருந்தனர்.

மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் திரு. நல்லதம்பி, பிரதி அஞ்சல் அதிபர் திரு.என். சபாரத்தினம், மேற்பார்வை உத்தியோகத்தர் திரு.வி. குமரகுரு. அஞ்சல் தொலைத்தொடர்பு உத்தியோகத்தர் சங்கத்தின் கிளைத் தலைவர் திரு.கே.ஏ.என்.நாமல்குமார ஆகியோரும் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

பின்வருவோர் நடப்பாண்டு நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.:

தலைவர்: திரு.கே. யோகராஜா.
துணைத்தலைவர்: திரு.ஏ. சுபைர்டீன்.
செயலாளர்: திரு.எம்.சந்தனம்.
இணைச் செயலாளர்: திரு.ஏ.எப்.விமலசிறி.
துணைச் செயலாளர்: திரு.கே.பி.நவரத்ன.
பொருளாளர்: திரு.எம்.ரவீந்திரநாதன்.

செயலவை உறுப்பினர்களாக திரு.கே.குமாரநாயகம், திரு.எஸ்.எச்.பாரூக், திரு.எச்.எம்.ஜயதிலக பண்டா, திரு.ஏ.எம். இஸ்மாயில், திரு.என்.மகேந்திரன் ஆகியோரும் தெரிவாயினர்.

## களக் காட்சி



காயமடைந்த சக உறுப்பினரை தோளில் தூக்கிச் செல்லும் புலிகள் இயக்க உறுப்பினர். மருந்துப் பொருட்களுக்கு அரசு தடை விதித்துள்ள போதிலும், புலிகளின் வைத்தியசாலைகள் தடங்களின்றி இயங்குகின்றன. அரசின் தடைகள் புலிகளை பாதிப்பதில்லை.

## வன்னி அவலம்

# மருத்துவர் பற்றாக்குறை

## 'கிறிஸ்டியன் எய்ட்' அபாய அறிவிப்பு

"வன்னிப்பெரு நிலப்பரப்பில் நிலவும் மருத்துவ அவலங்கள் எங்களை ஆழமாகப் பாதிக்கின்றன. இவ்வவலங்களை உடனடியாக நிறுத்துமாறு நாம் அவசரமாகக் கோரும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்," எனக் கிறிஸ்டியன் எய்ட் எனும் சர்வதேச உதவி நிறுவனத்தின் தென்கிழக்காசியப் பிரிவின் தலைவர் திரு. ஜக். ஆர்த்தி கோரியுள்ளார்.

700,000 இடம்பெயர்ந்த மக்கள் வாழும் பகுதிகளுக்கான சர்வதேச உதவி நிறுவனங்களின் நிலையம் அரசினால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் சின்னாபின்னப்படுத்தப்பட்ட இம்மக்களின் உண்மை நிலவரம் பூரணமாக வெளியே வரவில்லை என தன் அவசர அறிவிப்பில் தமிழ் மக்களின் நிலைபற்றிக் கூறியுள்ளது 'கிறிஸ்டியன் எய்ட்.'

### உத்தியோகபூர்வ மதிப்பீடு

| வன்னிக்குத் தேவைப்படும் மருத்துவ நிலையங்கள் | |
|---|---|
| 4 அடிப்படை வைத்தியசாலை | - 1 இலட்சம் மக்களுக்கு ஒன்று |
| மாவட்ட வைத்தியசாலைகள் | - 50,000 மக்களுக்கு ஒன்று |
| சிறிய வைத்தியசாலை/ மகப்பேறு நிலையம் | - 20,000 மக்களுக்கு ஒன்று |
| மருத்துவத் தாதிகள் | - 2,500 மக்களுக்கு ஒருவர் |
| மருத்துவக் கண்காணிப்பாளர் | - 8,000 மக்களுக்கு ஒருவர் |

மலேரியா, தைபோயிட் மற்றும் பல்வேறு சத்துணவு இன்மையால் ஏற்படும் நோய்கள் வன்னிப்பெரு நிலப்பரப்பில் வெகுவேகமாகப் பரவி வருவதைச் சுட்டிக்காட்டியுள்ள 'கிறிஸ்டியன் எய்ட்' தினசரி 1500 நோயாளிகளுக்கு ஒரு வைத்தியர் பார்வையிட வேண்டிய அவலச் சூழ்நிலை உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது.

சிறீலங்கா அரசின் மருத்துவத்தடை காரணமாக அத்தியாவசிய மருந்துப் பொருட்கள் தமிழ்மக்களுக்கு நிராகரிக்கப்படுவதாலும் கர்ப்பிணித் தாய்மார் கருப்பை நோய்களாலும் இரத்த சோகையினாலும் பாதிக்கப்படுவதாக 'கிறிஸ்டியன் எய்ட்' சுட்டிக்காட்டியுள்ளது. மாலைக்கண் நோய் எனப்படும் கண்பார்வை மங்கும் நோய்களுக்கான அறிகுறி விட்டமின் 'ஏ' பற்றாக்குறையால் ஏற்பட்டு வருகிறது என எச்சரிக்கப்பட்டுள்ளது.

### தற்போதைய நிலவரம்

முல்லைத்தீவு மாவட்டம்: மொத்த சனத்தொகை 233,000

| வைத்தியசாலை | தினசரி நோயாளிகள் | அதிகாரிகள் |
|---|---|---|
| மல்லாவி | 1000-2000 | 1 வைத்தியர் 2 RMP |
| புதுக்குடியிருப்பு | 1200 | 3 RMP |
| முத்தையன்கட்டு | 500 | 1 RMP |
| நட்டங்கண்டல் | 500 | 1 RMP |
| முள்ளியவளை | 400-500 | 1 RMP |

(RMP: பதவி பெற்ற உதவி மருத்துவர்கள்)

## தாக்குதல் வீடியோ?

### "இது என்ன புதுப்படமா?"

'அலைகள் ஓய்வதில்லை-2' என்றும் 'கிளிநொச்சித் தாக்குதல்' என்றும் புலிகளால் தயாரிக்கப்பட்ட வீடியோப்படப் பிரதி ஒன்றுடன், 'சண்டே லீடர்' ஆங்கில வார ஏட்டின் பாதுகாப்புத் தகவல்களைத் தொகுத்தெழுதும் ரோய் தெனிஷ் என்ற எழுத்தாளர், ஓர் ஆட்டோவில் தனது இல்லம் நோக்கிச் சென்று கொண்டிருந்தார்.

சுதந்திர சதுக்கம் செல்லும் பாதையில் வீதித்தடை முகாமில் நின்றிருந்த பொலிசார் வண்டியை மறித்துள்ளனர். இவரிடமிருந்த வீடியோ நாடாவைப் பெற்றுக் கொண்ட பொலிஸ்காரர் அதனை நுணுக்கமாக ஆராய்ந்ததுடன் ஆங்கிலத்தில் 'கிளிநொச்சி டிபாக்கிள்' என்று எழுதப்பட்டிருந்ததையும் படித்துப்பார்த்துள்ளார்.

ரோய் தெனிஷ், பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்படக்கூடும் என்று எதிர்பார்த்தார். ஆனால் வீடியோ பிரதியைக் கையில் வைத்திருந்த பொலிஸ்காரர் கேட்ட கேள்வி அவரை அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

"இது என்ன.... ஒரு புதுப்படமா?" என்பதுதான் அவருடைய கேள்வி. இவ்வினாவுக்குரிய விடையைக்கூட எதிர்பார்க்காமல் அதனை தெனிஷிடமே திருப்பிக் கொடுத்துவிட்டாராம்.

## பெயர் அழிப்பு

முரசின் செய்தியின் பயனாகவும், பொதுமக்கள் காட்டிய எதிர்ப்பினாலும் கல்முனை கோவில் வீதி மீண்டும் தன் பெயரைப் பெற்றது. ஆனால் பொலிஸார், தற்போது இந்த வீதி கல்முனை பிரதான வீதியுடன் இணையும் பகுதியில் தடை அரண் அமைத்துள்ளனர்.

வீதிப்பெயர்ப்பலகையில் காணப்பட்ட சில எழுத்துகள் சுரண்டப்பட்டு 'கோவில் வீதி' என்பது 'காவல் வீதி' என மாற்றப்பட்டுள்ளது. 'இது பழைய விடயங்களுக்கு பழிவாங்கும் நடவடிக்கையோ?' என்று இப்பகுதி மக்கள் சந்தேகிக்கின்றனர்.

'காரண பூதர்'


**ஸ்டூடியோ சாயா**

வீடியோ, போட்டோ, பிரேமிங், லேமினேஷன், டியூரோகாட்

40 1/1, காலி வீதி, வெள்ளவத்தை. தொ.பே.:594492





**மலையாள மாந்திரிகம்**

மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது, பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திற்கு சாந்தி பரிகாரம் செய்வது, பிறந்த திகதி, மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இதுதான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்றும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும் இன் நிறுவனம் வரை பதிக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.

தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது பெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி
P.K. SAAMI J.D.G.A.N&JP
SRI DURGAADEVI MANTHIRIKA
UCHCHADA PEEDAM
NO. 162, KOTAHENA STREET,
MAY FIELD ROAD, COLOMBO-13.

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
Fax-00941342464.
Tel-00941431137.
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
342463-344831

**வத்தளையில்** புதிய கணனி வகுப்புகள் (A/L முடித்த மாணவர்களுக்காகவும்) (Page Maker, Corel Draw, MS Excel, MS Access, MS Word, Word Perfect, Lotus 1-2-3, dBase III+, Diploma in Desktop Publishing, Diploma in Windows) திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாட்களில் ஆரம்பமாகின்றன. தமிழ் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன. அத்துடன் Type Setting செய்து கொடுக்கப்படும்.

D.S. COMPUTER STUDIES 6A, HEKITTA ROAD, WATTALA. TEL: 075-349247

**விளம்பரப் பகுதி**

**தெய்வீக மருத்துவம்**

சர்வதேச சமூக தெய்வீக சேவை

CHARITY REGED NO. HA\04\BT\219

NTSF துயர் தீர்க்குமிடம்

வாழ்க்கையில் கிரக மற்றும் வேறு தீவினைகளால், தீராத மனத்தாக்கம், காதல், கல்வி, தொழில், விவாகத்தடைகள், கணவன்-மனைவி சந்தோஷமின்மை, வெளிநாட்டுப் பிரயாணத்தடைகள் என்பவற்றிற்கும், வேறு எவ்வித பிரச்சனைகளானாலும் நீங்கி மகிழ்ச்சியாக வாழ இறைவனால் சித்தர்களுக்கு போதிக்கப்பட்ட புனித புராதன தீங்கற்ற தெய்வீக மருத்துவத்தினால் நிவர்த்தியளித்து வருகின்றோம். காண்டமெனும் சோதிடத்தினால் உங்கள் பலன்களையும் தெரிந்து கொள்ளலாம்.

ஆயுர்வேத மருத்துவர் பாலுசோதிடர் (SAMP) "நேரில் வரமுடியாதவர்கள், வெளிநாட்டவர்கள் தம் பிரச்சனைகளை எழுதினால் கடல் கடந்து உடன் பயன்தரும் தெய்வீக மருத்துப் பொருட்களை தபால்மூலம் பெற்று தம் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம். தபால் செலவுகளை அனுப்புபவர்களின் விடயங்கள் முன்னுரிமை அடிப்படையில் கவனிக்கப்படும்."

தெய்வீக சக்தி நிலையம்
கல்லடி-அரசவிடுதி வீதி,
மட்டக்களப்பு.

THEIVEEGAM SRI LANKA,
HEAD OFFICE
BATTICALOA, SRI LANKA.
T.PHONE: 065-24825

"வாழ்வினிருளை நீக்கி ஒளியையேற்றுவோம்." - "DISPEL DARKNESS IN LIFE LET LIGHT SHINE"

**ஊழைச்சதையைக் குறைக்க அரிய சந்தர்ப்பம்**

தேவையற்ற சதையை-உடற்பருமனைக் குறைக்க மருந்துகளோ அப்பியாசமோ இன்றி தகுந்த வைத்தியரினால் சிகிச்சை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இரு வாரங்களில் பயன் பெறலாம். தொடர்பு கொள்க.

நிர்வாகி
மெடி கிளினிக் வெள்ளவத்தை.
தொலைபேசி: 593959

**காண்டம்**

முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை

ரிஷி. S.மணி

மூலம் அறிய வாருங்கள் வெளிநாட்டிலுள்ளவர்களும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

S. MANI
144 2/1, காலி வீதி,
வெள்ளவத்தை,
கொழும்பு-6.
T.P:- 586218

**New Victors**



பழுது பார்க்கும் இடம்

நியூ விக்ரஸ்

40 1/3, காலி வீதி,
(அலெக்சான்ட்ரா வீதிக்கு அருகில்)
வெள்ளவத்தை.


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 30.03.1975 — இறப்பு 23.11.1996



### கனகரத்தினம் துஷ்யந்தன்

அன்பின் திருவுருவாய் பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய் எங்கள் உள்ளங்களில் வாழ்ந்து வரும் எம் மகனே! வருடம் இரண்டு சென்றாலும் நீர் எங்கள் இதயத்தில் இருந்து அகலமாட்டீர்! அன்னையை விட்டுப்பிரிந்து, சகோதர சகோதரியை இழந்து, என் முகம் பார்க்க வந்தபோது எங்கிருந்தோ வந்த அரக்கன் உம்மை ஆகாயத்தில் பலி எடுத்தான். இதை இன்று நினைத்தாலும் என் மனம் துடியாய்த் துடிக்கின்றது என் அன்பு மகனே!

உமது ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கும் உன் அன்பு அப்பா, அம்மா, தம்பி திலீபன், தம்பி சங்கர், தங்கை துசா, அப்பாவின் அன்புச் சகோதர சகோதரிகளின் குடும்பத்தினர்-பிள்ளைகள், அம்மாவின் அன்புச் சகோதர சகோதரிகளின் குடும்பத்தினர்-பிள்ளைகள் மற்றும் கொலின் அன்ரி குடும்பத்தினர் மற்றும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள்.

தகவல்: கனகரத்தினம் (அப்பா) சுவிஸ்.


**மனோதத்துவ வைத்தியம்**

வவுனியாவிலும் சந்திக்கலாம்

இளைஞர்களே! சக்தி இழந்து மெலிந்து, நித்திரையின்மை, பயம் நடுக்கம், ஞாபக மறதி, தாழ்வு மனப்பான்மை ஏற்படக்காரணமான தவறுகளை நிறுத்தி எதிர்காலம் பிரகாசிக்க பிரபல மனோதத்துவ நிபுணர் DR.P.ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்.

SEXUAL DISORDERS (தாம்பத்திய கோளாறுகள்)

தாம்பத்திய கோளாறுகளுக்கு நோயும் காரணமானாலும் 85% தாழ்வு மனப்பான்மையே காரணமாகும். என்பதை 90 நிமிடத்தில், நான் வீரியம் உள்ள ஆண்மகனாகி விட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்தே பலம் பெறப்படும்.

வெளிநாட்டில் வசிப்போருக்குவிஷேட ஏற்பாடுகள்

எந்தவித தாம்பத்திய பாதிப்புனாலும் தயக்கமின்றி எழுதவும். உமது கேள்விகளுக்கு விரிவான பதில் தந்தபின் முடியாதவன், இயலாதவன் என்ற தாழ்வு மனப்பான்மையை மனோதத்துவ சிகிச்சை பதிவு நாடா மூலமும், உடல் பாதிப்பிற்கு நல்ல மூலிகை மருந்தும் பெற்று தாம்பத்திய குறைகளை முற்றாக நீங்கிய ஆண்மகனாகுங்கள். (அந்தரங்கம் உறுதியாக பேணப்படும்) பதில் பெற முத்திரை செலவு அனுப்பவும்.

மட்டக்களப்பு விலாசத்திற்கு மட்டும் கடிதத் தொடர்பு கொள்ளவும்

நீரிழிவு நோய் முற்றாக சுகமாக்கலாம். மனநோய்கள், தாழ்வு மனப்பான்மை 'ஹிஸ்டீரியா' என்பனவற்றுக்கும் மனோதத்துவ சிகிச்சை உண்டு. ஆஸ்துமா, தலையிடி, வாதம், வெள்ளை போதல், கிரந்திநோய், குழந்தை பேறு இன்மை, முடி உதிர்தல் எல்லாவற்றுக்கும் மருந்துகள் உண்டு.

கொழும்பில் நவம்பர் 22 முதல் 30 வரை

DR.P.ARUMUGAM S.A.M.P. REG. 9492
BEAUTY LODGE, 67A, WOLFENDHAL STREET, COLOMBO-13
T.P. 338165, 338166 (5 லாம்புச்சந்தியில் இருந்து 100 யார் தூரத்தில் உம்பிச்சி பிளேஸ் பள்ளி வாசலுக்கு முன்னால் உள்ளது) (ஆட்டுப்பட்டித் தெரு)
கொழும்பு நாட்களில் மட்டும் செல்டெல் No-072-609388

வவுனியாவில் டிசம்பர் 12,13,14 திகதிகளில்

(Vanni Inn) 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோவில் ஒழுங்கை வவுனியாவில் சந்திக்கலாம். T.P.024-22074

கல்முனையில் டிசம்பர் 5,6 திகதிகளில்

T.M.M. பாமஸி, கல்முனை. T.P. - 067- 29329

RESIDENT T.P:- 065-24019

கடிதத் தொடர்பு:
DR.P.ARUMUGAM S.A.M.P.,
NO.33. Tissa Weerasingam sq.,
Boundary Road, Batticaloa. SRI LANKA.

**உடன் விற்பனைக்கு**

புத்தம்புதிய கொத்ரேஜ் தமிழ் எலெக்ரோனிக் ஸ்கிரிப்ரா தட்டச்சு இயந்திரம்
(Godrej Tamil Electronic Typewriter. model- Scripta Single Line with 16 KB memory)
மற்றும் ஒலிம்பியா எலெக்ரோனிக் தட்டச்சு இயந்திரம் (Olympia-Compact 5DM) இரண்டும் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு தொலைபேசி எண்: 826875

O/L TAMIL
Mr. K.KAJAROOBAN
C.B.I.VENUS VAVUNIYA
ST. ANTONEY'S

ST. ANTONEY'S
C.B.I VENUS
1999


## இரண்டாவது ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் தில்லையம்பலம் மார்க்கண்டு

கட்டுவன் தெற்கு, ஏழாலை.

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 09.08.1935 | 21.11.1996 |

எம்மை விட்டுப் பிரிந்து
இரண்டாண்டு சென்றாலும்—
எம் நினைவுகள் என்றும்
உங்களோடு...
என்றும் உங்கள் ஆத்மா
சாந்தியடைய எல்லாம் வல்ல
எம் இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

தகவல்:
திருமதி சரஸ்வதி மார்க்கண்டு (மனைவி)
4ம் வட்டாரம்,
புங்குடுதீவு.

இங்ஙனம்,
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.



படிப்பகம்

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

# வட்டமடித்த விமானம் வான்மார்க்க குழப்பங்கள்

விடுதலைப் புலிகளிடம் ஹெலிக் கொப்டர் ஒன்றும், சிறியரக விமானம் ஒன்றும் இருப்பதாக 'முரசு' நூறு வீதம் ஊர்ஜிதப்படுத்தி செய்தி வெளியிட்டிருந்தது.

கடந்த 13.11.98 அன்று யாழ் குடாநாட்டின் தீவுப்பகுதிகளுக்கு மேலாக சிறியரக விமானம் ஒன்று வட்டமிட்டுவிட்டு சென்றிருக்கிறது.

நள்ளிரவு 12 மணியளவில் விமானம் ஒன்று பறக்கும் சத்தம் கேட்டிருக்கிறது. இருளில் விமானம் நன்கு தெரியாத போதும், சிகப்பு லைட் வெளிச்சம் ஒன்று விமானத்தில் இருந்து தெரிந்ததாக கடற்படை வட்டாரம் கூறியிருக்கிறது.

இதனையடுத்து தீவுப்பகுதி உட்பட யாழ் குடாநாடெங்கும் படைத்தரப்பு உஷாராக இருந்திருக்கிறது. விமான எதிர்ப்பு துப்பாக்கிகளும் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தன.

மீண்டும் அதிகாலை மூன்று மணியளவில் அதே விமானம் தீவுப்பகுதிகளுக்கு மேலாக பறந்து வட்டமடித்து செல்ல, கடற்படையினரின் துப்பாக்கிகள் வானை நோக்கி வேட்டுக்களை தீர்த்தன.

தயாராக இருப்பார்கள் என்று எதிர்பார்த்தே வந்த விமானம் துப்பாக்கிகளின் இலக்கில் சிக்காமல் பறந்து போய்விட்டது.





தாம் சுட்டது பட்டு விமானம் வீழ்ந்திருக்குமோ என்ற சந்தேகத்தில் கடற்படையினர் சிறிது தூரம் தேடிப்பார்த்ததாகவும் தகவல்.

முன்னர் வற்றாப்பளை அம்மன் கோவில் முன்பாக புலிகளால் வெள்ளோட்டம் விடப்பட்டது ஹெலிகொப்டர். தீவுப்பகுதிகளுக்கு மேலாக பறந்திருப்பது சிறியரக விமானம்.

ஒத்திகை பார்த்திருக்கிறார்கள் புலிகள் என்று சந்தேகிக்கப்படுகிறது.

புலிகளிடம் ஹெலி இருக்கிறது என்பதை பாதுகாப்பு தரப்பே ஒப்புக்கொண்டிருக்கிறது. அதன்பின்னர் பிரதி பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அநுருத்த ரத்வத்தை தடாலடியாக அதனை மறுத்து சவால் விட்டிருந்தார்.

'விமானம் இருந்தால் புலிகள் அதனை நிரூபித்து காட்டட்டும்' என்றும், புலிகளிடம் ஹெலியும் கிடையாது ஒன்றும் கிடையாது, கிலி ஏற்படுத்தும்பிரசாரம்தான் நடக்கிறது' என்று ஜெனரல் ரத்வத்தை கூறியிருந்தார்.

தம்மிடம் ஹெலி இருப்பதாகவோ, விமானம் இருப்பதாகவோ எக்கட்டத்திலும் புலிகள் தாங்களாகக் கூறவேயில்லை.

புலிகளிடம் ஹெலி இருக்கிறது என்ற சந்தேகத்தை முதன் முதலில் வெளியிட்டதே படைத்தரப்புத்தான். பின்னர் புலிகளின் ஹெலி பறந்ததை தமது கடற்படை கப்பலில் இருந்த ராடரில் பார்த்ததாக உறுதிப்படுத்தியதும் படைத்தரப்பினர்தான்.

சமீபத்தில் தீவுப்பகுதியில் புலிகளின் சிறியரக விமானம் பறந்ததாக ஆங்கில, சிங்கள பத்திரிகைகளுக்கு முதலில் தகவல்

அச் செய்தியை கூறியதே படைத்தரப்புத்தான். அதனைத்தான் செய்தி நிறுவனங்கள் தணிக்கைக்கு கொடுத்து எடுத்து வெளியிட்டன.

"ரூபவாஹினி பொய் கூறுகிறது. டோரா மூழ்கவேயில்லை" என்று ஜெனரல் ரத்வத்தை அதிரடியாக அறிவிப்பு செய்திருந்தார்.

தமது தரப்பு கூறும் தகவல்களை தாமே மறுத்துவிட்டு, அத் தகவல்களை புலித் தகவல்களாகவோ, அல்லது வேறு யாரோ கூறிய தகவல்களாக விபரிப்பதும் இப்போது அடிக்கடி நடக்கிறது.

புலிகளின் ஹெலி மற்றும் விமானம் பற்றிய தகவல்கள் கிலியை ஏற்படுத்தி வருவது உண்மை.

தம்மிடம் ஹெலி இருப்பதை புலிகள் நிரூபிக்கட்டும் என்று விடப்பட்ட சவாலுக்கு புலிகள் பதிலடி கொடுக்கும் ஆயத்தங்கள் ஆரம்பமாகிவிட்டதோ? என்ற சந்தேகமும் எழுந்திருக்கிறது.

புலிகள் வான் மார்க்கமாக தாக்குதல் நடத்துவதற்கு முன்பே, வான் தாக்குதலை எதிர்பார்த்து படைத்தரப்பின் கண்காணிப்பு சக்தியில் பாதி கரைந்து போய்விடும்.

புலிகளிடமும் வான்படை இருப்பதால் நிறையக் குழப்பங்களும் ஏற்பட இடமிருக்கிறது.

ஏற்கனவே வெளிநாட்டு பயணிகள் விமானம் ஒன்றை புலிகளின் விமானம் என்று நினைத்து வடக்கில் உள்ள படைமுகாம்கள் உட்பட நாடெங்குமே கேந்திர நிலைகள் உஷார் படுத்தப்பட்டன.

நல்லவேளையாக அவசரப்பட்டு அதனை சுட்டு வீழ்த்தாமல் விட்டனர். பின்னர்தான் கொடுத்ததும் படைத்தரப்பினர்தான். கண்டதும் அவர்கள். விண்டதும் அவர்கள். சுட்டுப் பார்த்ததும் அவர்கள்.

எனவே, அமைச்சர் ரத்வத்தையின் கூற்றுப்படி பார்த்தால் படைத்தரப்புத்தான் கிலி ஏற்படுத்தும் பிரசாரத்தை நடத்துவதாக அர்த்தமாகிறது.

சமீபத்தில் முல்லைக் கடலில் நடைபெற்ற கடற்சமரில் டோரா ஒன்று கடலில் மூழ்கியது. அதிலிருந்த ஆயுதங்களை கைப்பற்றிய புலிகள் கட்டி இழுத்துச் செல்லும்போது இடைநடுவே மூழ்கிப்போனது.

டோரா கடலில் மூழ்கிய செய்தியை அரச தகவல் தொடர்பு சாதனங்கள் உட்பட சகல செய்தி நிறுவனங்களும் வெளியிட்டன. அச் செய்தி தணிக்கைக்கு பொறுப்பான இராணுவ அதிகாரியாலும் உறுதி செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்ட செய்தியாகும்.

அது வெளிநாட்டு விமானம் என்று தெரிய வந்தது.

தமது தரப்பு ஹெலிகள், விமானங்களைக் கூட இனிமேல் படைத்தரப்பு சந்தேகக் கண்கொண்டுதான் நோக்க வேண்டியிருக்கும்.

அதுவும் சண்டை நடந்து கொண்டிருக்கும் போது தமது உதவிக்கு வரும் விமானப்படை ஹெலிகளைக்கூட தவறுதலாக குறிவைக்கும் இசகு பிசகான குழப்பங்களும் ஏற்படலாம்.

விமானப்படை விமானங்கள், ஹெலிகள் மட்டுமன்றி, வெளிநாட்டு விமானங்களும் வடக்கு-கிழக்கு வான்பரப்பால் பறப்பில் ஈடுபடுவதால், விமானம், ஹெலி எதனையும் கண்டதும் சுட்டு வீழ்த்திவிட முடியாது.

உரிய இடங்களுடன் தொடர்பு கொண்டு உறுதிப்படுத்திய பின்னர்தான் சுடவேண்டும்.

விமானப் படைத்தளத்தில் இருந்து புறப்படும் விமானங்களோ, ஹெலிகளோ குறிப்பிட்ட முகாம்களுக்கு தகவல் கொடுத்த பின்னரே புறப்படும். இத்தகைய பல்வேறு ஏற்பாடுகள் இருந்தாலும்கூட நெருக்கடியான தருணங்களிலோ, சண்டை நேரங்களிலோ குழப்பங்கள் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது.

இத்தகைய குழப்பங்கள் புலிகளது வான் படையைவிட அரச வான் படைக்கே பாதகமாக அமைந்துவிடலாம்.

புலிகளது மாவீரர் தினத்தை முன்னிட்டு யாழ் குடாநாடு எங்கும் கடலில் தடை போடப்பட்டுள்ளது.

கடல் மார்க்கமாக புலிகள் வந்து தரையிறங்கலாம் என்று கருதியே தடை என்கிறார்கள்.

வான்மூல அச்சுறுத்தலுக்கு எப்படி தடை போடப்போகின்றனர்?

அரச விமானப்படை விமானங்கள் தவிர, வெளிநாட்டு விமானங்கள் எதுவும் வடக்கு-கிழக்கு வான் பரப்பில் பறக்கக்கூடாது என்று தடைவிதிக்க வேண்டும்.

அது கஷ்டம். அப்படிச் செய்தால் தனது இயலாமையை அரசு உலகுக்கு பிரகடனம் செய்வது போலாகிவிடும்.

எனவே புலிகளது வான் மார்க்க அச்சுறுத்தல் என்பது படைத்தரப்புக்கு தினமும் தலையிடிதான்.

•••

## யுத்தத்தை ஒன்றிணைத்து முன்னெடுக்கும் ஜனாதிபதியின் திட்டத்தில் ஆளுநர் நியமணம் ஒரு கட்டம்!

**வ**டக்கு-கிழக்கில் புதிய ஆளுநராக தமிழர் ஒருவர் நியமிக்கப்படலாம் என்று சூழ்நிலைக்கு புறம்பாக ஆருடங்கள் கூறப்பட்டன.

சிங்கள இனத்தவரே நியமிக்கப்படுவர் என்று முரசத்தில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

வடக்கு-கிழக்கு தொடர்பாக அரசு எடுக்கும் எத்தகைய முடிவும் இராணுவத் தராசில் எடைபோடப்பட்டு, யுத்த நலனுக்கு சாதகமாகவே எடுக்கப்படும்.

புதிய ஆளுநர் நியமனமும் அவ்வாறுதான் செய்யப்பட்டுள்ளது.

'பட்ஜெட்டில்' இராணுவத் தீர்வுக்கான பிடிவாதமான போக்கு பளிச்சென்று தெரிகிறது.

அதே சூட்டோடு இராணுவ உயரதிகாரி ஒருவர் வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநராக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இராணுவ ஆட்சி நிலவும் பகுதிக்கு எவ்வாறான ஆளுநர் பொருத்தமாக இருப்பார் என்பதை கண்டறிந்து, அதற்கேற்ப ஆளுநர் தெரிவாகியுள்ளார்.

இந்த நியமனத்திற்கு சில நாட்கள் முன்னர்தான் புளொட், ஈ.பி.ஆர்.எல்.எ.ப்., ஈ.பி.டி.பி. ஆகிய கட்சிகள் ஜனாதிபதியை சந்தித்திருந்தன.

மேற்படி நியமனம் தொடர்பாக அவர்களிடம் ஜனாதிபதி மூச்சே விடவில்லை. கேட்டால் மறுப்பார்கள். செய்து முடித்தால் எதிர்க்கமாட்டார்கள். வேண்டுமானால் ஒரு அறிக்கை வரும். அவ்வளவுதான் என்று எடைபோட்டு வைத்திருக்கிறார்.

ஏற்கனவே ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் நளின் செனவிரத்ன ஆளுநராக நியமிக்கப்பட்டிருந்தார். அவரும் இராணுவ உயரதிகாரியாக இருந்தவர்தான். ஆனால் ஆளுநராக நியமிக்கப்படுவதற்கு நீண்டகாலம் முன்னரே அவர் பணியில் இருந்து ஒய்வு பெற்றிருந்தார்.

ஆனால், தற்போதைய ஆளுநர் அசோகா ஜெயவர்த்தனா விடயம் அப்படியானதல்ல.

ஆளுநராக நியமிக்கப்படுவதற்கு சில வாரங்கள் முன்புதான் யாழ் மாவட்ட இராணுவ பொறுப்பதிகாரியாக அவரை ஜனாதிபதி நியமித்திருந்தார்.

இராணுவத் தளபதி ஜெனரல் தலுவத்த ஓய்வு பெற்றதும் அடுத்த தளபதியாக வரக்கூடிய ஒருவராகவும் அவர் இருந்தார்.

வயது ஒரு பிரச்சனையல்ல. அரசாங்கம் பதவிக் காலத்தை நீடித்துக்கொண்டே போகலாம். பல படை உயரதிகாரிகள் அவ்வாறு நீடிப்பில்தான் உள்ளனர்.

ஆகையினால், ஒரு விஷயம் மிக உறுதியாகத் தெரிகிறது. வடக்கு-கிழக்கு ஆளுநராக இராணுவத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவரைத்தான் நியமிக்க வேண்டும் என்பதற்காகவே, அவரை பணியில் இருந்து ஓய்வுபெறச் செய்துவிட்டு, உடனடியாக ஆளுநர் பதவி கொடுக்கப்பட்டுள்ளது.

சமகால இராணுவ அதிகாரிகள், படையினர் ஆகியோருடன் பரிச்சயம் உள்ள, நல்லெண்ணம் பெற்ற ஒருவர்தான் தற்போதைய யுத்த சூழ்நிலையில் ஆளுநராக இருக்க தகுந்தவர் என்று ஜனாதிபதி கருதியிருக்கிறார். அதனால் அசோகா ஜெயவர்த்தனாவை ஆளுநராக நியமித்திருக்கிறார்.

யுத்தத்தை முன்னெடுப்பதற்கு கூட்டுப் படைத் தலைமை அவசியம் என்பதே ஜனாதிபதியின் கருத்து என்றும், அதற்கேற்ற ஒன்றிணைப்பை உருவாக்க திட்டமிட்டு வருகிறார் என்றும் செய்திகள் வெளியாகி இருந்தன.

யுத்தத்தை ஒன்றிணைந்த முறையில் முன்னெடுக்க உதவும் விதமாகவே ஆளுநரும் படை அதிகாரியாக அமர்த்தப்பட்டுள்ளார்.

வடக்கு-கிழக்கில் சிவில் நிர்வாகம் என்ற வெள்ளையடிப்புக்கு பாதகம் ஏற்படுமே என்று கூட அரசு தயங்கவில்லை.

தமிழ் பேசும் மக்கள் இந்த நியமனம் தொடர்பாக எத்தகைய அபிப்பிராயம் கொள்வார்கள் என்றுகூட அரசு கவலைப்படவில்லை.

நாட்கள் நெருங்குகின்றன. இந்த ஆண்டு பூர்த்தியாகப் போகிறது. மாகாண சபைத் தேர்தல் காலவரையறை கைக்கெட்டும் தூரத்தில் நிற்கிறது. அப்படியே அடுத்தடுத்து தேர்தல்கள் எட்டிப் பார்க்கின்றன.

தயக்கங்கள் யாவற்றையும் துறந்துவிட்டு போரை ஒரு முகமாக முன்னெடுத்து வெற்றிக் கொடியை நாட்டியாக வேண்டும் என்று ஜனாதிபதியே முடிவு செய்துவிட்டார்.

இந்த முடிவுகளால் தமிழ் பேசும் மக்களது வாக்கு வங்கிகள் பறிபோகும் என்பது அரசுக்கு தெரியும். ஆனால் இது இறால் போட்டு சுறா பிடிப்பது மாதிரியானது.

யுத்தத்தில் வென்று கொடி பறக்கவிட்டால், தமிழ் பேசும் வாக்கு வங்கிகளின் இழப்பையும் நிரப்பக்கூடியளவுக்கு சிங்கள வாக்கு வங்கிகளை கவர்ந்து இழுத்துக் கொள்ளலாம்.

தமிழர்கள் பற்றிக் கூறிய கருத்து தொடர்பாக நாடெங்கும் சர்ச்சை பல நடந்தும்கூட பிடிவாதமாக மௌனம் அனுஷ்டித்தார் ஜனாதிபதி. தமிழ் மக்கள் தன்னைப்பற்றி என்ன நினைப்பார்கள் என்பதையிட்டு கவலையடையும் கட்டத்தை அரசு கடந்துவிட்டது என்பதற்கு இதனை விட வேறென்ன உதாரணம் வேண்டிக் கிடக்கிறது.

மேஜர் ஜெனரல் அசோகா ஜெயவர்த்தனா ஜனாதிபதியின் மிகுந்த நம்பிக்கை பெற்ற ஒருவர்.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சருடனேயே முரண்பட்டவர் என்றும் தகவல்.


தனது நம்பகமான ஒருவரை ஜனாதிபதி ஆளுநராக நியமித்திருப்பதால், காமினி பொன்சேகா கூறியதுபோல, 'ஒதுக்கப்படும் நிதிகள் வடக்கு-கிழக்கு வந்து சேருவதில்லை.' என்று கூறி அரசை தர்மசங்கடப்படுத்தும் ஆளுநராகவும் இருக்கமாட்டார்.

அரசுக்கு பொல்லாத நிதிப் பற்றாக்குறை. மறுபுறம் போரை நடத்தியாக வேண்டிய அரசியல் தேவை. இந்நிலையில் வடக்கு-கிழக்கு அபிவிருத்தி, புனரமைப்பு பற்றியும் ஆளுநர் நியமனத்தோடு சேர்த்து கூறப்பட்டுள்ளது என்பதையும் கவனிக்க வேண்டும்.

ஆக, சகல பாதைகளும் ரோமாபுரிக்கே என்பதுபோல, சகல முடிவுகளும் போரின் வெற்றிக்கே.

## நாரதர்

# அதிரடி அய்யாத்துரை



***கிளிநொச்சி சமர்*** வீடியோவை அதிகாரமுள்ள சக்தியானவரும் போட்டுப் பார்த்ததாக தகவல். அது ஒரு புறமிருக்க தூதரகங்கள் சிலவற்றில் கசட்டை பார்த்தவர்கள் பிரமித்துப்போய் இருக்கிறார்களாம்.

***அதிகாரத்தரப்பாருக்கு*** எதிராக வாக்களிக்க கூட்டான கட்சி எடுத்த முடிவு பாராட்டப்படவேண்டியதுதான். ஆனால் முடிவை அறிவித்த கையோடு அதிகார சக்தியை தனியாகச் சந்தித்த மர்மம் என்ன? இந்தியாவில் உள்ள தலைவர் தவிர கூட்டான அணி மொத்தமும் சக்தியை தரிசிக்கப்போய் காத்துக்கிடந்ததாம். 'குறையாக நினைக்க வேண்டாம், நிர்ப்பந்தம்' என்று கொள்கை விளக்கம் கொடுத்து கூல் பண்ணப் போச்சினமோ? எப்படியிருந்தாலும் வெளியுலகுக்கு அது தெரியாது தானே? தமிழ்க் கட்சிகள் எதிர்க்கினம் என்றதுதானே தெரியும். அதற்காக கூட்டான கட்சியின் நிலைப்பாட்டை வரவேற்கலாம். ஆனாலும் கூட்டான கட்சியின் நிலைமான மற்றும் ஞான சம்பந்தமான பிரமுகர்களிடம் உஷாராகத்தான் இருக்கவேண்டும்.

***"தமிழ் மக்கள்*** இந்த நாட்டுக்கு சொந்தமானவர்களல்ல" என்று எந்த நழுவலும், வழுவலும் இல்லாமல் சக்தியானவர் உறுதியாக கூறியதை ரி.என்.எல். தொலைக்காட்சியில் கண்டோம். தொலைக் காட்சியில் தோன்றிய ஒருவர் பேரின அபிமானி. அப் பேட்டியை ஆதரித்து 'தமிழர்களுக்கு நாடு சொந்தமில்லை என்பது நூற்றுக்கு நூறுசரி' என்று கூறியவுடன் காதாரக் கேட்டோம். இதன்பின்னரும் சில 'டமில்' கட்சிகளுக்கு காதும், கண்ணும் திறக்காதது ஆச்சரியமல்ல. அந்த கசட மட்டும் ஆதாரமாக இல்லையானால், சக்தியானவர் சார்பாக அக்கட்சிகளே அறிக்கையும் விட்டுருப்பர். ஆதாரம் இருப்பது தெரிந்ததால் கப்சிப்.

***பாரிசில் ரெண்டு*** எழுத்தாருடன் தொடர்புடைய பத்திரிகை ஒன்று கொழும்பில் சங்கதியாருடன் தொடர்பு கொண்டதாம். அது யார் பத்திரிகை என்பது சங்கதியண்ணருக்குத் தெரியாதாம். 'சக்தியானவரின் பேட்டி பற்றி குமாரர் பொய் கூறுகிறார்' என்று அடித்துக் கூறிவிட்டாராம் அண்ணர். அதெல்லாம் கிடக்க பேட்டி கொடுத்தவரே கவலைப்படாதபோது அதை மறுப்பதில் இந்த டமில் கட்சிகள் காட்டும் அக்கறைக்கு என்ன பெயர்? சமீபத்தில் தன்னை மீட் பண்ணிய தமிழ்க் கட்சி தலைவர் ஒருவரிடம், "அப்பேட்டிக் கருத்தில் மாற்றம் இல்லை!" என்று ஒரே போடாக போடப்பட்டதாகவும் தகவல்.

***வடக்கு-கிழக்கு*** ஆளுநர் நியமனத்தை கழக மாணிக்கம் வரவேற்றிருக்கிறார். மறுதரப்பு கண்டித்திருக்கிறது. கழகத்திற்குள் இரண்டு அணிகள் உள்ளன என்பது வெள்ளிடை மலை. கருத்து மோதல்களில் கருவிகள் எட்டிப் பார்க்காமல் இருந்தால் போதும்.

***ரெண்டு எழுத்துத்*** தலைவர் தொடர்பாக இலங்கை அரச வானொலி அலைவரிசையில் கேட்டது இது: "அவர் விளம்பரம் விரும்பாதவர். விளம்பரம் விரும்புபவராக இருந்தால் பத்திரிகையாளர்களை அடிக்கடி சந்திக்க பல வாய்ப்புக்கள் இருக்கின்றன. அவர் தவிர்த்தே வருகிறார். தனது கொள்கையில் பிடிவாதமான ஒருவராகவே அவர் இருக்கிறார்." என்று தொடர்ந்தது அந்த விவரிப்பு. என்ன, ஆச்சரியமாக இருக்கிறதா? அரச வானொலி அலைவரிசையில் பி.பி.சி. ஊடாக காதில் விழுந்த விவரிப்புத்தான் அது.

***'புகைத்தல் உடல்*** நலத்துக்கு பகையாகலாம்' என்று எழுதியிருக்குது. போர் நலத்துக்கு புகைத்தல் நட்பாகலாம் என்றுதான் போடவேண்டும். புகைத்தலும், குடித்தலும் இல்லையானால், குண்டு விழும், மற்றும் துண்டு விழும் தொகைகளை எதைப்போட்டு நிரப்புவதாம்? இந்த நாட்டின் உண்மையான 'குடிமக்கள்' யார் என்று இப்ப புரியுதோ?! போர் தொடரவேண்டுமானால் மூன்று கடமைகளைச் செய்ய வேண்டும். பசித்திரு - புகைத்திரு - குடித்திரு.

***விலையை ஏற்றினாலும்*** போராடாதவர்கள் 'குடிமக்கள்' மட்டும்தான். அதுபற்றி பெரும் குடிமகன் ஒருத்தர் சொன்ன விளக்கத்தை கேட்க புல்லரிச்சுப் போட்டுது. "எலக்ஷன் வரட்டும். போத்தல் போத்தலாக கலெக்ஷன் செய்தால் கையும் கணக்கும் சரியாய்ப் போயிடும்!" என்றார்.

***யாழ்ப்பாணத்தில்*** முந்தி ஒரு காலத்தில் 'பறக்கும்தட்டு' திரிவதாக கதை பரவியிருந்தது. சிறுவர்கள் அடிக்கடி வானத்தைப் பார்த்துக் கொண்டு திரிவினம். இப்போதும் யாழ்ப்பாணத்தில் வானம் பார்க்கினம். சிறுவர்களல்ல சீருடையினர்.

***யாழில் பெண்*** சீருடையினருக்கும் ஆண் சீருடையினருக்கும் இடையே முன்றெழுத்து விவகாரமாம். அதனால் பெண் சீருடையினர் காயப்போட்ட ஆடைகள் மாயமாம். இவ் விவகாரம் மேலிடம் வரை சென்றுள்ளதாம். கோபியரின் ஆடைகளை கண்ணன் திருடியது புராணம். அது தற்போதைய கட்டத்தில் தக்க உதாரணம்.

***இவ்வாரப் பொன்மொழி:***

"உன்னிடம்
இல்லாததைப் பற்றி
கவலைப்படுவது—
உன்னிடம்
உள்ளதை
வீணடிப்பதாகும்!"



படிப்பகம்

www.padippakam.com

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

அரசியல் தொடர் அற்புதன் எழுதுவது

# ஜே.ஆர்., பிரேமா, இந்தியப்படை கற்றுக்கொண்ட பாடங்கள்



இந்தியாவின் பழம்பெரும் ஆங்கில தினசரி 'இந்து.' இந்து குடும்பத்தைச் சேர்ந்தவர் ராம்.

இலங்கை இனப்பிரச்சனையில் தமிழ் இடதுசாரி அமைப்புக்களுக்கு ராம் ஆரம்பத்தில் ஆதரவாக இருந்தார்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பினருடன் பேராசிரியர் சிவதம்பி ஊடாக இந்து ராமுக்கு அறிமுகம் ஏற்பட்டது.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தைச் சேர்ந்த மகேஸ்வரராஜா, ரமேஷ், ஆகியோரை இந்து ராமிடம் அறிமுகம் செய்து வைத்தார் பேராசிரியர் சிவத்தம்பி. பின்னர் பத்மநாபா, வரதராஜப் பெருமாள் ஆகியோருடன் ராமுக்கு நல்லுறவு ஏற்பட்டது.

சோவியத் சார்பு நிலைப்பாடு,

கப்பலும் தரை தட்டியது. ஒரு சிரேஷ்ட இந்திய ஜெனரல் ஒக்டோபர் 1987ம் ஆண்டு என்னைச் சந்தித்த பொழுது "மிஸ்டர் ராம். நாங்கள் இங்கே என்ன செய்கிறோம்? இந்தக் காரியத்தை முடிப்பதற்கு குறைந்தது 30 ஆண்டுகள் செல்லும். நாங்கள் ஆணைகளை நிறைவேற்றுகிறோம். எங்களுக்கு வேறு மாற்று

"பொடியன்கள்" என செல்லமாக அழைக்கப்படும் இவர்களை தமிழ் மக்கள் தங்களுடைய உரிமைகளுக்கும், பாதுகாப்பிற்கும் போராடும் கரங்களாக ஏற்றுக் கொண்டுள்ளனர்.

இராணுவ ரீதியில் கணிப்பீடு செய்தால் விடுதலைப் புலிகள் தென் ஆசியாவில் உள்ள சகல போராளிக் குழுக்களிலும் பார்க்க திறமையுள்ளவர்களாகவே காணப்படுகின்றனர்.

"உலகம் என்றுமே கண்டிராத வீரப் போராளிகள்" என இவர்களை ஒரு இந்திய இராணுவ ஜெனரல் வர்ணித்தார். "உலகம் கண்ட யுத்த மேதைகளின் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டியவர் பிரபாகரன்," என்று அவர் மேலும் கூறினார்.

கெரில்லாப் படையான விடுதலைப் புலிகள், தேவை ஏற்பட்ட பல சந்தர்ப்பங்களில் மரபுரீதியான யுத்தத்திலும் ஈடுபட்டு பெரும் வெற்றிகளைக் கண்டுள்ளனர். எல்.ரி.ரி.ஈ. என்பது தாழ்க்க முடியாத ஒரு கப்பல்.



## அளந்துபேசுபவர்

பிரபாகரன் வார்த்தைகளை அளந்து பேசுபவர். ஆனால் அவர் செயற்பாட்டில் அளவு என்பதே கிடையாது. அதேபோல் அதிமுக்கிய விஷயங்களை அறிவிக்கும் பொழுதும் அவருடைய தமிழ்ப் பேச்சுக்கள் கரைபுரண்டோடும். இதை நான் அவரை நேரில் 1986ம் ஆண்டு செப்டம்பர் மாதம் சென்னையிலும் 1987ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் யாழ்ப்பாணத்திலும் சந்தித்தபொழுது காணக்கூடியதாகவிருந்தது.

ஒன்றை மட்டும் நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். ஈவிரக்கமில்லாத குழுக்களுக்கெதிராகவே நாங்களும் அவர்களுடைய பாணியில் நடந்து கொள்ளுகிறோம். அப்படிச் செய்யாவிட்டால் அவர்களை வெல்லமுடியாது!" எனக் கூறினார்.

## செயலே முதலில்

தமது இயக்கத்தின் அரசியல் கொள்கைகளை விளக்கும்பொழுது பிரபாகரன் சிங்கள அரசியல்வாதிகளை நம்பி நடக்கும் "டாம்பீகத்தை" நாம் அனுபவிக்க முடியாத நிலையில் உள்ளோம். தமிழ் ஈழம்தான் நாங்கள் பாதுகாப்பாக வாழ வழிவகுக்கும். இதற்கு மாற்று மருந்து வேறொன்றுமில்லை. ஆனாலும் உருப்படியான மாற்றுத் திட்டங்களை யாரும் அறிவித்தால் அவைகளை எமது மக்கள் முன் சமர்ப்பித்து அவர்கள் ஏற்றுக்கொண்டால், நாமும் எமது நிலைப்பாட்டை மாற்றுவது பற்றி யோசிப்போம்!" என கூறினார்.

தனது அணுகுமுறையில் அரசியல் குறைவாக இருப்பதாயும் இராணுவ அணுகுமுறையே கூடுதலாக இருப்பதாயும் பலர் கூறியதற்கு "நான் வார்த்தைகளில் குறைவாகவே நம்பிக்கை கொண்டவன். சீரான அரசியலில் மேடைப் பேச்சுக்களுக்கு இடமில்லை. செயலில் காட்டியபின்பே பேச்சுக்களில் ஈடுபடவேண்டும். வார்த்தைகள் செயல்களை ஒத்ததாக இருக்கவேண்டும். இந்த நிலையிலும் செயலுக்கே முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும்!" என்று கூறினார்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பின் அன்றைய இடதுசாரி சிந்தனைகள் என்பவை ராமுக்கு பிடித்திருந்தன.

பின்னர் ஈ.பி.ஆர்.எல்.எஃப். உடைவு கண்டபின்னர் ராமுக்கும் புலிகளுக்கும் இடையேயான உறவு பலப்பட்டது. புலிகளின் கட்டுப்பாடான செயற்பாடும், வடக்கு-கிழக்கில் அவர்களது முன்னணிப் பாத்திரமும் ராமை புலிகளது தீவிர ஆதரவாளராக மாற்றியிருந்தது.

ராஜீவ் காந்தி கொலைவரை 'ராம்' புலிகளின் தீவிர ஆதரவாளராக இருந்தார்.

'இந்து' பத்திரிகையினதும் 'ஃபுரொன்ட்லைன்' சஞ்சிகையினதும் ஆசிரியராக இருந்த திரு.ராம், 1991ல் புலிகள் தொடர்பாக எழுதிய கட்டுரை வெகு பிரபலமானது.

அக்கட்டுரையில் புலிகள் தொடர்பாகவும், பிரபாகரன் தொடர்பாகவும் 'ராம்' எழுதியவை இன்றுள்ள காலகட்டத்திற்கு பொருந்துகிறதா இல்லையா, என்பதை நீங்களே பார்த்து முடிவு செய்து கொள்ளுங்கள்.

"இராணுவரீதியில் பார்க்கும் பொழுது யுத்த நிறுத்தம் செய்வதோ யுத்தத்தைத் தொடருவதோ விடுதலைப் புலிகளின் கையிலேயே இருக்கிறது. இதில் அரசாங்கத்திற்கு ஒரு சிறு பங்குகூட இருப்பதாகத் தெரியவில்லை, ஒரு பாவமுமறியாத பொது மக்களைக் கொல்லுவதைத்தவிர.

விடுதலைப் புலிகளை அழிப்போமெனவும் இராணுவத் தீர்வொன்றைக் காண்பதில் வெற்றியடைவோமெனவும் கூறுவதெல்லாம் செல்லாக் காசு போன்றது.

இராணுவத் தீர்வின் கர்த்தாவான லலித் அத்துலத் முதலி முதற்கொண்டு புலிகளை சாதுவான பிராணிகளாக பழக்கி எடுப்போம் எனக் கோதாவில் இறங்கிய அமைதி காக்கும் படையினர் மற்றும் கதறும் கழுகுக் கூட்டத்தின் தலைவரான ரஞ்சன் விஜயரத்ன ஆகியோர் கூறியதும் இந்தக் கதையே. இந்த மூன்று பிரிவினரும் வெவ்வேறு யுத்திகளைக் கையாண்டார்கள். ஆனால் இறுதியில் யாவரும் ஒரே விதமான கசப்பான பாடத்தையே கற்றார்கள்.

1986-87ல் ஸ்ரீலங்கா அரசு நடத்திய கொடூரமான 'வடமராட்சி ஒப்பரேசன் லிபரேசன்' நடவடிக்கையாலும்கூட தமிழ் மக்களைப் பணியவைக்க முடியவில்லை.

ஜூலை 29.1987ல் கைச்சாத்திடப்பட்ட ஸ்ரீலங்கா-இந்திய ஒப்பந்தம் என்னும்

வழியேதும் இல்லை" எனக் கூறினார்.

இதைப்போலவே 14 மாதகாலம் பிரேமதாசா நடாத்தி வந்த ஓரளவு இந்தியாவுக்கெதிரான பேச்சுவார்த்தைகள் ஜூன் 11. 1990ல் முறிந்து போயிற்று.

நேரத்திற்கு நேரம் 'ஜனநாயகச் சக்திகளுடன் மட்டுமே பேச்சு வார்த்தைகள் நடத்துவோம்' என்ற நிலைப்பாடுகளும் அடிக்கடி எழவே செய்தன.

இந்த நிலைப்பாட்டை மனதில் கொண்டே 1983-85 இடைப்பட்ட காலகட்டத்தில் இந்திய அரசும் ஸ்ரீலங்கா அரசும் தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் பேச்சுவார்த்தைகளை நடாத்தினர். இப்படியான பேச்சுவார்த்தைகளில் தமது கை ஒங்கி நிற்கவேண்டும் என்பதற்காக இதே நேரம் இந்திய அரசாங்கம் பலதரப்பட்ட போராளிக் குழுக்களுக்கு பயிற்சி, ஆயுதம் முதலியனவற்றை வழங்கிவந்தது.

1983ம் ஆண்டு ஜூலை-ஆகஸ்ட் மாதங்களில் நடைபெற்ற இனக்கலவரத்தின் பின் இப்படியான யுத்திகள் பலிக்கக்கூடியதாக இல்லை.

## பிழையான கணிப்பு

விடுதலைப் புலிகளின் செல்வாக்கு அவர்களுடைய இராணுவ நடவடிக்கையால் மட்டுமே ஏற்பட்டதெனக் கூறுவது ஒரு பிழையான கணிப்பு. அதே நேரம் போராளிகளின் ஏ.கே.47களில் இருந்து செல்வாக்கு வரவில்லை என்றும் சொல்ல முடியாது.

விடுதலைப் புலிகளைத் தவிர வேறு குழுக்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவது ஒரு பலனையும் கொடுக்காது. புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் பெரும் பகுதிகளையும் அவர்களது ஆயுத பலத்தையும் எடுத்து நோக்கினால் இது புலனாகும்.

அரசியல் தலைமையை பிரபாகரனுடைய விடுதலைப் புலிகளிடம் கொடுப்பது ஸ்ரீலங்காவிலும் இந்தியாவிலும் உள்ள பலருக்குக் கசப்பானதாகவுள்ளது. ஆனால் ஸ்ரீலங்கா-இந்திய ஒப்பந்தத்தினால் ஏற்பட்ட இவர்களுடைய இன்பக் கனவுகள் பின்பு இடம்பெற்ற நிகழ்ச்சிகளால் சிதறுண்டு போனபின் இவர்கள் தங்களது நிலைப்பாடுகளை மீளாய்ந்து திருத்திக் கொள்வது தங்களது சகலருக்கும் நன்மை பயக்கும்.

வடக்கிலும் கிழக்கிலும் விடுதலைப் புலிகளுக்குள்ள அரசியல் செல்வாக்கை குறைத்து மதிப்பீடு செய்து அவர்களை மீறிச் செல்வது மடமை.

"நான் எனது இயக்கத்திலிருக்கும் போராளிகளை விடுதலை வீரர்களாகவே காண்கிறேன். எந்த நோக்கில் இருந்து பார்த்தாலும் அவர்களை வேறு விதமாகக் கணிக்கமுடியாது. அரச படை இன அழிவு ஏற்படுத்தும் இராணுவமாகச் செயல்படுகிறது. நாங்கள் தமிழ் மக்களுடைய விடிவுக்காகப் போராடும் ஒரு தேசிய இராணுவமாகச் செயல்படுகிறோம்!" என என்னிடம் கூறினார்.

அடுத்ததாக அவர்களது துணிச்சலையும் தியாக உணர்ச்சியையும் விவரிக்கும் பொழுது "நாங்கள்-ஏற்படவிருக்கும் பெரும் கஷ்டங்களை மக்களுக்கு முன்கூட்டியே விளக்கி, அவர்களை எல்லாவற்றிற்கும் தயாராக இருக்கும்படி செய்தோம். எமது எதிர்ப்பைத் தெரிவிக்க திடகாத்திரம் பூண்டோம். மடமையற்ற முறையில் போராட திட்டம் தீட்டினோம். எத்தனை போராளிகளை இழந்தாலும், போராட்டத்தை நிறுத்த மாட்டோம். இதுவே நாங்கள் எடுத்த முடிவு!" என்று கூறினார் பிரபாகரன்.

போராட்டத்தில் ஈடுபடாமல் வெளியே இருந்துகொண்டு தலைமைப் பீடத்தை எப்பொழுது கைப்பற்றலாம் என்று சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருப்போர் பலர்மீது பிரபாகரன் தனது வெறுப்பை வெளிப்படுத்தத் தவறவில்லை.

மூன்றாவதாக அமைப்பிலுள்ள கட்டுப்பாட்டைப் பற்றிக் கூறுகையில் "உண்மையைச் சொல்லப்போனால், இராணுவக் கட்டுப்பாடென்பது இரக்கமற்றது. எந்த இராணுவ நடவடிக்கைகளையும் எடுத்து நோக்கினால் வெற்றியே குறிக்கோளாக இருக்கும். ஏற்படும் விளைவுகள் அல்ல; நாங்கள் எதிர்நோக்குவதோ ஈவிரக்கமற்ற இராணுவத்தை இவர்களுக்கு முன்னால் நாங்கள் எப்படி சமாதான முறையில் பணியாற்றுவது? இது முடியாத காரியம் இதுதான் உண்மை!" எனக் கூறினார்.

கடமை, கட்டுப்பாடு, துப்பாக்கியின் பலம் என்பன பெரியதொரு பொறுப்பு. "துப்பாக்கிகளை வைத்திருப்பவர்களுக்கு வரையறையற்ற பலம் உண்டாகிறது. இந்தப் பலத்தை துஷ்பிரயோகம் செய்தால் சர்வாதிகாரம் உண்டாகும். அதனால்தான் எமது போராளிகளை கடுமையான கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறோம்.




அன்றைய காட்டூன்

பிரபாகரனுடைய ஹீரோக்கள் அனேகர் இந்திய விடுதலை இயக்கத்தில் ஈடுபட்டவர்களாகக் காணப்பட்டது. அவர்களில் முக்கியமாகக் காணப்பட்டவர்கள் நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ், பகவத் சிங் ஆகிய இருவரும்.

பிரபாகரன் அவரது இயக்கத்தின் இலட்சியத்தை இம்மியளவும் பிசகவிடாத காவலாளியாகக் காணப்பட்டார். எல்.ரி.ரி.ஈ.யின் பிரதான தளபதியாக விளங்கும் பிரபாகரன் இப்பொழுதுள்ள போராளிகளுக்கும் வருங்கால வீரர்களுக்கும் ஒழுக்கத்தின் ஒப்பற்ற உதாரணமாகக் காணப்படுகிறார்.

ஸ்ரீலங்கா-இந்திய ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்ட சலுகைகளைப் பற்றிக் கேட்ட பொழுது, "இதற்காகவா எங்கள் போராளிகள் எல்லாரும் தங்களது உயிர்களைத் தியாகம்

செய்தார்கள்?" எனத் திருப்பிக் கேட்டார்.

அவருடைய இலட்சியக் கனவான தமிழீழம் கிடைத்தபின் என்ன செய்வாரென அவரைக் கேட்டபொழுது, அரசியலில் இருந்து ஒய்வு பெற்று ஆக்கபூர்வமான சமூக சேவைகளில் ஈடுபடப்போவதாகக் கூறினார் பிரபாகரன்.

தற்போதைய நிலையில் ஈழம் என்பது கனவாக இருக்கலாம். அதே நேரம் இந்த இயக்கத்தை முற்றாக அழித்து ஸ்ரீலங்காவின் ஒருமை பாதுகாக்கப்படும், என்று கூறுவது அதைவிடப் பெரிய கனவு. இது ஜனாதிபதிகளான ஜயவர்த்தனா, பிரேமதாசா மற்றும் இந்தியத் தலைவர்கள் பலர் பெரும் நஷ்டத்திற்குள்ளாகி படித்த பாடம்.

ஐ.பி.கே.எஃப்.க்கு ஏற்பட்ட கதியால் விடுதலைப் புலிகளுக்கு இந்தியாவில் ஆதரவு குறையலாம். ஆனால் எல்.ரி.ரி.ஈ.ஐயும் அதன் திறமைவாய்ந்த தலைவரான பிரபாகரனையும் ஒருவரும் குறைத்து மதிப்பீடு செய்ய முடியாது.

என்று எழுதியிருந்தார் இந்து 'ராம்'.

இந்திய மத்திய அரசும், அப்போது பிரதமராக இருந்தவருமான சந்திரசேகரும்



'இந்து' ராம்

தமிழக அரசுமீது சந்தேகம் கொள்ள ஆரம்பித்தனர்.

விடுதலைப் புலிகளுக்கு கலைஞர் கருணாநிதி அதிக சுதந்திரம் கொடுக்கிறார் என்று குற்றம் சாட்டப்பட்டது.

இந்தியப் பிரதமராக இருந்த சந்திரசேகருக்கு இலங்கை இனப் பிரச்சனை தொடர்பாக போதிய விளக்கம் எதுவும் கிடையாது.

சந்திரசேகர் அரசுக்கு வெளியே இருந்து ஆதரவு கொடுத்தது ராஜீவ் காந்தி தலைமையிலான காங்கிரஸ் கட்சி.

ராஜீவ் காந்தியின் நெருக்குதலும் சந்திரசேகர் தமிழக அரசுமீது குற்றம் சாட்ட ஒரு காரணம் எனலாம்.

ராஜீவ் காந்தியிடம் ஜெயலலிதா நச்சரித்துக் கொண்டிருந்தார். தமிழக அரசை எப்படியாவது கலைத்து தேர்தல் நடத்துமாறு ஜெயலலிதா ராஜீவை தூண்டிக் கொண்டிருந்தார்.

## துக்ளக் சோ

சந்திரசேகருக்கு தமிழ்நாட்டில் ஒரு நண்பர் இருக்கிறார். அவர்தான் துக்ளக் ஆசிரியர் சோ. அவருக்கு புலிகளை கண்ணிலும் காட்டக் கூடாது. தமிழ், தமிழ்நாடு, தமிழீழம் போன்ற முழக்கங்களும் பிடிக்காது.

சோவும் அப்போது தமிழக அரசு புலிகளுக்கு உதவுவதாக குற்றம்சாட்டி வந்தார். அவரது கருத்தும் சந்திரசேகருக்கு கிடைத்திருக்கும்.

மத்திய அரசையும், பிரதமர் சந்திரசேகரையும் திருப்திப்படுத்தும் முகமாக தமிழக முதல்வர் கலைஞர் சில நடவடிக்கைகளை எடுத்தார்.

தமிழ்நாட்டில் 86 விடுதலைப் புலிகள் கைது. ஆயுதங்கள், வெடிமருந்துகள் கைப்பற்றப்பட்டன. படகுகளுக்கு பாவிக்கப்படும் வெளியிணைப்பு இயந்திரங்களும் பறிமுதல் என்று செய்திகள் வெளியாகின.

தமிழகப் பத்திரிகைகளுக்கு ஒரு பழக்கம் இருக்கிறது. இலங்கைத் தமிழர்கள் யார் ஆயுதங்களுடன் கைதானாலும் 'விடுதலைப் புலிகள் கைது' என்று செய்தி போடுவார்கள்.

உண்மையில் தமிழக அரசால் அப்போது கைதானவர்களில் பலர் ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ஈ.என்.டி.எல்.எஃப். ரெலோ ஆகிய இயக்கங்களைச் சேர்ந்தவர்களே.

கைது செய்யப்பட்டவர்களை தனி முகாம் ஒன்றில் கடும் பாதுகாப்புடன் வைத்திருக்க உத்தரவிடப்பட்டது.

(தொடர்ந்து வரும்)



படிப்பகம்

www.padippakam.com

# அலசுவது – இராஜதந்திரி

# தலைநகரிலேயே வாங்கிக்கட்டிக்கொண்ட ஆட்சியாளர்கள்

இலங்கை ஆட்சியாளர்கள் சர்வதேச அரங்கில் இரண்டு கசப்பான அனுபவங்களை சமீபத்தில் சந்திக்க வேண்டியிருந்தது.

இலங்கை வந்திருந்த தென்னாபிரிக்க தூதுக்குழுவினர் கொழும்பில் பத்திரிகையாளர்களை அழைத்து நடத்திய மாநாடு, ஆட்சியாளர்களுக்கு நெத்தியடியாகவே அமைந்திருந்தது.

தென்னாபிரிக்க தேசிய காங்கிரசும், நெல்சன் மண்டேலாவும் புலிகளுக்கு ஆதரவானவர்கள் என்ற தனது சந்தேகத்தை தீர்த்துக்கொள்ள பல வழிகளிலும் இலங்கை அரசு முயன்றது.

நெல்சன் மண்டேலா மூன்றாம் தரப்பு மத்தியஸ்தராக வருவதற்கு விருப்பம் தெரிவிக்காமல் தடுக்கும் இராஜதந்திர முயற்சிகளிலும் ஆட்சியாளர்கள் ஈடுபட்டிருந்தனர்.

தென்னாபிரிக்காவில் புலிகள் புகலிடம் தேடுவதாக புகார்களை அடுக்கியது மூலம், புலிகளுக்கு உதவுவதையோ, இங்கு தலையிடுவதையோ தாம் விரும்பவில்லை என்பதை சூசகமாக தெரிவித்தனர்.

புலிகள் பயங்கரவாதிகள் என்றும், பயங்கரவாதிகளுக்கு இடமளிக்கக்கூடாது என்றும் கூறிக்கொண்டிருந்தால், எந்தவொரு நாடும் மத்தியஸ்தம் வகிக்க விருப்பம் தெரிவிக்காது என்பதே ஆட்சியாளரது எண்ணமாக இருந்து வருகிறது.

ஏனெனில், எந்தவொரு நாட்டுக்குள்ளும் பயங்கரவாதப் பிரச்சனைகளில் பிறிதொரு நாடு தலையிடாது. தேவையானால் பயங்கரவாதத்தை அடக்கத்தான் ஒத்தாசை புரியும்.

இலங்கையில் நிலவுவது பயங்கரவாதப் பிரச்சனை என்று சித்தரிப்பதில் ஆட்சியாளர்கள் தோல்வியைத் தழுவ ஆரம்பித்துள்ளனர்.

தென்னாபிரிக்க தூதுக்குழுவினர் பத்திரிகையாளர் மாநாட்டில் கூறிய ஒவ்வொரு கருத்தும் ஆட்சியாளரது பிரசாரங்களை தவிடுபொடியாக்குவதாகவே அமைந்திருந்தன.

விடுதலைப் புலிகளோடு தென்னாபிரிக்க அரசுக்கு தொடர்பில்லை என்று மட்டுமே குறிப்பிட்டனரே தவிர, தென்னாபிரிக்க தேசிய காங்கிரசுக்கு தொடர்பில்லை என்று மறுத்துரைக்கவில்லை.

இன்னொரு நாட்டில் போராடிவரும் ஒரு அமைப்போடு தமக்கு தொடர்பு இருந்தால்கூட எந்தவொரு நாட்டு அரசும் அதனை உத்தியோகபூர்வமாக கூறுவதில்லை.

ஆனால், தென்னாபிரிக்காவின் ஆளும் கட்சியான தென்னாபிரிக்க தேசிய காங்கிரசில் உள்ளவர்களோடு புலிகளுக்கு தொடர்பிருக்கலாம் என்பதை பகிரங்கமாகவே தூதுக்குழுவினர் கூறியுமுள்ளனர்.

அதன்மூலம் புலிகள் பயங்கரவாதிகள் என்ற இலங்கை ஆட்சியாளரின் கருத்தை தென்னாபிரிக்க தேசிய காங்கிரஸ் நிராகரித்திருப்பது புலனாகிறது.

தென்னாபிரிக்க தேசிய காங்கிரசில் இருக்கும் தனிப்பட்டவர்களுக்கு புலிகளுடன் தொடர்பு இருக்கலாம் என்று பொதுப்படையாக கூறப்பட்டுள்ளது. அந்த தனிநபர்களில் தலைவர் நெல்சன் மண்டேலாவும் இருக்கலாம், வேறு பிரமுகர்களும் இருக்கலாம்.

அதுமட்டுமல்லாமல், இலங்கை இனப்பிரச்சனையில் சமானத்தீர்வை எட்டுவதற்கு தென்னாபிரிக்க அரசும், தலைவர் நெல்சன் மண்டேலாவும் தயாராக இருப்பதாகவும் தூதுக்குழுவினர் திட்டவட்டமாக தெரிவித்திருந்தனர்.

அதன் மூலமும் இலங்கையில் நிலவுவது பயங்கரவாதப் பிரச்சனை என்பதையோ, புலிகள் பயங்கரவாத அமைப்பு என்பதையோ தென்னாபிரிக்க அரசு ஏற்றுக்கொள்ளவில்லை என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாகிவிட்டது.

இன்னொன்றையும் நாம் உன்னிப்பாக நோக்கவேண்டும். ஜனாதிபதி சந்திரிக்கா தென்னாபிரிக்கா சென்றபோது அவருக்கு எதிராக பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டிருந்தது.



அந்த ஆர்ப்பாட்டத்தில் எக் கட்டத்திலும் புலிகளின் பிரசன்னம் நேரடியாக இருக்கவில்லை. இந்திய வம்சாவளி மக்களே முன்னின்று நடத்தியிருந்தனர்.

தாம் அதில் பங்கு கொண்டால், இலங்கை அரசுக்கு பதில் சொல்ல வேண்டிய இராஜதந்திர நிர்ப்பந்தம் தென்னாபிரிக்க அரசுக்கு ஏற்படக்கூடும் என்பதை முன்கூட்டியே ஊகித்தே புலிகள் புத்திசாலித்தனமாக நடந்துகொண்டிருந்தனர்.

தென்னாபிரிக்காவில் புலிகளின் தீவிர ஆதரவாளர்கள் இருக்கின்றனர். புலிகளின் முக்கிய பிரமுகர்களும் அங்கு சென்று தென்னாபிரிக்க காங்கிரசுடன் நெருங்கிய உறவுகளை பேணிவருகின்றனர். இத்தகைய உறவுகளால் தென்னாபிரிக்காவுக்கு இராஜதந்திர சிக்கல்கள் ஏற்படாதவாறு புலிகள் நடந்துகொள்கின்றனர்.

தென் ஆபிரிக்காவில் இந்திய வம்சாவளி மக்களுக்கிடையேயும் புலிகளுக்கு பேராதரவும், அனுதாபமும் இருந்து வருகிறது. நிதியுதவிகளும் கிடைத்து வருகின்றன.

தென் ஆபிரிக்காவில் இலங்கைத் தமிழர்களும் உள்ளனர். அவர்கள் பெயரில் சந்திரிக்கா அம்மையாருக்கு எதிர்ப்பு தெரிவித்து இருந்தால், தென்னாபிரிக்காவில் புலிகள் என்ற பிரசாரத்திற்கு இலங்கை அரசு அதனையே ஆதாரமாக தூக்கிப் பிடித்திருக்கும்.

அதன் காரணமாகவே இந்திய வம்சாவளி மக்கள் என்ற பெயரிலேயே எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டிருந்தது.

கொழும்பில் மிக முக்கியமான இன்னொரு தகவலையும் தென்னாபிரிக்க தூதுக்குழுவினர் கூறியிருக்கின்றனர்.

‘உள்நாட்டுப் போரில் ஈடுபடும் நாடுகளுக்கு ஆயுதங்களை விற்பனை செய்வதில்லை’ என்று தென்னாபிரிக்க அரசு முடிவு செய்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

இலங்கை அரசுக்கு ஆயுதங்களை விற்பனை செய்ய வேண்டாம் என்று தென்னாபிரிக்க அதிபர் நெல்சன் மண்டேலாவிடம் கோரிக்கை விடுத்திருந்த ஒரே ஒரு அமைப்பினர் விடுதலைப் புலிகளேயாவர். விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் கடிதம் மூலமாக அக் கோரிக்கையை விடுத்திருந்தார். புலிகளின் சர்வதேச பிரதிநிதி ஊடாக அக்கடிதம் நெல்சன் மண்டேலாவிடம் சேர்ப்பிக்கப்பட்டிருந்தது.

எனவே, தென்னாபிரிக்க அரசு எடுத்துள்ள முடிவானது இலங்கை அரசுக்கு கசப்பையும், புலிகளுக்கு மகிழ்ச்சியையும் கொடுக்கக்கூடிய ஒன்றேயாகும்.

தென்னாபிரிக்க தூதுக்குழுவினர் ஆட்சியாளர்களுக்கு அதிர்ச்சியையும், கசப்பையும் கொடுத்திருந்த வேளையிலேயே, மற்றுமொரு அதிர்ச்சியை கொடுத்திருக்கிறார் பிரிட்டிஷ் இணையமைச்சர் டெரிக் பட்செட்.

‘இலங்கையின் இனப்பிரச்சனைக்கு மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் அவசியம்’ என்பதை அவர் ஆணித்தரமாக கூறியுள்ளார். அழைப்பு விடுத்தால் மத்தியஸ்தம் வகிக்கத் தயார் எனவும் கூறியிருக்கிறார்.

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தென்னாபிரிக்கா ஊடாக வருவதை எப்படித் தடுக்கலாம் என்று ஆட்சியாளர்கள் முடியைப் பிய்த்துக் கொண்டிருந்தபோது, பிரிட்டிஷ் அமைச்சர் வழியாக அதிர்ச்சி நேர்ந்திருக்கிறது.

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துக்கு தயார் என்று மண்டேலா எங்கே கூறிவிடப்போகிறாரோ என்று ஆட்சியாளர்கள் தவியாய்த் தவித்துக் கொண்டிருந்தபோது, பிரிட்டிஷ் இணையமைச்சர் கொழும்பில் வைத்தே ‘தாம் தயார்’ என்று பகிரங்கமாக அறிவித்து விட்டார்.

பிரிட்டனுக்கு பலமுறை சென்று வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் மேற்கொண்ட பிரசாரங்கள் அனைத்தும் பயனற்று போயுள்ளன என்பதும் புலனாகிவிட்டது.

புலிகள் பயங்கரவாதிகள் என்றும், பிரிட்டனில் புலிகளை தடைசெய்ய வேண்டும் என்றும் லக்ஷ்மன் கதிர்காமர் தொடர்ந்து வலியுறுத்தி வந்தார்.

ஆனால், பிரிட்டிஷ் அரசாங்கம் புலிகளை தடை செய்யப்பட வேண்டிய அமைப்பாக கருதாமல், இலங்கை அரசுக்கு சமமான இன்னொரு அரசியல், இராணுவ தரப்பாகவே கருதியுள்ளது. அதன் காரணமாகவே மத்தியஸ்தம் மிக அவசியம் என்ற முடிவுக்கும் வந்துள்ளது.

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை தடுக்கும் ஆட்சியாளரின் தந்திரமும், அவர்களது பிரசார உத்திகளும் தலைநகரில் வைத்தே தென்னாபிரிக்க தூதுக்குழுவினாலும், பிரிட்டிஷ் இணையமைச்சராலும் தகர்க்கப்பட்டுள்ளன.

ஆட்சியாளருக்கு ஏற்பட்டுள்ள மிகப்பாரிய இராஜதந்திரத் தோல்வியே இதுவாகும். எனினும் மெல்லவும் முடியாத விழுங்கவும் முடியாத தர்மசங்கடமான நிலையிலேயே ஆட்சியாளர்கள் இருக்கின்றனர்.

முன்னர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனே ஜனாதிபதியாக இருந்தபோது பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் இங்கு விஜயம் செய்திருந்தனர். இனப்பிரச்சனை தொடர்பாக அவர்கள் நியாயமான கருத்து வெளியிட்டபோது, “உங்கள் வேலையை நீங்கள் பாருங்கள்” என்று ஜே.ஆர். கூறியிருந்தார்.

தற்போதும் அவ்வாறு கூறுவதற்கே இன்றைய ஆட்சியாளர்களும் விரும்பினாலும்கூட, அதனை புலிகள் தமக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்வர் என்பதால் மௌனம் சாதிக்கின்றனர்.

அவ்வாறிருந்தும் இன்றைய ஆட்சியாளரின் இராணுவத்தீர்வு முயற்சியை ஆதரித்துவரும் பௌத்த மதகுருமார்களின் உருவில் எதிர்ப்பு வெளிப்பட்டுள்ளது.

பல்வேறு பெயர்களில் பௌத்த மதகுருமார்களின் அமைப்புக்கள் வெளியிட்ட சுவரொட்டிகள் தலைநகரில் காணப்பட்டன. அச் சுவரொட்டிகளை அகற்றுவதற்கு எவ்வித முயற்சிகளும் எடுக்கப்படவில்லை.

அதேசமயம் பிரிட்டிஷ் இணையமைச்சர் விமான நிலையத்தில் இறங்குவதற்கு அரைமணிநேரம் முன்பாக, விமான நிலையத்தில் ஆர்.பி.ஜி. ரொக்கட் லோஞ்சர் ஒன்று வெடித்திருந்தது.

இது தற்செயல் என்று கூறப்படுகிறது ஆனாலும் ஆர்.பி.ஜி. ரொக்கட் லோஞ்சர் தற்செயலாக வெடிப்பதற்கு சாதகங்கள் குறைவாகவே இருக்கின்றன.

‘இலங்கை இந்திய ஒப்பந்தத்தில் கையெழுத்திட வந்த இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கடற்படை வீரர் ஒருவராலேயே தாக்கப்பட்டிருந்தார்.

தற்போது விமானப்படை வீரர் ஒருவரது ஆர்.பி.ஜி. லோஞ்சர்தான் வெடித்திருக்கிறது.’

ஆர்.பி.ஜி. வெடித்த சம்பவம் பாராளுமன்றத்தில் இருந்த எதிர்க்கட்சித் தலைவருக்கு உடனடியாக தெரியவந்துள்ளது.

அமைச்சர்களுக்கே தகவல் எட்ட முன்னர் எதிர்க்கட்சித் தலைவருக்கு தகவல் எட்டியதுடன் பாராளுமன்றத்தில் உடனடியாக கேள்வி எழுப்பி ஆளும் தரப்பை திக்குமுக்காட வைத்துவிட்டனர்.

இந்நிலையில்தான் திட்டமிட்ட செயலா? தற்செயலா? என்று பலத்த சந்தேகம் உருவாகியுள்ளது.

விமான ஒடு பாதையில் பயிற்சி அளிக்கும்போது ஆர்.பி.ஜி. வெடித்ததாக கூறப்பட்டது. இன்னொரு செய்தியில் விமான நிலைய அறை ஒன்று சேதத்துக்கு உள்ளானது என்றும் கூறப்பட்டிருந்தது. முன்னுக்குப்பின் முரணாக வெளியான செய்திகள் சந்தேகத்தையே தோற்றுவித்திருந்தன.

எனினும் ஆட்சியாளர்கள் குறிப்பிட்ட விவகாரத்தில் அலட்சியம் காட்டியுள்ளனர். போதிய விசாரணைகள் நடந்ததாகத் தெரியவில்லை.

இதேவேளை பிரிட்டிஷ் அமைச்சர் மற்றும் தென்னாபிரிக்க தூதுக்குழுவினர் கூறிய கருத்துக்கள் தொடர்பாகவும் உடனடியாக கருத்துக் கூறமுடியாதளவுக்கு ஆட்சியாளர்கள் அதிர்ந்து போயுள்ளனர்.

முன்னாள் இந்தியத் தூதர் நாகேந்திரநாத்ஜா கூறிய கருத்தை ‘தலையீடு’ என்று அர்த்தப்படுத்தி வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஆட்சேபனை தெரிவித்திருந்தார்.

அந்த வேகத்தை தற்போது காணமுடியாதுள்ளது. சர்வதேச அரங்கில் தமது பிரசார உத்திகள் முன்னர்போல பலனளிக்க தவறுவதை ஆட்சியாளரும் உணர்ந்தே உள்ளனர்.

கிளிநொச்சி சமரின் பின்னர் சர்வதேச அரங்கில் புலிகளின் இராணுவ பலம் தொடர்பான அங்கீகாரம் ஏற்பட்டுள்ளதும் இலங்கை அரசின் ‘பயங்கரவாத’ சித்தரிப்புக்களை தகர்த்து வருகிறது.

உலக அரங்கில் இலங்கைத் தமிழுக்கு அனுதாபம் இல்லை என்று சில தமிழ்க் கட்சிகள் கூறிவந்தன. தங்கள் சமரச சரணடைவு அரசியலை நியாயப்படுத்தவே அவ்வாறு கூறிவந்தன.

வெளிநாட்டு உதவிகள், அனுதாபங்கள் என்பவை தாமாக வந்து குதிப்பதில்லை. அதற்கான சூழ்நிலையை போராடும் அமைப்புக்களே தோற்றுவிக்கின்றன.



தென்னாபிரிக்கத் தூதுக்குழு

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் ஏற்படாமல் தடுக்கும் அரசின் முயற்சிகளுக்கு முண்டு கொடுக்கும் பணியையே தமிழ்க் கட்சிகள் இன்று செய்துவருகின்றன.

ஆனால் அத்தனை உள், வெளித் தடைகளையும் தாண்டியதாக இங்குள்ள அரசியல், இராணுவ நிலவரங்கள் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் அவசியம் என்பதை வெளியுலகுக்கு வெளிச்சமிட்டு காட்டி வருகின்றன.

## சந்திக்கு வராத சங்கதிகள் — நக்கீரன்

இந்த நாடு தமிழர்களுக்கு சொந்தமானதல்ல என்று அம்மையார் கூறிய விடயம் ரூபவாஹினியில்தான் முதலில் வெளியானது. விஷயத்தின் விபரீதம் அறியாமல் ரூபவாஹினி கூறிவிட்டது.

தப்பித் தவறி ரூபவாஹினி சொன்ன ஒரே ஒரு உண்மை அரசையும், அம்மையாரையும் தர்மசங்கடத்தில் ஆழ்த்தியுள்ளது.

சமீபத்தில் தன்னை சந்தித்த தமிழ்க் கட்சித் தலைவர் ஒவரிடம், தான் அவ்வாறு கூறியது தொடர்பாக எழுந்த சர்ச்சைகள் தனக்கு தெரியாது என்று ஜனாதிபதி கூறினாராம்.

சில நாட்களுக்கு முன்னர் இன்னொரு சந்திப்பில் அதே கட்சித் தலைவர் ஜனாதிபதியிடம் மேற்படி விவகாரம் குறித்துக் கேட்டாராம். ‘தான் அவ்வாறு பேசவில்லை’ என்று ஜனாதிபதி மறுத்திருந்தாராம்.

தற்போது தென்னாபிரிக்க பேட்டியின் வீடியோ கசட்டையே ரி.என்.எல். தொலைக்காட்சியில் ஒளிபரப்பிவிட்டனர்.

“அவரா சொன்னார் இருக்காது. இருக்கவும் முடியாது” என்று மறுப்பு விடுத்த லக்ஷ்மன் கதிர்காமரும் தகவல் திணைக்களக பொறுப்பதிகாரி ரூபசிங்காவும் நெளிந்து கொண்டிருக்கிறார்கள்.

மேற்படி விவகாரம் தொடர்பாக ஏன் உடனடி விளக்கம் தரப்படவில்லை என்பதற்கு கூறப்படும் காரணம் மிகவும் பலவீனமானது.

ஆங்கிலப் பத்திரிகைகளில் பக்கம் பக்கமாக கட்டுரைகள் வந்தன. தமிழ்க் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம் ஒன்றுக்கு இரண்டாக ஜனாதிபதிக்கு நேரடியாகவே கடிதங்கள் எழுதியுமிருக்கிறார்.

அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் மறுத்துப் பேசுகிறார். தகவல் திணைக்கள பொறுப்பதிகாரி மறுத்து அறிக்கையே கொடுக்கிறார். இத்தனை நடந்தும் ஜனாதிபதி அறியாமல் இருந்திருக்க முடியுமா?

முன்பு சண்டே ரைம்ஸ் பத்திரிகையில் ஒரு மூலையில் வெளியான விஷயமே உடனடியாக ஜனாதிபதியின் கவனத்திற்கு சென்றது. வழக்கும் தொடுக்கப்பட்டது. அப்படியிருக்கையில் பக்கம் பக்கமாக வெளியான விவகாரம் ஜனாதிபதியின் கவனத்துக்கு போகவில்லையென்றால் என்ன அர்த்தம்?

தனது தனிப்பட்ட கௌரவத்திற்கு ஊறு நேர்ந்ததுக்காக ‘சண்டே ரைம்ஸ்’ பத்திரிகை மன்னிப்பு கேட்கவேண்டும் என்று கடைசிவரை உறுதியாக நின்று வழக்கு நடத்தி வென்றவர் ஜனாதிபதி.

### நிராகரிக்கப்பட்ட கோரிக்கைகள்

தமிழ் மக்களின் சுயகௌரவத்திற்கே இழுக்கு என்று கருதப்படும் தனது கூற்றுத் தொடர்பாக எழுந்த அதிருப்திகளும், சர்ச்சைகளும் தொடர்பாக கிட்டத்தட்ட ஒருமாதகாலமாக மௌனம் சாதித்திருக்கிறார்.

***

தமிழ்க் கட்சிகள் ஜனாதிபதியிடம் அரசு விமான சேவைக்கு அனுமதிக்க வேண்டும். பயணிகள் கப்பல் சேவை நடத்த வேண்டும். பயணிகள் கப்பலில் துருப்புக்களை ஏற்றக் கூடாது என்றெல்லாம் கோரிக்கை விடுத்தன.

இக் கோரிக்கைகள் நிறைவேறுகிறதோ இல்லையோ, சந்திப்பு முடிந்து வந்ததும் பத்திரிகைகளுக்கு கூறுவதற்காக விடுக்கப்படும் கோரிக்கைகளே அவை.

மூன்று கோரிக்கைகளும் பரிசீலனை என்ற பேச்சுக்கே இடமில்லாமல் நிராகரிக்கப்பட்டுவிட்டன. இதன்பின்னரே தனியார் கப்பல் சேவையாவது நடத்த அனுமதிக்குமாறு அக் கட்சிகள் கேட்டன. “அதற்கென்ன நல்ல கம்பனி இருந்தால் நடத்தட்டும்!” என்று கூறப்பட்டதாம்.

இறுக்கமாக நின்றால் தமிழ்க் கட்சிகள் இறங்கி குனிந்து நிற்கும் என்பதை அரசு எடைபோட்டுவிட்டது.

பயணிகள் கப்பல் சேவையை அரசு நடத்தினால் குறைந்த கட்டணத்தில் பயணிகள் போய் வரலாம். நடத்த வேண்டிய பொறுப்பும் அரசுக்கு உண்டு.

பயணிகள் தாமாகவே சுழற்சி முறையில் உண்ணாவிரதம் நடத்தவும் ஆரம்பித்தனர். எனவே எப்படியாவது கப்பல் சேவை நடத்த வேண்டிய கட்டாயம் அரசுக்கு ஏற்பட்டது.

ஆனால், தமிழ்க் கட்சிகள் அரசு தனது பொறுப்பில் இருந்து தப்பிக்கொள்ள உதவி விட்டன.

அரசு கப்பல் சேவை நடத்தியேயாக வேண்டும் என்று உறுதியாக ஒன்றுபட்டு நின்றிருந்தால், அரசு முன்வந்தேயாக வேண்டும். வேறு வழியில்லை. ஆனால் இக் கட்சிகளோ தனியார் கப்பல் சேவை நடத்த அனுமதிக்குமாறு கோரிக்கை விடுத்ததால் அரசுக்கு வேலை சுலபமாகிவிட்டது.

அதனை ஏதோ தமது சாதனைபோல இக் கட்சிகள் பத்திரிகைகளுக்கு கூறியதுதான் தமாஷ்!

அதுமட்டுமல்ல, மன்னாரில் இருந்து தனியார் கப்பல் புறப்படுகிறது என்றும் கூறிவிட்டார் ஒரு கட்சித் தலைவர். அதற்கான எந்த உத்தரவும் அவர் கூறும் கட்டத்தில் பிறப்பிக்கப்படவே இல்லை.

தங்களையும் ஏமாற்றி மக்களையும் முட்டாள்களாக்குகிறார்கள்.

பயணிகள் கப்பல் சேவையை நடத்துமாறு கோரி பயணிகள் திருமலையில் போராட்டம் நடத்தினர். இப் போராட்டத்திற்கு மறைமுக ஆதரவு அளித்தனராம் சில கட்சியினர்.

மறைமுகமான ஆதரவால் பயன்கள் உண்டு தான். அரசின் கோபத்துக்கு ஆளாகாமல் இருக்கலாம். பயணிகளிடமும் நல்ல பெயர் எடுக்கலாம்.

சினிமாவில் வரும் அரசியல் வாதிகள் தோற்றார்கள் போங்கள்.



படிப்பகம்

## உண்மைத் தொடர்

### அதிர் இடி 36

**கடந்தவாரம்**

**இந்திய வர்த்தகரான மத்வானியின் மகளை மணம்முடிக்க விரும்புகிறான் இடி அமீன். அவர் மறுக்கிறார். 'எந்தப் பெண்ணுக்கும் நல்ல புருஷனாக இருக்க அமீன் தகுதியற்றவன்!" என்று மத்வானி பதில் அனுப்புகிறார். அதனால் கோபமடைந்த அமீன் மத்வானியின் மகளது சாயலில் உள்ள பெண்கள் தனக்கு தேவை என்கிறான். அவ்வாறான சாயலில் இருந்த பெண் ஒருத்தியை கொல்கிறான். இனி....**

# இடி அமீன்

வெளிநாட்டமைச்சர் நாட்டை விட்டு ஓடியதுமல்லாமல், தன்னை முட்டாள் என்று ,'போனில் திட்டியது இடி அமீனுக்கு இரத்தக் கொதிப்பை ஏற்படுத்தியிருந்தது.

கென்யா நாட்டு அரசுமீது கடும் கோபத்தில் இருந்த அமீன், தனது உளவுத் துறை பொறுப்பதிகாரியை அழைத்தான்.

**"கென்யா எங்கள் எதிரிகளுக்கு கொம்பு சீவிவிடும் வேலை செய்கிறது. அதனால் கென்யாவுக்குள் நாமும் பூசல்களை ஊதி வளர்க்க வேண்டும்!"** என்று கட்டளையிட்டான். அத்தோடு இன்னொரு வேலையையும் ஒப்படைத்தான்.

**"கென்யாவுக்குள் எங்கள் ஓடுகாலி வெளிநாட்டமைச்சர் எங்கு தங்கியிருக்கிறான் என்றும் கண்டுபிடிக்க வேண்டும். அவனை கண்டதுண்டமாக வெட்டிப் போட்டால்தான் என் கோபம் தீரும்!"** என்றான்.

ஆனால் கடைசிவரை அக் காரியத்தை உளவுத்துறையால் செய்து முடிக்க இயலவில்லை.

கென்யாவில் புகலிடம் தேடிய வெளிநாட்டமைச்சர் 'இடி அமீன் ஆட்சி கொடூர ஆட்சி!' என்று செய்தி நிறுவனங்களுக்கு தெரிவித்தார்.

உலகை அதிர்ச்சிக்கு உள்ளாக்கும் தகவல்களை அவர் தொடர்ந்து கூறிக் கொண்டிருந்தார்.

'ஒரு இலட்சம்பேர் வரை இடி அமீனின் படைகளால் கொலை செய்யப்பட்டுள்ளனர். அதில் முன்னாள் ஜனாதிபதி ஒபேடேக்கு விசுவாசமான படைகளும், அப்பாவி குடிமக்களும் அடக்கம்!' என்று கூறினார்.

இத் தகவல்கள் சர்வதேசமெங்கும் எதிரொலித்ததுடன், உலக வானொலிகள் ஊடாக உகண்டாவுக்குள்ளும் எட்டின.

உள்நாட்டுப் பத்திரிகைகளையும், செய்தி ஊடகங்களையும் அரச கட்டுப்பாட்டிலும், மிரட்டியும் வைத்திருந்த அமீனால், வானொலி, தொலைக்காட்சிகள் ஊடாக பிறநாட்டு செய்திகள் புகுவதைத் தடுக்க இயலவில்லை.

தன் அதிகாரிகளை அழைத்த அமீன்: **"வானொலிகளிலும், தொலைக்காட்சிகளிலும் வெளிநாட்டு செய்திகள் இடம்பெறாமல் தடுக்க ஏதும் வழிவகை உண்டா?"** என்று கேட்டான்.

அதிகாரிகள் உதட்டைப் பிதுக்கினார்கள். அமீன் விழிகளை உருட்டி முறைத்தான்.

"அதற்கான கருவிகள் எம்மிடம் இல்லையானால் கூறுங்கள். வெளிநாடுகளில் இருந்து பணம் கொடுத்து வாங்கித் தருகிறேன்!" என்றான்.

அதிகாரிகளுக்கு என்ன பதில் கூறுவது என்றே தெரியவில்லை. "அப்படி ஒரு கருவி இருப்பதாக நாம் அறியவில்லை" என்று பவ்வியமாகக் கூறினார் ஓர் அதிகாரி.

**"வேறு என்ன அறிந்து வைத்திருக்கிறீர்கள்? அலுவலகத்தில் இருந்து--- பிடுங்கிக் கொண்டிருக்கிறீர்களா?"** என்று உரத்த தொனியில் திட்டித்தீர்த்தான்.

வாயில் பிளாஸ்திரி ஒட்டியதுபோல மௌனமாக இருந்தனர் அதிகாரிகள்.

**"ம்... போங்கள். நன்றாக ஆராய்ந்து பதில் கூறுங்கள். இரண்டு நாள் அவகாசம் தருகிறேன்!"** என்றான் அமீன்.

இரண்டாம் நாள் அமீனைச் சந்தித்தபோது அதிகாரிகளில் பாதிப்பேர் குறைந்தார்கள்.

'அப்படியொரு கருவியே கிடையாது. என்று கூறினால் அமீன் தங்களைக் கொன்றுவிடுவானோ?' என்ற பயத்தில் அவர்கள் தலைமறைவாகிவிட்டனர்.

**"உங்களை என்ன கொன்று விட்டேனா, இல்லையே! என்னிடம் ஏன் பயந்து சாகிறீர்கள்? அவர்கள் ஏன் ஓட வேண்டும்? மீண்டும் அவர்கள் வந்து தமது பதவிகளில் இருக்கட்டும். கண்டால் சொல்லி அழைத்து வாருங்கள்!"** என்றான் அமீன்.

நாட்டு நிலை பற்றியும் அதிகாரிகளிடம் கேட்டறிந்தான்.

நாட்டில் உற்பத்தி வீழ்ச்சியடைந்திருந்தது. அதனால் பொருட்களது விலைகள் கிடுகிடுவென்று உயர்ந்திருந்தன.

ஆசியநாட்டவர்கள் வெளியேற்றப் பட்டதால் பல இலட்சம் தொழிலாளர்கள் நடுத்தெருவுக்கு வந்தனர்.

பாலுக்குக்கூட தட்டுப்பாடு ஏற்பட்டுவிட்டது. ஆசிய நாட்டவரிடம் இருந்த பால் பண்ணைகளைக் கைப்பற்றிய இராணுவ அதிகாரிகள், அவற்றை மாட்டிறைச்சி விற்பனையாளர்களுக்கு விற்றனர்.

அவர்கள் கறவை மாடுகளை வெட்டி இறைச்சியாக்கி விற்றனர். பால் பற்றாக்குறை ஏற்பட்டதால் வெண்ணை, சீஸ் போன்ற பொருட்களுக்கும் பெரும் தட்டுப்பாடு.

சீனி, பாண், உப்பு போன்ற அன்றாட தேவைப்பொருட்களுக்கும் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டது.

தன்மீது மக்கள் கொதித்தெழாமல் தடுப்பதற்காக தந்திரம் ஒன்றைக் கையாண்டான் அமீன்.

பொருட்களைக் கொள்ளை விலைக்கு விற்கிறார்கள் என்று கூறி உற்பத்தியாளர்கள் பலரை அமீனின் படைகள் கைதுசெய்தன.

கைது செய்தவர்களை பொதுமக்கள் முன்பாக நையப்புடைத்தனர்.



**"பொருட்களின் விலைகளை உயர்த்தியும், தட்டுப்பாடுகளை ஏற்படுத்தியும் மக்களை துன்புறுத்தாதீர்கள்! எதிரிகளின் கையாட்களாக மாறாதீர்கள்!"** என்று வர்த்தகர்களுக்கு வானொலி மூலம் வேண்டுகோள் விடுத்தான் அமீன்.

அத் தந்திரத்தை மக்கள் நம்பவில்லை. விலை ஏற்றத்துக்கும், தட்டுப்பாடுகளுக்கும் அரசே காரணம் என்று முணுமுணுப்புக்கள் எழத்தொடங்கின.

பரபரப்பான சம்பவம் ஒன்றால் மக்களின் மனங்களில் இடம்பிடிக்கத் திட்டமிட்டான் அமீன்.

உகண்டாவின் தலைநகரான கம்பலாவில் இருந்த வெள்ளையர்களை பிடித்து வருமாறு தன் படையினருக்கு உத்தரவிட்டான்.

**"இடி அமீன் காட்டுமிராண்டி. இடி அமீனின் படைகள் கறுப்புக் கொலைகாரர்கள் என்று வெள்ளையர்கள் வெளிநாடுகளில் விஷம் கக்குகிறார்கள். அந்த வெள்ளையர்களையே எங்கள் தொண்டர் படையில் சேர்த்துக் காட்டுவோம். அப்போது என்ன சொல்வார்கள் பார்ப்போம்!"** என்று அமீன் அறிவித்தான்.

கம்பலாவில் பிடிபட்ட வெள்ளையர்களிடம் **"உங்களுக்கு உயிர் முக்கியமானால் நான் சொல்வதன்படி கேளுங்கள்!"** என்றான். கேட்டார்கள்.



**"தொண்டர் படையில் சேர்ந்து, சத்தியப் பிரமாணம் செய்ய வேண்டும்!"** என்றான். செய்தனர். அக் காட்சியை படமாக்கும்படி கட்டளையிட்டான் அமீன்.

சத்தியப்பிரமாணம் செய்யத் தயாரான வெள்ளையர்களிடம்; **"நின்று கொண்டு நீங்கள் சத்தியப்பிரமாணம் செய்தால் என்ன அர்த்தம்? நானும் நீங்களும் சமம் என்றுதானே அர்த்தம். கறுப்பனுக்கு எப்போதுமே வெள்ளையன் சமனாக முடியாது. அப்படி முழந்தாளிட்டு அமருங்கடா!"** என்று உறுமினான்.

அமீன் கூறியபடியே மண்டியிட்டு அமர்ந்தனர். அமீனின் முகத்தில் குரூரமான திருப்தி குடிகொண்டது.

பரபரப்புக்காகச் செய்த செயல் என்றபோதும், வெள்ளையர்களை இம்சிப்பதில் அமீனுக்கு இயல்பாகவே ஆர்வம் இருந்தது.

படம் எடுக்கப்பட்டு முடிந்தபின்னர்தான் மண்டியிட்டிருந்தவர்கள் எழ அனுமதிக்கப்பட்டனர்.

**"ஏதோ உங்கள் நேரம் முன்னேறிவிட்டீர்கள். அதற்காக கறுப்பன் கையாலாகாதவன் என்று நினைத்துவிடாதீர்கள். உங்கள் பெண்களிடம் கேட்டுப் பாருங்கள். கறுப்பன்தான் வேண்டும் என்பார்கள். போங்கடா!"** என்றான்.

அமீன் கூறியது அவர்களுக்குப் புரியவில்லை. ஆங்கிலம் தெரிந்த அதிகாரி ஒருவனை அழைத்து, தான் கூறியதை மொழி பெயர்த்துக் கூறுமாறு சொன்னான் அமீன்.

மொழி பெயர்க்கப்பட்டபோது வெள்ளைக்காரர்களுக்கு முகம் சுருங்கிவிட்டது.

அமீன் முன்பாக வெள்ளைக்காரர்கள் மண்டியிட்ட செய்தியும், உகண்டாவின் தொண்டர் படையில் சேர்க்கப்பட்ட செய்தியும் படங்களுடன் உலகெங்கும் வெளியாகின. கண்டனங்களும் சுடச்சுட பாய்ந்து வந்தன.

தனது செயலுக்கான உலக அபிப்பிராயம் என்னவென்று அறிவதற்கு அமீனும் ஆர்வப்பட்டான்.

உகண்டா தூதரகங்கள் ஊடாக பலநாட்டு செய்தித் தாள்கள் மொழி பெயர்ப்புகளுடன் அமீனின் மேசைக்கு வந்து குவிந்தன.

**"அவர்கள் எந்தளவுக்கு கோபப்படுகிறார்களோ, அந்தளவுக்கு நான் சந்தோசப்படுவேன். அவர்கள் கோபத்திலும், அவமானத்திலும் துடிப்பதை யாராவது படமாக்கி அனுப்பினால் மாட்டுக்கறி சாப்பிட்டுக் கொண்டு பார்த்து ரசிப்பேன். அல்லது அவர்கள் கோபத்தில் என்னை எப்படியெல்லாம் திட்டித் தீர்த்தனர் என்று யாராவது வந்து கூறினால், கூடைப்பந்து விளையாடிக் கொண்டே காது குளிரக் கேட்டு ரசிப்பேன்!"** என்று அமீன் அளித்த பேட்டியால், அவனுக்கு பைத்தியம் பிடித்துவிட்டது என்றுகூட பலர் சந்தேகப்பட்டனர்.

இடி அமீனிடம் இன்னொரு கொடூரமான வக்கிரப் பழக்கமும் இருந்தது.

உகண்டாவில் இருந்த வெள்ளையினப் பெண்களில் சிலர் அமீனிடம் மயங்கியிருந்தனர்.

அவர்களுடன் உறவு வைத்துக் கொள்ளும்போது, வெள்ளையர்களை கெட்ட வார்த்தைகளால் திட்டுமாறு கூறுவான் அமீன். அவர்களும் அமீனுக்காக தங்கள் நிறத்தாரை திட்டித் தீர்ப்பார்கள்.

இவ்விவகாரம் அமீனின் ஆசைக்கு இணங்கி, பின் ஒரு கட்டத்தில் அமீனுடன் பிணக்குக் கொண்ட கிளாடியாஸ் என்ற அழகி மூலம் வெளியே கசிந்தது.

அதனை பெரிதுபடுத்தினால் தமக்குத்தான் அவமானம் என்று கருதிய வெள்ளைக்காரர்களும் அதனை பிரச்சாரப் படுத்தவில்லை.

அமீன் பெண்களிடம் எப்படி நடந்து கொள்வான் என்றும் தான் பகிரங்கப்படுத்தப்போவதாக கிளாடியாஸ் கூறினாள்.

என்ன காரணத்தாலோ பின்னர் கிளாடியாஸ் வாயே திறக்கவில்லை.

## தருவது — ரசிகன்

கிளாடியாஸ் மூலம் தன் அந்தரங்கம் வெளியாகுமோ என்று அமீன் சிறிதும் கவலைப் படவில்லை.

**"வெள்ளைக்காரி ஒருத்தி மூலம் என் திறமைகள் வெளியே தெரிந்தால் எனக்குத்தான் கௌரவம். இதற்காக கவலைப்படவேண்டியது வெள்ளைக்காரர்கள்தான். அவள் ஏன் ஒரு கறுப்பனை நாடி வந்தாள்? என்பதற்கான பதிலை அவர்கள் முதலில் கூறட்டும்!"** என்று வெகு அலட்சியமாக கூறிவிட்டான் அமீன்.

ஆபிரிக்க நாட்டு மக்களிடையே அமீன் மீதும், அவன் துணிச்சல்மீதும் அபிமானம் ஏற்படத் தொடங்கியது.

ஆபிரிக்க நாடுகளது ஒன்றியத்துக்கு அமீனை தலைவராக்கும் முயற்சிகள் நடந்தன.

அந்த ஒன்றிய மாநாட்டை முன்னிட்டு அமீன் மேற்கொண்ட அதிரடி நடவடிக்கைகள் அடுத்தவாரம்.

**(இடி தொடரும்)**

# ரஜினிக்கு குறியா?

அமெரிக்காவை மிரட்டும் தீவிரவாதி பின்லாடன். அவரது தலைக்கு குறிவைத்திருக்கிறது அமெரிக்கா.

இதனிடையே இந்தியாவில் ஒரு புரளியைக் கிளப்பிவிட்டிருக்கிறார்கள். இந்தியாவுக்குள்ளும் பின்லாடன் சதிகளில் ஈடுபட திட்டமிட்டுள்ளாராம். குறிப்பாக இந்தியாவின் பிரபல நடிகர், நடிகையர்களுக்கு உயிர் ஆபத்து ஏற்படுத்தவும் திட்டம் தீட்டப்பட்டுள்ளதாம்.



அந்தப் பட்டியலில் தமிழ்ப்பட நடிகர், நடிகையர் சிலரும் உள்ளனர். அவர்களில் முதலிடத்தில் இருப்பவர் ரஜினிகாந்த். நடிகைகளில் கௌதமியும், விஜயசாந்தியும் முக்கிய குறிகள்.

இப்படித்தான் புரளிகள் கிளப்பிவிடப்பட்டன. ஆனால் தமிழக அரசு அதனை புரளி என்று அலட்சியம் செய்யவில்லை.

ரஜினிக்கு கடும் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. இயந்திரத் துப்பாக்கி ஏந்திய



காவலர்கள் அவர் வீட்டைச் சுற்றி நிறுத்தப்பட்டுள்ளனர். ரஜினி எங்கு சென்றாலும் அவரை நிழலாக இன்னொரு வாகனத்தில் தொடர்கிறார்கள் அதிரடிப் பொலிசார்.

ரஜினி படப்பிடிப்பில் இருக்கும் போதும் கண்காணிப்பு தொடர்கிறது. படப்பிடிப்பை காண வருவோர் அலசப்படுகின்றனர்.

ஆனால், ரஜினிக்கு பின்லாடன் குறிவைப்பதற்கான தேவை எதுவும் கிடையாது. முஸ்லிம்களுக்கு எதிரான சக்திகள் கிளப்பிவிட்டுள்ள வதந்திதான் இது என்று கூறப்படுகிறது.

ரஜினி இரசிகர்கள் உட்பட தமிழ் நாட்டு மக்களிடையே பீதியையும், வெறுப்பையும் தூண்டிவிட்டு வேடிக்கை பார்க்கின்றன-சில சக்திகள். தமிழக பத்திரிகைகள் சிலவும் பரபரப்புக்கு தீனியாக இம் மாதிரி புரளிகளை நம்பி செய்தி வெளியிடுகின்றன என்று முஸ்லிம் அமைப்புக்கள் அதிருப்திப்படுகின்றன.

'முஸ்லிம்கள் தனக்கு தீங்கு செய்ய மாட்டார்கள்' என்று ரஜினி பகிரங்கமாக கூறாததும் முஸ்லிம் அமைப்புக்களிடையேயும், இளைஞர்களிடையேயும் லேசான வருத்தத்தை கொடுத்திருக்கிறது.

பாதுகாப்புக் கெடுபிடிகளால் முன்பு போல ரஜினியை சந்திக்க முடியாமல் போகும். அவருடன் நின்று புகைப்படம் எடுத்துக் கொள்ளவும் இயலாமல் போய்விடும் என்பது ரஜனி இரசிகர்களின் கவலை.

'படையப்பா'வுக்கு காவலாக ஒரு படையப்பா.

# கொடும் ரசனை



ஜெர்மனியில் ஒரு ஹொட்டலில் நடக்கும் சமாச்சாரத்தை அறிந்தால் தலை சுற்றும். காலம் கெட்டுப் போச்சு என்று தலையில் அடித்துக் கொள்வீர்கள்.

முன்னுரை போதும், விஷயத்திற்கு வருவோம்.

ஹொட்டல்களில் மேசையில் உணவு பரிமாறுவார்கள். மதுவகை பரிமாறுவார்கள். ஆனால் ஜெர்மன் ஹொட்டல் ஒன்றில் உணவு மேசையில் பெண்களை பரிமாறுகிறார்கள்.

உணவு மேசைகள் மீது அரை நிர்வாணமாக அழகிகள் சாய்ந்திருப்பார்களாம். அவர்களைப் பார்த்துக் கொண்டே மேசையில் உள்ள உணவை உண்ணலாம்.

இந்த வக்கிர ரசனைக்கு எதிராக பெண்கள் சிலர் குரல் கொடுத்துள்ளனர். ஆனால் சம்பந்தப்பட்ட பெண்களோ ஜாலியாக இருக்கின்றனர். தினம் ஒருவருக்கு 40 ஆயிரம் ரூபாவரை வருமானம் சுளையாக வருகிறதாம். "வேறு எங்கு இந்த வருமானம் கிடைக்கும்?" என்கிறார்கள்.

# காரில் துணை



பிரான்ஸ் நாட்டின் தலைநகரான பாரிஸ் நகரில் காரில் தனியாகச் செல்லும் ஆண்களுக்கு துணையாக செல்வதற்காக வீதிகளில் அழகிகள் நிற்பார்கள்.

தூர இடங்களுக்குச் செல்லும் ஆண்கள் இவர்களை காரில் ஏற்றிக்கொண்டு பேச்சுத் துணையாகவும், மற்றும் பல சமாச்சாரங்களுக்கும் துணையாக்கிக்கொள்வர்.

இந்தத் தொழிலில் ஈடுபடும் அழகிகளுக்கு பொலிஸ் பயமே கிடையாது. ஏனெனில் அரசே இத் தொழிலை அங்கீகரித்துள்ளது.

அதனால் இவர்களுக்கும் பாரிசில் வருமானவரி இருக்கிறது. அரச உத்தியோகம் போலவே இந்த உடற்தொழிலும் கருதப்படுகிறது.

# இலண்டனில் அதிர்ச்சி

இங்கிலாந்தில் குறைந்த வயதான கர்ப்பிணிகள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

பதினாறு வயதுக்குட்பட்ட மாணவிகள் கர்ப்பமடைவது அதிகமாகி பெற்றோர்கள் கவலையடைந்துள்ளனர்.

இதனையடுத்து குறைந்த வயதில் கர்ப்பம் தரிப்பதை தடுக்கும் நடவடிக்கைகள் எடுப்பதற்கு நான்கு விசேஷக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

1996ம் ஆண்டு அதிகபட்சமாக எட்டாயிரத்தி 800 மாணவிகள் கர்ப்பமடைந்தனர் என்பது அதிர்ச்சியான புள்ளி விபரம்.

# பணம் பத்தும் செய்யும்



பிரபல ஹொலிவூட் நடிகர் டாம் க்ரூயிஸ் பணத்தை வைத்துக்கொண்டு, அதனை என்ன செய்வது என்று தெரியாமல் தவித்தார். ஒருவிதமாக வழி கண்டுபிடித்து விட்டார்.

147 கோடி ரூபாய் செலவில் ஆடம்பர விமானம் ஒன்றை வாங்கியிருக்கிறார். சகல சௌகரியங்களும் இதில் இருக்கின்றன.

நவீன சமையல் அறை, மூன்று நவீன படுக்கை அறைகள், பளிங்கு கற்கள் பதித்த மதுபான விடுதி, தியேட்டர் என்று பற்பல வசதிகள்.

தனது இரண்டு குழந்தைகள் விளையாட தங்க தகடுகள் பொருத்தப்பட்ட மேசைகள், சோபாக்கள், விளையாட்டு அரங்குகள் என்று அட்டகாசப்படுத்தியுள்ளார்.

மாதம் ஒன்றுக்கு விமானத்தின் பராமரிப்பு செலவு மட்டும் 25 இலட்சம் ரூபாய். இத்தனை வசதிகள் போதாது என்று அரேபிய மன்னர்களதும், உலக மகா பணக்காரர்களதும் ஜெட் விமானங்களில் உள்ளது போன்ற பல வசதிகளை செய்யவும் நிறுவனம் ஒன்றுடன் ஒப்பந்தம் செய்திருக்கிறாராம். ம்... பெருமூச்சுத்தான் வருதய்யா!



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

## பயமுறுத்தும் பக்தி

→ திருவிழாக்களில் அலகு குத்தும் பக்தர்களை பார்த்திருப்பீர்கள். உடம்பில் வேல் குத்திக் கொண்டு ஆடுகிறவர்களை மிரட்சியுடனும் பிரமிப்புடனும் பார்த்திருப்பீர்கள்.

ஆனால் படத்திலுள்ள பக்தரைப் பார்த்தால் 'இப்படியும் தேவைதானா?' என்ற சிந்தனை எழுகிறதல்லவா. இவர் தாய்லாந்து நாட்டு பக்தர். அங்கும் அலகு குத்திக் கொள்வார்கள்.

இவர் இரண்டு புல்லாங்குழல்களை தனது கன்னத்தில் அலகு குத்தி பக்தர்களையும் அதிர்ச்சியடைய வைத்துவிட்டார்.

எப்படித் தாங்கிக் கொண்டார்? என்பது ஆச்சரியம்தான். ■






## கால் இரண்டு

↑ இயற்கையின் விசித்திரங்களில் ஒன்றுதான் இதுவும். இந்தியாவில் கேரள மாநிலத்தில் இந்த விசித்திர பசுக்கன்று பிறந்துள்ளது.

இதன் தாயான ஜெர்சி பசு இதற்கு முன்னர் இரண்டு குட்டிகளை ஈன்றது. இரண்டும் காளை. அதனால் பெண் கருவை அதன் உடம்பில் ஏற்றி செயற்கை முறையில் கருத்தரிக்க வைத்தனர். ஆனால் இம்முறையும் காளைதான் ஈன்றது. விசித்திரமான காளை. முன் கால்கள் இரண்டும் இல்லை. பின் கால்கள் இரண்டுடன் மட்டும் பிறந்துள்ளது.

தாய்ப்பசு தினமும் 12 லீட்டர் பால் சுரக்கிறது. மாட்டு உரிமையாளர் குட்டியை தூக்கி பிடித்து பால் குடிக்க வைக்கிறார். மாட்டுக்கு நாலு கால் என்பது இந்த மாட்டுக்கு பொருந்தாது. ●



## விரைவில் வருகிறது


↓ மணியும் பார்க்கலாம். தொலைபேசி மணியடித்தால் காதில் வைத்தும் பேசலாம். ஒரு பொருள் இரு உபயோகம். இதற்கு 'வோச் டாக்' என்று பெயரிடப்பட்டுள்ளது.

வீட்டில் உள்ள கோர்ட்லெஸ் ஃபோனுடன் மேலதிக ரிசிவராக இதனைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

சுவிட்ஸர்லாந்தைச் சேர்ந்த எஸ்.எம்.எச். நிறுவனம் சமீபத்தில் இதனை தயாரித்துள்ளது. விரைவில் இதனை விற்பனைக்காக உற்பத்தி செய்யப் போகிறார்கள். ●



## தகவல் பெட்டி



## யானைக் கார்

↑ உலகில் மிகச் சிறிய கார். மிக நீளக்கார், மிக வேகக் கார் என்று பல தரப்பட்ட தகவல்களை இப் பக்கத்தில் தந்திருக்கிறோம். ஆனால் உயரக்கார் இடம் பெறவில்லை. அந்தக் குறையும் இதோ போயாச்சு.

உலகில் மிக உயரமான கார் இதுதான். ஒரு பஸ்சின் உயரத்தில் முக்கால் பங்கு இருக்கிறது.

இந்தக் காருக்கு 'ஜிம்' என்று செல்லமாக பெயரிட்டுள்ளனர். தென்னாபிரிக்கா ஜோகன்ஸ் பேர்க் நகரில் நடந்த கார் கண்காட்சியில் இக்கார் இடம்பெற்றது. வீதியில் போகும்போது யானை ஒன்று செல்வதுபோல தோன்றும். ●

↓ இந்தக் கட்டழகியின் கிட்டத்தில் இருப்பது நவீன சைக்கிள். 'பைபர்' என்று பெயர் சூட்டியுள்ளனர்.

எடை 12 கிலோ மட்டும். விசேஷம் என்னவென்றால், கார்பன் மற்றும் உலோகம் கலந்து இச் சைக்கிள் தயாரிக்கப்பட்டுள்ளது. கரடு முரடான சாலையிலும் வேகமாக செல்லக்கூடிய முறையில் உருவாக்கப்பட்டுள்ளது.

ஜெர்மன் நாட்டு தயாரிப்பு. விரைவில் நம் நாட்டுக்கும் இறக்குமதியானால் தற்போதைய சாலை நிலவரங்களுக்கு ஈடு கொடுக்கும்.

## நவீன சைக்கிள்



## பூசணி மன்னர்

↑ 'உலகம் முழுவதையும் பூசணிக்காய் (பறங்கிக்காய்)களால் நிரப்ப வேண்டும்' என்ற ஆசை கொண்ட மனிதர் இவர். அதனால் மிகப்பெரிய அளவிலான பூசணிக்காய்களை உற்பத்தி செய்தே தொடர்ந்து பல வருடங்களாக சாதனை படைத்து வருகிறார். இவரது பெயர்: ஹோர்வாட் டில். கனடாவைச் சேர்ந்தவர். 'மிகப் பெரிய பூசணிக்காயை உருவாக்கினால் என்ன?' என்ற சிந்தனையில், தனது ஃபண்டிக்குடாவிலுள்ள 90 ஏக்கர் பண்ணையில் தானாகவே பரிசோதனைகளை நடத்தினார்- வெற்றி பெற்றார். இன்று 'பூசணிக்காய் மன்னர்' என்ற பட்டத்தையும் பரிசுகளையும் பெற்ற உலகப் பிரசித்தி பெற்று பண்ணையாளராகிவிட்டார்.

பெரிய பூசணிக்காய் உற்பத்தி செய்வதை 70ம் ஆண்டுகளில் ஒரு பொழுது போக்காக டில் ஆரம்பித்தார். 1979ம் ஆண்டு 198 கிலோ எடையுள்ள பூசணிக்காயை உற்பத்தி செய்து உலக சாதனையை நிலை நாட்டினார். இதோ இவ்வருடம் அவருடைய பண்ணையில் உற்பத்தியான 400 கிலோ எடை கொண்ட பூசணிக்காயுடன் போஸ் கொடுக்கிறார்.

டில் தான் உற்பத்தி செய்யும் பூசணிக்காய் போன்று பெரிய காய்களை உலகனைத்துமுள்ள பண்ணையாளர்கள் உற்பத்தி செய்ய வேண்டும் என்பதற்காக- இவற்றுக்கான விதைகளை உற்பத்தி செய்து உலகின் பல நாடுகளுக்கும் அனுப்பி வருகிறார்.

64 வயதான இச்சாதனையாளரைத் 'தரிசிக்க' பல இடங்களிலிருந்தும் தினசரி 'யாத்திரீகர்கள்' வந்து கொண்டிருக்கின்றனர்.

தகவல்: விக்கி முத்தையா-கனடா.



படிப்பகம்

www.padippakam.com

திரையுலக மறுபக்கம் 78

# மறைந்திருந்து படமாக்கிய காட்சிகள்

## நடிகையின் படத்திற்கு தடை

தமிழ்ப்பட பிரபல நடிகை ஒருவர் (பூ நடிகை) நடித்த நீலப் படம் பற்றி தமிழகத்தில் பரபரப்பான செய்திகள் வெளியாகின.

இது தொடர்பாக தமிழக வார இதழ் ஒன்று வெளியிட்டுள்ள தகவல் அதிர்ச்சியளிக்கிறது. அதனை பார்ப்போம்.

"தற்போது வெளிப்புறப் படப்பிடிப்புக்கள் அதிகம் நடைபெறுகின்றன. ஸ்டுடியோக்களில் சினிமா எடுக்கப்பட்ட காலம் மலையேறிவிட்டது. சில வெளியூர்களில் படப்பிடிப்புக்கு வரும் நடிகர், நடிகைகள் மட்டும் தங்குவதற்கு என்றே கட்டப்பட்ட விடுதிகள் உள்ளன.

இங்கே நடிகர், நடிகையர் தங்களுக்கு ராசியானதென்று நம்பும் சில அறைகளும் இருக்கின்றன.

இந்த எண்ணுள்ள அறைதான் வேண்டும் எனப் பிடிவாதமாக சில நடிகைகள் கூறுவதும் உண்டு. அவர்களுக்காகவே நிரந்தர அறைகளும் உண்டு. அதனால் குறிப்பிட்ட ஊருக்கு வரும்போது இன்ன நடிகை, இந்த அறையில்தான் தங்குவார் என்கிற தகவல் அந்தந்த லொட்ஜ்களில் பணிபுரியும் சிலருக்கு உறுதியாகத் தெரியும்.

இங்கேதான் வருகிறது வில்லங்கம். சில விடுதிகளில் வேலை பார்க்கும் ஊழியர்கள் சென்னையில் உள்ள நீலப்படம் தயாரிக்கும் கும்பலிடம் விலை போயிருக்கிறார்கள். அவர்கள் போட்டுக் கொடுத்த திட்டப்படி செயற்பட்டிருக்கிறார்கள்.

### எப்படி எடுக்கிறார்கள்?

நடிகைகளே அறியாமல் அவர்களை எப்படி படம் பிடிக்கிறார்கள்? அந்தப் படங்கள் நீலமாக நிறம் மாறுவது எப்படி?

நடிகையர் தங்கும் விடுதி அறைகளின் வெளிப்புறச் சன்னலில் சில அட்ஜெஸ்ட்மெண்டுகள் செய்துவிடுவார்கள். அதாவது உள்ளிருந்து பார்த்தால் அது மூடிக்கொண்டிருப்பது மாதிரி தோன்றும். ஆனால் ஜன்னலில் இடைவெளி இருக்கும்.

அந்த சிறிய இடைவெளி வழியே கமிராவை வைத்துப் படம் எடுப்பார்களாம்.

நடிகைகள் படப்பிடிப்பு முடிந்து வந்து உடைமாற்றும் காட்சியை முதலில் படமாக்கி விடுவார்களாம். சிலர் குளித்து முடித்து பவுடர் போட்டுக் கொண்டு இரவு உடை அணிவதுவரை காட்சிகள் நீளுமாம்.

நடிகை படுக்கையில் படுத்துக்கொண்டு விளக்கை அணைத்த பின்னர் காட்சிமாறும். வேறு மாதிரியான காட்சிகள் அந்த தொகுப்போடு இணைக்கப்படுமாம். அசப்பில் குறிப்பிட்ட நடிகையின் ஜாடையில் இருப்பவர்களை மேற்படி காட்சிகளுக்கு பயன்படுத்துவார்களாம்.

சம்பந்தப்பட்ட நடிகைகளுக்கு இது தெரிய வாய்ப்பில்லை. பாவம். தெரியாமலேயே ஒரு ஈனச் செயலுக்கு அவர்களது உடம்பு உட்பட்டிருக்கிறது.

'பிரபல நடிகைகள் ஆபாசமாக நடித்துள்ளனர்' என்று கூறி விற்கப்படுவதால் இதுபோன்ற வீடியோ கசட்டுக்கள் பெரிய விலைக்கு விற்கப்படுகின்றன. இவற்றின் வாடகையும் அதிகம்.

### கடனுக்கு பதிலாக

இரண்டு எழுத்து நடிகை அவர். இடையே மார்க்கெட் சரிந்து, தற்போது மீண்டும் வரிசையாக படங்கள் கிடைத்திருக்கின்றன. இயக்குநர் ஒருவரை அவர் காதலிப்பதால் நடிகர்கள்கூட அவர் விருப்பம் இல்லாமல் நெருங்குவதில்லை.

அந்த நடிகை சொந்தமாக சில படங்கள் எடுத்தார். அவரது காதலர் தான் இயக்கினார். அத்தனையும் தோல்வி கண்டன.

பிரபல வட்டிக்காரர் ஒருவரிடம் கடன் வாங்கியிருந்தார் நடிகை. அந்த வட்டிக்காரருக்கு நடிகைமீது ஆசை.

நடிகையின் படங்கள் தோல்வி கண்டதும் குசியான அந்த வட்டிக்காரர், பணம் கேட்டு நச்சரித்தார். அந்த நச்சரிப்பு தாங்காமல் நடிகை தன்னை கைக்குள் போட முயற்சிப்பார் என்று நினைத்தார். நடிகையோ அதற்கு தயாரில்லை.

பொறுத்துப் பார்த்த வட்டிக்காரர் இறுதியில் தன் ஆசையை நேரடியாகவே கூறியிருக்கிறார். "ஒரே ஒரு இரவு மட்டும் வட்டியும் முதலுமாக சுகம் தந்துவிடு" என்று கேட்டதுடன், நடிகையின் உதடுகளின் அழகையும் பலவாறு ஆபாசமாக விபரித்தாராம்.

உதையாத குறையாக நடிகை அவரை விரட்டியதோடு, 'பணம் தர முடியாது உன்னால் முடிந்ததை பார்த்துக்கோ' என்றும் ஆத்திரத்தில் கூறிவிட்டார்.

அதனையடுத்தே நடிகை தனக்கு சேரவேண்டிய பணத்தை தரும்வரை அவர் நடித்து வெளியாகும் படங்களுக்கு நீதிமன்றத்தில் தடை வாங்கினார் அந்த வட்டிக்கார்ரர். முக்கிய நாளில் வெளியாக இருந்த படங்கள் நின்று போயின. குறிப்பிட்ட தடை வாங்கக்கூட சில நடிகைகளை பயன்படுத்தித்தான் காரியம் சாதித்தாராம். இல்லாவிட்டால் அப்படியொரு தடை சட்டத்தில்கூட இடமில்லையாம்.

"மீண்டும் எழும் தருணத்தில் தன் எதிர்காலத்தை கெடுக்கிறாரே" என்று கவலைப்படுகிறார் இரண்டெழுத்து நடிகை.



விஜயசாந்தி
படம் ஆயுதப்பண்டை



சிரஞ்சீவி - சாகஷி
படம் மாஸ்டர்

## மினி சினி

- லிவிங்ஸ்டன் கதாநாயகனாக நடிக்கும் 'உனக்கும் எனக்கும் கல்யாணம்' படத்தில் விஜயகாந்த் கௌரவ வேடத்தில் நடிக்கிறார். இப்படத்தை விஜயகாந்தின் நண்பர் இப்ராஹிம் ராவுத்தர் தயாரிக்கிறார்.
- 'உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்' படத்தில் கார்த்திக்குடன் இணைந்து நகைச்சுவை வேடத்தில் அசத்திய ரமேஷ் கண்ணா, தற்போது 'படையப்பா' படத்திலும் நடிக்கிறார்.
- 'டூயட்' படம் மூலம் தமிழில் அறிமுகமாகிய பிரகாஷ் ராஜ் முதன் முறையாக தமிழ்ப் படம் ஒன்றைத் தயாரிக்கவுள்ளார். அவரது பட நிறுவனத்தின் பெயர்: டூயட் ஃபிலிம் இண்டர்நஷனல்.
- 'வேடன்' படத்திற்குப் பின் இயக்குநர் சுரேஷ் கிருஷ்ணாவும் சரத்குமாரும் இணையும் படம் 'ஒருவன்.' இதில் சரத்குமாருக்கு ஜோடியாக லைலா நடிக்கவுள்ளார்.
- கே. சுபாஷ் இயக்கத்தில் பிரபுதேவா நடிக்கும் 'ப்ரியன்' படத்தின் பூஜை அண்மையில் போடப் பட்டது. இப்படத்தின் படப்பிடிப்புக்க்ள் தொடங்கும் முன்னரே படத்தின் பெயரை 'நினைவிருக்கும் வரை' என்று மாற்றிவிட்டார்கள்.
- அகத்தியன் இயக்கத்தில் பிரசாந்த்-இஷா கோபிகர் நடிக்கும் 'காதல் கவிதை' படப் பிடிப்புக்கள் இலண்டனில் நடப்பது தெரிந்ததே. மேலும் இப்படத்தில் இடம்பெறும் பாடல் காட்சியொன்று மொரோக்காவில் படமாக்கப் பட்டுள்ளது.
- பல வருடங்களுக்கு முன் பாக்யராஜ் இயக்கிய நடித்த 'இன்றுபோய் நாளை வா' படம் தற்போது 'நை படோஷன்' என்ற பெயரில் இந்தியில் தயாராகிறது. பாக்யராஜ் நடித்த வேடத்தில் இந்தியில் நடிப்பவர் அப்பாஸ்.
- 'மின்சாரக் கனவு' படத்தை இயக்கிய ராஜீவ் மேனன் அடுத்து இயக்கும் படத்தின் பெயர் 'தீக்குள் விரலை வைத்தால்.' இந்தப் பெயரை வைத்தவர் யார் தெரியுமா? எழுத்தாளர் சுஜாதா.
- 'ராமன் அப்துல்லா' பட நாயகி ஈஸ்வரி ராவின் தங்கை தனுஜா பார்த்திபன் கதாநாயகனாக நடிக்கும் 'காக்கைச் சிறகினிலே' படத்தின் மூலம் தமிழில் அறிமுகமாகிறார். இவர் ஏற்கனவே 'பரதேசி' என்ற தெலுங்குப் படத்தில் நடித்துள்ளார்.
- 'உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்' படத்திற்குப் பின் விக்ரமன் இயக்கும் படத்தை தயாரிப்பவர் ரவிச்சந்திரன். இவர் ரஜினி நடித்த 'நாட்டுக்கொரு நல்லவன்' படத்தைத் தயாரித்தவர்.

### ஜனவரி நிலவே

'காதல் கோட்டை' படத்திற்கு பாடலாசிரியர்கள் எழுதிய பாடல்கள் இயக்குநர் அகத்தியனுக்கு பிடிக்கவில்லை. அதனால் 'நலம் நலமறிய ஆவல்' பாடலை தானே எழுதினார். பாடல் சூப்பர் ஹிட்.

இயக்குநர் எஸ்.பி. ராஜ்குமார் இயக்கியுள்ள படம் 'என் உயிர் நீதானே' இப்படத்திற்காக பாடலை எழுதவிருந்த கவிஞர் சரியாக ஒத்துழைக்கவில்லை. அதனால் தானே பாடலை எழுதினார் ராஜ்குமார்.

"ஜனவரி நிலவே நலம்தானா? ஜனகனின் மகளே சுகம்தானா?" என்று தொடங்கும் பாடல்தான் அது. பாடல் ஹிட்.

இனிமேல் தான் இயக்கும் படங்களுக்கு பாடல் எழுதப் போகிறார் எஸ்.பி. ராஜ்குமார்.




ஈஸ்வரி ராவ்
படம் குருபார்வை



படிப்பகம்

www.padippakam.com

## ...ய அம்பிகா

...ஊர்வசியின் 'பஞ்சமி' ...காட்சி நாடகத்தில் நடிக் ...ம்பிகா. நம் நாட்டிலும் ...வி.யில் ஒளிபரப்பாகிறது. ...னோ என்று சந்தேகம். அந்தமாதிரி புஸ்ஸென்று ஊதியிருக்கிறார்.

அமெரிக்காவில் இருந்து திரும்பியபோது அளவாகத்தான் இருந்தார். தமிழ்நாட்டுக்கு சென்றதும் பல்வேறு சந்தோசங்களால் ஊதிவிட்டார். நடக்கவே சிரமப்படுகிறார்.

## அசத்தும் நாயகி

மனோஜ்குமார் இயக்கத்தில் உருவான படம் குரு பார்வை. இப்படம் தமிழில் இன்னமும் வெளியாகவில்லை. ஆனால் தெலுங்கில் தயாராகிவருகிறது. பிரகாஷ்ராஜ் நடித்த பாத்திரத்தில் வெங்கடேஷ் நடிக்கிறார். தமிழில் ஈஸ்வரிராவ் நடித்தார். இவர் பாலுமகேந்திராவுடன் கிசுகிசுக்கப்பட்டவர். அவரால் அறிமுகமானவர். தற்போது பயங்கர கவர்ச்சிகாட்டி அசத்துகிறார்.

## காதோடு சொல்லுகிறோம்

நட்சத்திர தம்பதிகள் வீட்டில் மேலும் ஒரு நடிகை உருவாகிவிட்டாராம். நட்சத்திரத் தம்பதியான மஞ்சள் நடிகையின் அபிமான இயக்குநர் மூலம் அந்த நடிகை அறிமுகமாகிறார். தமது அபிமான இயக்குநரிடம் புதிய வாரிசை தனிமையில் டிஸ்கஷன் செய்ய வைத்தாராம் மஞ்சள் நடிகை. புது வாரிசு அமெரிக்காவில் படித்தவர். நட்சத்திரத் தம்பதிக்கு இப்படி ஒரு வாரிசு இருப்பதே இதுவரை இரகசியமாக இருந்ததாம்.

மூன்றெழுத்து 'மா' நடிகைக்கு மாவீர நடிகர் தான் இப்போது எல்லாமே. தீபாவளியன்று கார் ஒன்றில் பட்டாசும், வாழ்த்துக் கடிதமும் வந்திறங்கியது. 'சர' நடிகர்தான் அனுப்பியிருந்தார். அதனை தூக்கி எறிந்தாராம் மாவீர நடிகர். நண்பர்களாக இருந்து 'நடிகர் சங்க' விவகாரங்களில் ஒன்றாக நின்றவர்கள். ஒரே கட்சியைச் சேர்ந்தவர்கள் நடிகைக்காக முரண்பட்டு நிற்கிறார்கள். 'மா' நடிகை ஆட்டிப் படைக்கிறார்.

'பூ' நடிகைக்கும் சுந்தரமான இயக்குநருக்கும் இடையே விரிசல் அதிகமாகி வருகிறதாம். பெண் கலைஞர்களுடன் வயது பேதம் இல்லாமல் இயக்குநர் சகஜமாக, ஆழமாக பழகுகிறார் என்று குற்றம் சாட்டுகிறாராம் 'பூ' நடிகை.

'சங்க' நடிகை மூன்றெழுத்து இளம் நாயகனை சமீபத்தில் 'டிஸ்கஷனுக்கு' அழைத்திருக்கிறார். சலித்துப் போய்விட்ட நாயகன், சுற்றிவளைத்து மறுப்பு தெரிவித்துவிட்டாராம். 'நான் நினைத்தால் இன்னொரு மோனிகாவாக மாற முடியும். கிளின்டன் பட்டபாடு தெரியாதா?' என்று சக நடிகை ஒருவரிடம் வீறாப்பாக கூறினாராம் சங்க நடிகை.

மூன்றெழுத்து 'வாளி' நடிகைக்கு இப்போது கிடைத்திருப்பவர் மூன்றெழுத்து நடிகர். அவரது பெயர் 'த்' என்ற எழுத்தில் முடிவு பெறுகிறது. நடிகையின் உபசாரத்தில் பெரும் பெரும் நடிகர்களே மயங்கினார்கள். இவர் எம்மாத்திரம். சீமைப் பசுவின் மயக்கத்தில் 'மறவாதே கண்மணியே' என்று புலம்புகிறாராம்.

நிதி நிறுவன அதிபருடன் மீன் நடிகையின் உல்லாசம் தெரிந்து போனதால், அரசியல்வாதியொருவர் மூலம் பொலிசாரை சமாளித்தனராம். இல்லையெனில் நடிகையும் விசாரணையில் சிக்கியிருப்பாராம். பொலிசாரை சமாளித்த அரசியல்வாதியை நடிகை தனியாக சமாளித்து கணக்கை தீர்த்துக் கொண்டாராம்.


மோகன்லால் - மீனா
படம்: வர்ணப்பகிட்டு (மலையாளம்)

## 'வீக்' நடிகைகள்

ஐஸ்வர்யா ராய், மாதுரி டிக்ஷித், மம்தா குல்கர்னி, மதுபாலா ஆகியோர் விக் அணிந்தே படங்களில் நடிக்கின்றனர்.

இவர்கள் அணியும் 'விக்' ஒவ்வொன்றும் 20 ஆயிரம் முதல் 40 ஆயிரம் ரூபாவரை போகிறது. விக்டர் மற்றும் டானியல் பெரீரா என்ற இரு சகோதரர்கள் இவற்றைத் தயாரிக்கிறார்களாம்.

இந்த விக்குகளை அணிந்துகொண்டு மழையில் நனையலாம். குலுங்க குலுங்க நடனம் ஆடலாம். நீச்சல் காட்சியில் நடிக்கலாம். எந்தப் பிரச்சனையும் இல்லை.

## கருணாநிதி கோபம்

'தேசியகீதம்' படத்தில் முதலமைச்சரை குடும்பத்தோடு கடத்திப் போகிறார் முரளி. ஏழை மக்கள் படும் கஷ்டங்களை அனுபவிக்க வைத்து முதலமைச்சரை திருத்துகிறார்கள். அதுதான் கதை.

இப்படம் தன்னைக் கிண்டல் செய்வதாக நினைத்து கலைஞர் கருணாநிதி டென்ஷனாகி விட்டார். சேரனுக்கு மறைமுக மிரட்டல்கள்.

பாரதிராஜாவின் ஏற்பாட்டால் கருணாநிதியை சந்தித்தார் சேரன். "உங்களை மட்டுமல்ல, தனிப்பட்ட எவரையுமே தாக்கவில்லை" என்று சேரன் கூறியும் கருணாநிதி சமாதானமாகவில்லை.

"தனது படங்களில் அரசியல்வாதிகளை சாடிய கலைஞர் கருணாநிதி, இப்போது அடுத்தவர்களது எழுத்து சுதந்திரத்தில் தலையிடுவது சரியா?" என்று சேரன் இரகசியமாகக் குமுறுகிறாராம்.

## பிழைத்தார்

சென்னையில் நீலப்படம் தயாரிக்கும் கும்பல் மாட்டிக் கொண்டது. இக் கும்பலோடு பல வழிகளில் தொடர்பு வைத்திருந்த நடிகைகள் பட்டியல் பொலிசாரிடம் இருக்கிறது.

இதனையடுத்து முன்னணி நடிகை ஒருவர் தூக்க மாத்திரை விழுங்கி தற்கொலைக்கு முயன்றாராம். அந்த ஆறெழுத்து நடிகைக்கு சென்னையில் உள்ள பிரபல தனியார் மருத்துவமனையில் சிகிச்சை கொடுத்து உயிர் பிழைக்கவைத்தார்களாம்.

## ரசிகை

'படையப்பா'வில் ரஜினியின் ஜோடியாக நடிப்பதை எண்ணி வானத்தில் மிதக்கிறார் ரம்யா கிருஷ்ணன். தற்போது கார்த்திக்குடன் 'அத்தை மகன்' படத்தில் நடித்துக் கொண்டிருக்கிறார்.

ரம்யாவுக்கு நாய்கள் என்றால் கொள்ளை கொள்ளையாக ஆசை. ஒரு டஜன் நாய்கள் வளர்க்கிறார். ஒவ்வொன்றும் ஒவ்வொரு ரகம். ஓய்வு கிடைத்தால் நாய்களை கொஞ்சிக் கொஞ்சியே பொழுதைக் கழிக்கிறாராம்.

## தாடி

'இரணியன்' படத்தில் முரளிக்கு வித்தியாசமான வேஷம் தாடி வைத்துக் கொண்டு நடிக்கிறார். அதற்காக நிஜமாகவே தாடி வளர்க்கிறார்.


வினீத் - ரவளி
படம்: மறவாதே கண்மணியே

## முதல்வன்

இயக்குநர் ஷங்கர் 'முதல்வன்' படபூஜையை அமர்க்களப்படுத்திவிட்டார். அழைப்பிதல் செலவு மட்டும் நம்நாட்டு மதிப்பில் நாலு இலட்சம் ரூபாய்.

அர்ஜுன், மனிஷா கொய்ராலா இருவரையும் அழைப்பிதழுக்காக படம் எடுக்க மட்டும் ஆறு நாட்கள் பிடித்ததாம். அப்படியானால் படம் எடுத்து முடிக்க எத்தனை மாதமாகுமோ?!

## முறியடிக்கும் 'படையப்பா'

இதுவரை தமிழில் வெளியான படங்களின் வசூல் சாதனையை படம் வெளியாக முன்னரே முறியடித்துள்ளது படையப்பா.

உள்நாட்டு உரிமை, வெளிநாட்டு உரிமை, தெலுங்கு, மலையாள உரிமை, ஆடியோ விற்பனை உரிமை என்று 20 கோடி தேறப்போகிறது. ஆடியோ விற்பனை உரிமை மட்டும் 2 கோடியே 80 இலட்சத்துக்கு வாங்கப்பட்டுள்ளது. நம்நாட்டு பண மதிப்பில் 4 கோடியைத் தாண்டும்.

மாபெரும் எதிர்பார்ப்புக்களுடன் தயாராகிக் கொண்டிருக்கிறது படையப்பா.

## கனகா கட்டளை

மார்க்கெட் இழந்த நடிகைகளில் ஒருவராகி விட்டார் கனகா. அதனால் தாயும், மகளும் நாடு நாடாக சென்று 'கலைச் சேவை' செய்கிறார்கள். குறைந்த செலவில் கலைச்சேவை பெற தொழிலதிபர்கள் சிலர் இவர்களை தமது நாடுகளுக்கு அழைக்கிறார்களாம்.

அதியமானின் 'தலை முறை' படத்தில் ஒரே ஒரு பாடல் காட்சியில் நடித்திருக்கிறார். கனகாவுக்கு உதவியாக வரும் தாய்க்குலம் மந்தகாசமான சுதியில் காணப்படுவாராம்.

இதனால் கனகாவுக்கு சங்கடம். 'மாலை ஆறு மணிக்கு முன்பாக சுதி ஏற்றக்கூடாது' என்று கட்டளை போட்டுள்ளாராம் கனகா.



## ...றும் சங்கவி

...சமீபத்தில் மாட் ...விடியோ கசட் ...காரத்தில் உங் ...கு ஒரு பிரச் ...யும் இல் ...." என்று சங் ...ம் கேட்டார் ...தபர். வந் ...பம். ...கு தய ...டிகைகள் ...கேட்க ...தானே ...சேட் ...மல் ...க்கும் ...வரு ...கள் ...ர

## விஜயகாந்த்-குஷ்பு-சூர்யா

எஸ்.ஏ.சந்திரசேகரின் இயக்கத்தில் நடித்த படங்கள்தான் விஜயகாந்தின் முன்னேற்றத்திற்கு படிக்கட்டுக்களாக அமைந்தன. விஜயகாந்த் நடித்த 17 படங்களை சந்திரசேகர் இயக்கியுள்ளார்.

சந்திரசேகர் இயக்கிய 'சட்டம் ஒரு இருட்டறை' என்ற படம் விஜயகாந்துக்கு திருப்பம் கொடுத்த படம். அதன் பின்னர்தான் முன்னணி கதாநாயகனாக இனம் காணப்பட்டார் விஜயகாந்த்.

சந்திரசேகர் இயக்கத்தில் விஜயகாந்த் நடித்த 'செந்தூரபாண்டி' படத்தில் விஜய் இரண்டாவது கதாநாயகனாக நடித்தார்.

தற்போது விஜய் முன்னணியில் இருந்தாலும், எஸ்.ஏ.சந்திரசேகர் விஜயகாந்த்தை மறக்கவில்லை. அவர் இயக்கும் புதிய படத்தில் விஜயகாந்த்-குஷ்பு ஜோடி சேருகின்றனர்.

கதை, வசனம், இயக்கம் ஆகிய மூன்று பொறுப்புக்களையும் ஏற்றுள்ளார் சந்திரசேகர். இப்படத்தில் இரண்டாவது கதாநாயகனாக நடிப்பவர் விஜய் அல்ல. வேறு யார் என்கிறீர்களா? சூர்யா.

இப்படத்தை விஜயகாந்திடம் பல காலமாக உதவியாளராக இருந்த சுப்பையா என்பவர் தயாரிக்கிறார். படத்திற்கு இன்னமும் பெயர் சூட்டவில்லை.

| முகப்பில் | ரஜினி<br>படம்: நாட்டாமை (இந்தி) |
|---|---|
| | தேவயாணி |


படிப்பகம்

www.padippakam.com

தேன் கிண்ணம்

## என் தேசத்து நினைவுகளும் நீயும்!

உஷ்ணம் உணர்வுகளைச்
சுட்டெரிக்கின்றது;
வாழ்வின் எச்சங்கள்
பற்றிய மேலெண்ணம்
உந்தி மறைகின்றது!

இருளின் பிரவாகம்
எங்கணும் வியாபித்து
நீள்கிறது!

உன் கண்ணீரை
அழிப்பதற்காகவாவது
நான் தொலைதூரம்
போகத்தான் வேண்டும்!

இரு.......!
என் தலையணைகளுக்கு
கட்டளையிடுகிறேன்–
ஒரு சுயசரிதம்
எழுதச் சொல்லி...!

இங்கு தண்டவாளங்களுக்கும்
அதிக தூரமில்லை;
எந்த வெண் கோடும்
பிரகாசமாக இல்லை!
ஏன்.....
எங்களூர்ச் சூரியனும்
பகலில் வருவதில்லை!

பேய்க் காற்றும்
பெருங்குளிரும்
தினமும் பயமுறுத்திவிட்டு,
தங்கியே விடுகின்றன.
விடியல் பற்றிய சிந்தனை
யாருக்குத்தான் வரும்...?

மனிதர்களை எங்கே கண்டேன்...!
நாடி நரம்புகள்கூட
இயந்திரமோ?

கொந்தளித்துப் போகிறது மனம்–
மின்சாரக் கதிரையில்
அமர்ந்திருப்பதுபோல...
சந்தோஷத்தை அழைக்க ஆசை;
எங்கேயோ
ஒளிந்து கொண்டு விட்டதே...!

மனம் பிழியும்
அவலங்களை எல்லாம்
எந்த ஆறுதல்கள்
அமைதிப்படுத்தும்...!

சுடரொளி காட்ட
எந்த நட்சத்திரங்களும்
முன்வராத போது,
வாழ்க்கை இன்னும்
அற்பமாய்த் தெரிகிறது!

அடிக்கடி என் தேசம்
அபாய அறிவிப்பு விடுக்கும்
போதெல்லாம்
இதயம் உதறி விடுகிறது!

நீயும் என் தேசமும்
அதன் நினைவுகளும்
ஐரோப்பாவும் பின்னரொன்றுமாய்
எனக்கு அமைதி வருகுதில்லை!
இரு.....!
என் தலையணைகளுக்கு
கட்டளையிடுகிறேன்!

ஹரீரா அனஸ்–இலண்டன்.

## விண்ணப்பம்

நீ
பிரியா விடையென்றுதான்
எழுதியிருந்தாய்!
எப்படி?
பிரிவோம் என்று
நினைக்கவேயில்லை!
••
உன் வரவுக்காய்
எத்தனை தரம்
தெருவில்–
பூத்திருக்கிறேன்...
என்று–
உனக்குப் புரியுமா?
••
காயங்களைத்தான்
என்னுள்–
ஒவ்வொன்றாய்
அடுக்கினாயே தவிர...
ஏன்?
நிஜங்களையும்
எரித்தாய்?
••
துயர் நிறைந்த...
பொழுதுகளில்
நீ–என்
கவிதைகளையும்
மறந்து போயிருக்கலாம்!
••
காதலுக்காய்
கைகுலுக்கிக்கொண்ட
நமது ஸ்பரிசங்களையுமா–
நீ....
மறந்து போனாய்
காதலி?

அக்கரைப்பற்று–வி. சுதாகர்

## கொடி ஏற்றம்



இரண்டாம் உலகப் போரில் ஜெர்மன் படைகள் சோவியத் யூனியனுக்குள் புகுந்தன. சோவியத் படைகள் தமது இழப்பை தளர்க்க பின்வாங்கின. சில நகரங்கள் ஜெர்மன் படையிடம் வீழ்ந்தன. தமது படையணிகளை சீர்படுத்திக் கொண்டும், ஆயுத தளபாடங்களை விரிவாக்கிக் கொண்டும் சோவியத் படைகள் பதிலடியில் இறங்கின. ஜெர்மன் படைகள் கைப்பற்றிய நகரங்களைவிட்டு தோற்றோடின.

இரண்டாம் உலகப் போரின் வெற்றிக்கு காரணமான சோவியத் படையினர் தமது நாட்டுக் கொடியை ஏற்றும் காட்சி. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த புகைப் படம் இது. வெற்றிக்குப்பின் கொடியேற்றம் பொது நிகழ்வுதானோ? ■

## இன்னுமொரு ஜனனத்தில்

இல்லையென்று
தெரிந்த பின்பும்
போராடினேன்!
••
மன்னித்துக்கொள்
உன்னைக் கொஞ்சம்
அதிகமாகவே
தொந்தரவு படுத்திவிட்டேன்;
கிடைக்க வேண்டுமென்ற
தணியாத
தாகத்தினால்....!
••
வானம்
நிலவை
தழுவ நினைத்தால்
முடியுமா?
எவ்வளவு
முட்டாள்தனம்!
••
காதல்
புகையிரதம்
பயணிக்க
சம அளவான
மனத் தண்டவாளங்கள்
வேண்டுமல்லவா?
••
சூரியன்
மலரென்றால்
அதனை
முத்தமிட
முடியுமா?
••
மொத்தத்தில்–
எல்லாமே
முடியாதவற்றுக்கே
முயன்றிருக்கின்றேன்!
••
போகட்டும்–
அடுத்த
ஜென்மத்திலாவது
உன் பாதணிகளாகப்
பிறக்கிறேன்...!
••

மாரிமுத்து யோகராஜன்–
மட்டக்களப்பு.

## எங்கேயிருக்கு?

அடையாள
அட்டைக்குத்தான்
மதிப்பிருக்கு...!
மனிதனுக்கு
எங்கேயிருக்கு..?
❀ ❀
பொலிஸ் பதிவுக்குத்தான்
மதிப்பிருக்கு...!
வாய்ச் சொல்லுக்கு
எங்கேயிருக்கு..?
❀ ❀
சூரிய கந்தைக்குத்தான்
மதிப்பிருக்கு...!
செம்மணிக்கு
எங்கேயிருக்கு...?

அ. யாழினி–
மட்டக்களப்பு.

## மரங்கள் மன்னிக்குமா?

எரிப்பதற்கு
வெட்டுவார்கள்...!
★★
வீடமைக்க
வெட்டுவார்கள்!
★★
தளபாடம் செய்ய
வெட்டுவார்கள்!
★★
பயிர்செய்ய
வெட்டுவார்கள்!
★★
பாதையமைக்க
வெட்டுவார்கள்!
★★
'பங்கர்' அமைக்க
வெட்டுவார்கள்!
★★
விமானப்பாதையமைகக
வெட்டுவார்களா?
★★
இங்கே
வெட்டுகிறார்கள்!
★★
எங்காவது
விமானம் போவதற்கென்று
பாதையமைப்பார்களா?
★★
இங்கே
அமைக்கிறார்கள்!
★★
பாதை திறப்புப் போரின்
முதற்கட்டமாக
விமானப்பாதை
திறக்கப்படப் போகிறது!!!

ஹரன்ஷங்கர்.

## பேனா நண்பர்கள்



பெயர்: என்.தயாபரன்
வயது: 20
முகவரி: 12, டி–8,
உருத்திரபுரம், கிளிநொச்சி.
பொழுது போக்கு:
பத்திரிகை, வானொலி.



பெயர்: ஜெ.ஶ்ரீமதி,
வயது: 18
முகவரி: சந்தை மேற்கு
ஒழுங்கை,
பருத்தித்துறை.
பொழுது போக்கு:
பேனா நட்பு,
வானொலி.

## இந்த வாரம் உங்கள் பலன்

(22.11.1998 தொடக்கம் 28.11.1998 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | | |
|---|---|---|
| துலாம் | – | சூரியன். |
| விருச்சிகம் | – | புதன், சுக்கிரன். |
| கும்பம் | – | குரு, கேது. |
| சிம்மம் | – | ராகு. |
| கன்னி | – | செவ்வாய். |
| மீனம் | – | சனி. |

சந்திரன்– விருட்சிகம். தனு, மகரம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு– உயர்ந்த நிலை, முயற்சி பலிதம். | பி.ப. | 2 | மணி |
| திங்கள்– வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | காலை | 7 | மணி |
| செவ்வாய்– பொருள் நட்டம், மனச் சோர்வு. | பகல் | 12 | மணி |
| புதன்– பயனுள்ள செயல், மன மகிழ்ச்சி. | காலை | 7 | மணி |
| வியாழன்– உயர்ந்த நிலை, முன்னேற்றம். | பி.ப. | 1 | மணி |
| வெள்ளி– இனசன நன்மை, கௌரவம். | காலை | 6 | மணி |
| சனி– புதிய முயற்சி, செலவு மிகுதி. | காலை | 7 | மணி |

அதிஷ்டநாள்–திங்கள், அதிஷ்ட இலக்கம்–1

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு– வீண்தறை கேட்டல், கௌரவக் கேடு. | காலை | 6 | மணி |
| திங்கள்– தொழில் மந்தம், பணத் தட்டுப்பாடு. | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்– தொழில் சிறப்பு, பண விரயம். | பகல் | 12 | மணி |
| புதன்– காரிய சித்தி, மனப் பயம். | காலை | 7 | மணி |
| வியாழன்– தொழிலில் பிரச்சனை, வருமானம் குறைவு. | பகல் | 12 | மணி |
| வெள்ளி– வீண்தறை கேட்டல், செலவு மிகுதி. | காலை | 6 | மணி |
| சனி– அந்நியர் நட்பு, மனக் கலக்கம். | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்– வெள்ளி, அதிஷ்ட இலக்கம்–6

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு– பொருள் வரவு, காரிய சித்தி. | பகல் | 12 | மணி |
| திங்கள்– பெரியோர் உதவி, செய்தொழில் விருத்தி. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்– முயற்சி மேன்மை, மனக்கவலை நீங்கும். | காலை | 7 | மணி |
| புதன்– தொழில் மந்தம், பண விரயம். | மு.ப. | 9 | மணி |
| வியாழன்– தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | காலை | 6 | மணி |
| வெள்ளி– வீண் கவலை, மனக்குறையதிகம். | காலை | 8 | மணி |
| சனி– உறவினர் உதவி, தொழில் விருத்தி. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்– திங்கள், அதிஷ்ட இலக்கம்–2

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு– புதிய முயற்சி, பணச் செலவு. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்– பொருள் வரவு, காரிய சித்தி. | காலை | 6 | மணி |
| செவ்வாய்– பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | காலை | 7 | மணி |
| புதன்– அந்நியர் உதவி, செலவு மிகுதி. | காலை | 6 | மணி |
| வியாழன்– உறவினர் பகை, மனக் கவலை. | பகல் | 12 | மணி |
| வெள்ளி– வீண் மனஸ்தாபம், பிரயாண மிகுதி. | காலை | 7 | மணி |
| சனி– காரிய சித்தி, பொருள் நட்டம். | பி.ப. | 1 | மணி |

அதிஷ்டநாள்–செவ்வாய், அதிஷ்ட இலக்கம்–4

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு– பெரியோர் உதவி, மனக்குறை நீங்கும். | பகல் | 2 | மணி |
| திங்கள்–வீண் முயற்சி செலவு மிகுதி. | காலை | 8 | மணி |
| செவ்வாய்– பயனுள்ள செயல், உயர்ந்த நிலை. | மு.ப. | 9 | மணி |
| புதன்–பண வரவு, காரிய சித்தி. | பகல் | 12 | மணி |
| வியாழன்– தொழில் சிறப்பு, மனக்குறையுண்டு. | மு.ப. | 9 | மணி |
| வெள்ளி– உறவினர் உதவி, பயனுள்ள செயல். | பகல் | 12 | மணி |
| சனி– பணவரவுத் தடை, காரிய நஷ்டம். | காலை | 6 | மணி |

அதிஷ்டநாள்–வியாழன், அதிஷ்ட இலக்கம்–7

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு– வீண் குறைகேட்டல், பணச் செலவு. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்– புதிய முயற்சி, மனக்கவலை நீங்கும். | காலை | 6 | மணி |
| செவ்வாய்– காரியானுகூலம், பொருள் வரவு. | பகல் | 12 | மணி |
| புதன்– பொருள் வரவு, பெரியோர் நட்பு. | காலை | 6 | மணி |
| வியாழன்– உயர்ந்த நிலை, முயற்சி பலிதம். | பகல் | 12 | மணி |
| வெள்ளி– அந்நியர் நட்பு, மனக்குறை நீங்கும். | காலை | 7 | மணி |
| சனி– தொழில் சிறப்பு, பயனுள்ள செயல். | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்–வெள்ளி, அதிஷ்ட இலக்கம்–7

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு– பிரயாண மிகுதி, பொருள் இழப்பு. | பகல் | 12 | மணி |
| திங்கள்– தொழில் சிறப்பு, மனக் கவலை. | காலை | 7 | மணி |
| செவ்வாய்– உயர்ந்த நிலை, அந்நியர் உதவி. | காலை | 8 | மணி |
| புதன்– இனசன நன்மை, பண வரவு. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்– வீண் மனஸ்தாபம், தொழில் இழப்பு. | பி.ப. | 1 | மணி |
| வெள்ளி– தேகசுகம் பாதிப்பு, கடன் தொல்லை. | காலை | 7 | மணி |
| சனி– அந்நியர் உதவி, கௌரவம். | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்–புதன், அதிஷ்ட இலக்கம்–2

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு– உயர்ந்த நிலை, மனக் கலக்கம். | பகல் | 12 | மணி |
| திங்கள்– புதிய முயற்சி, மனப்பயம் நீங்கும். | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்– கௌரவம், தேகசுகம் நன்மை. | காலை | 7 | மணி |
| புதன்– பொருள் வரவு, காரிய சித்தி. | காலை | 6 | மணி |
| வியாழன்– தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | காலை | 7 | மணி |
| வெள்ளி– பண வரவு, காரிய நட்டம். | பகல் | 12 | மணி |
| சனி– வெளியிடப் பயணம், தொழில் மந்தம். | காலை | 7 | மணி |

அதிஷ்டநாள்–வியாழன், அதிஷ்ட இலக்கம்–6

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு– புதிய முயற்சி, அந்நியர் உதவி. | பி.ப. | 1 | மணி |
| திங்கள்– மனக்குறை நீங்கும், தொழில் இலாபம். | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்– பொருள் வரவு, காரிய சித்தி. | பகல் | 12 | மணி |
| புதன்– உறவினர் உதவி, பொருள் வரவு. | காலை | 7 | மணி |
| வியாழன்– மனக்குறை நீங்கும், இனசன நன்மை. | பகல் | 12 | மணி |
| வெள்ளி– தொழில் சிறப்பு, பண வரவு. | காலை | 8 | மணி |
| சனி– பயனுள்ள செயல், முயற்சி பலிதம். | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்–செவ்வாய், அதிஷ்ட இலக்கம்–5

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு– இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | காலை | 6 | மணி |
| திங்கள்– மன மகிழ்ச்சி, உறவினர் உதவி. | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்– அந்நியர் நட்பு, பலவித பேறு. | மு.ப. | 9 | மணி |
| புதன்– புதிய முயற்சி, கௌரவம். | பி.ப. | 1 | மணி |
| வியாழன்– காரியானுகூலம், மனக்குறை நீங்கும். | பகல் | 12 | மணி |
| வெள்ளி– காரிய சித்தி, பொருள் வரவு. | பகல் | 12 | மணி |
| சனி– புதிய முயற்சி, பணச் செலவு. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்–செவ்வாய், அதிஷ்ட இலக்கம்–3

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு– புதிய முயற்சி, பொருள் வரவு. | பகல் | 12 | மணி |
| திங்கள்– பெரியோர் உதவி, மனக்கவலை நீங்கும். | காலை | 7 | மணி |
| செவ்வாய்– தொழில் சிறப்பு, பொருள் வரவு. | பி.ப. | 2 | மணி |
| புதன்– வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | காலை | 8 | மணி |
| வியாழன்– தெய்வானுகூலம், மனக் கவலை. | பி.ப. | 1 | மணி |
| வெள்ளி– பொருள் வரவு, காரிய சித்தி. | காலை | 8 | மணி |
| சனி– தொழில்நிலை மந்தம், மனக் குழப்பம். | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்–புதன், அதிஷ்ட இலக்கம்–4

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு– பயனுள்ள செயல், அந்நியர் நட்பு. | காலை | 7 | மணி |
| திங்கள்– உயர்ந்த நிலை, தேகசுகம் நன்மை. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்– பொருள் வரவு, காரிய சித்தி. | காலை | 6 | மணி |
| புதன்– உறவினர் உதவி, முயற்சி பலிதம். | பி.ப. | 2 | மணி |
| வியாழன்– பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | காலை | 7 | மணி |
| வெள்ளி– பொருள் வரவு, காரியானுகூலம். | பி.ப. | 2 | மணி |
| சனி– தொழில் சிறப்பு, மனக்குறை நீங்கும். | காலை | 6 | மணி |

அதிஷ்டநாள்–திங்கள், அதிஷ்ட இலக்கம்–3



படிப்பகம்

# லேடீஸ் ஸ்பெஷல்

## எதை - எப்படி? கற்றுக்கொடுங்கள்

விடுமுறை நாட்களில், ஓய்வு நேரங்களில் வீட்டிலிருக்கும் குழந்தைகளை எப்படிச் சமாளிப்பது எனத் திணறும் பெற்றோரா நீங்கள்? குழந்தைகளின் கவனத்தைத் திருப்ப அவர்களுக்குச் சமையல் கற்றுக் கொடுங்கள். தேனீர் தயாரித்தல், சாண்ட்விச் செய்தல், ஓம்லெட் போடுதல் என எளிமையான ஐட்டங்களை முதலில் கற்றுத்தர ஆரம்பியுங்கள். குழந்தைகளைச் சமையலறைக்குள் அனுமதிப்பதற்கு முன் அவர்களுக்கு நீங்கள் கற்றுக்கொடுக்க வேண்டிய சில அடிப்படை விஷயங்கள் இதோ:



* சமையலறைக்குள் நுழையுமுன் கை, கால்களை நன்றாகக் கழுவிக் கொண்டு செல்லக் கற்றுக்கொடுங்கள்.
* ஓரளவு விவரம் தெரிந்த வயதில் பெரியவர்கள் யாராவது துணைக்கு இல்லாமல், அடுப்பைப் பற்ற வைக்க, சமைக்க அனுமதிக்காதீர்கள்.
* கத்தி போன்ற கூரான சமையலறை உபகரணங்களை கவனமாகக் கையாளப் பழக்குங்கள்.
* அடுப்பில் வைக்கப்பட்டிருக்கும் பாத்திரத்திற்கு அருகில் முகத்தை நீட்டவோ, எட்டிப்பார்க்கவோ கூடாது எனச் சொல்லி வையுங்கள்.
* அடுப்பு மேடையில் உயரம் எட்டாதபோது எதன் மீதாவது ஏறி நின்று கொண்டு அடுப்பைப் பற்ற வைக்கவோ, அடுப்பில் உள்ளதை எடுக்கவோ அனுமதிக்காதீர்கள்.
* தண்ணீரோ, எண்ணெயோ, வேறு ஏதேனுமோ தரையில் சிந்தி விட்டால் உடனடியாக அந்த இடத்தைச் சுத்தப் படுத்தக் கற்றுக் கொடுங்கள்.
* சமைக்க உபயோகப் படுத்தும் பாத்திரங்கள், காய்கறிகள், பழங்கள் எல்லாவற்றையும் கழுவிய பிறகே உபயோகிக்கப் பழக்குங்கள்.
* மிக்ஸி, கிரைண்டர், மைக்ரோ அவன் போன்றவற்றைத் தாமாக இயக்க அனுமதிக்காதீர்கள்.
* சமையலறையை விட்டு வெளியே வரும்போது காஸ் மற்றும் விளக்குகளின் ஸ்விட்சுகள் அணைக்கப்பட்டு விட்டனவா எனச் சரிபார்க்கப் பழக்குங்கள்.

## அவசர மேக் - அப்

அவசரம் என்றாலும் அற்புதமாக மேக்-அப் போட முடியும்.



இப்படி.

✎ லிப் பென்சில் மூலம் உதடுகளில் 'அவுட்-லைன்' போட்டு விட்டு 'லிப் பிரஷ்' மூலம் லிப்ஸ்டிக் போடுங்கள். ஒரு டிஸ்யூ பேப்பர் மூலம் துடைத்துவிட்டு மீண்டும் ஒருமுறை லிப்ஸ்டிக் புரட்டுங்கள்.

✏ பற்களில் 'லிப்ஸ்டிக்' பட்டு விடக் கூடாது. ஆகவே 'லிப்ஸ்டிக்' போடுபவர்கள் உதடுகளைப் பற்களால் கடிக்கும் பழக்கத்தை விட்டு விடுங்கள்.

✎ முகத்தில் போட்டிருக்கும் 'மேக்-அப்' கண்களில் பட்டுவிடக்கூடாது. ஆகவே கண்களைக் கசக்கக்கூடாது.

✏ நகப் பொலிஷ் அடிக்கடி பெயர்ந்து விடும். அதனால் விலையுயர்ந்த வகைகளை வாங்கி ஒருமுறைக்கு இருமுறை புரட்டுங்கள்.

## சிக்கன வைத்தியம்

* ஒரு மடங்கு எலுமிச்சம் பழச்சாறுடன் இரண்டு மடங்கு பன்னீர் கலந்து நாள் தோறும் காலையிலும் மாலையிலும் வாய் கொப்பளித்து வந்தால் வாய்துர் நாற்றம் அறவே நீங்கி விடும்.
* ஒரு கைபிடியளவு இளம் அறுகம்புல்லை கழுவியெடுத்து வாயில் போட்டு மென்று அந்தச் சாற்றைப் பல்லின் பக்கமாக ஒதுக்கி வைத்திருந்தால் ஐந்தே நிமிஷத்தில் பல்வலி பறந்து விடும். இப்படிப் பல தடவைகள், பல நாட்கள் செய்து வந்தால் ஆடுகிற பற்கள் கூட உறுதிப்பட்டு நிலைத்து விடும்.
* ஒரு மடங்கு எலுமிச்சம் பழச்சாறுடன் இரண்டு மடங்கு வென்னீர் கலந்து வாய் கொப்பளித்தால் தொண்டைவலி குணமாகும். நன்கு பழுத்த வில்வம் பழத்தைச் சாப்பிட்டாலும் தொண்டைவலி போய் விடும்.
* ஆமணக்கு விதையில் இருந்து எடுக்கப் படும் எண்ணெய்தான் விளக்கெண்ணெய். கண்ணில் தூசி விழுந்தாலோ, கண் சிவந்தாலோ விளக்கெண்ணெயுடன் சிறிது தாய்ப்பால் கலந்து குழைத்து கண்ணில் விட்டால் தூசு வெளியே வந்துவிடும்.


## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்



மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்

☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.

(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** ET

பெயர்:.........................

முகவரி:.........................

.........................

தொழில்:.........................

கையொப்பம்:.........................

**உண்மை - நேர்மை - வெளிப்படைத் தன்மை**

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப் படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 28-11-1998

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


# கண்ணீரில் கரைந்த இரவுகள் 62

புவனா

அன்னை தெரேசாவை டயானா சந்தித்த போது, அவரிடம் ஒரு வாக்கியத்தை கூறினார் அன்னை.

"பிறருடைய துன்பத்தை நீக்க வேண்டுமானால், அத் துன்பத்தை நீயும் அனுபவித்து உணரவேண்டும்!" என்பதுதான் அந்த வாக்கியம்.



அதனை பின்பற்றினார் டயானா. துன்பப் படுபவர்களை நாடும் போதெல்லாம், அத் துன்பத்தை மனப்பூர்வமாக உணர்ந்து சேவை செய்தார்.

இத்தகைய சேவைகளைப் பார்த்தவர்கள் மனம்விட்டுப் பாராட்டினார்கள்.

டயானாவின் சிநேகிதிக்கு தெரிந்தவரான ஒரு வயோதிபருக்கு மூளையில் புற்றுநோய் ஏற்பட்டிருந்தது. ஓய்வூதியம் மூலம் வாழ்க்கையை ஓட்டிய அம் முதியவர் மிகவும் அவதிப் பட்டார்.

சிநேகிதி மூலம் தகவல் அறிந்த டயானா, அந்த மனிதர் எங்கிருக்கிறார் என்பதை அறிந்து, எவருமே அறியாமல் அந்த மருத்துவ மனைக்குச் சென்றார்.

அவருக்கு ஆறுதல் கூறியதுடன், அவரது குடும்பத்தினருக்கும் பல உதவிகளைச் செய்தார்.

தகவல் கூறிய தனது சிநேகிதியிடம்கூட தான் செய்த உதவிகள் தொடர்பாக டயானா எதையும் கூறவில்லை.

பின்னர் சிநேகிதிக்கு அந்தக் குடும்பத்தினர் கூறித்தான் டயானா சென்று பார்த்ததும், செய்த உதவிகளும் தெரியவந்தன.

டயானாவின் உதவியாளர்களில் ஒருத்தியான லெளரா லோன்ஸ் டேலின் பதினொரு மாதக் குழந்தை இறந்துவிட்டது.

தங்கள் பணியாட்களது இன்ப துன்பங்களில் அரச குடும்பத்தினர் பங்கேற்பதில்லை. அதனை கௌரவக் குறைச்சல் என்று நினைத்தனர்.

டயானா அவ்வாறு இருந்துவிடவில்லை. எவருக்கும் கூறாமல் தானே காரைச் செலுத்திக்கொண்டு உதவியாளர் வீட்டுக்குச் சென்றார். அவருக்கு ஆறுதல் கூறினார்.

ஒருநாள் இருநாட்களல்ல- தொடர்ச்சியாக பல நாட்கள் சென்று ஆறுதல் படுத்தினார்.

அக் குடும்பத்தைச் சேர்ந்த ஒருத்தர், கண்களில் ஈரத்துடன் பின்வருமாறு கூறினார்: "வேல்ஸ் இளவரசி கண்கண்ட தேவதை. அவருடைய கைகளுக்கு துன்பத்தை துடைத்தெறியும் சக்தி இருக்கிறது.

### பத்திரிகைகள் மாற்றம்

பிரிட்டிஷ் உயர்தரப் பத்திரிகைகள் சிலவற்றின் திடீர் மாற்றம் டயானாவை வியப்புக் குள்ளாக்கியது.

அரச குடும்பம் தொடர்பாகவும், இளவரசர் சாள்ஸ் குறித்தும் திடீரென்று உயர்வாக எழுத ஆரம்பித்தன.

பிரிட்டிஷ் பிரதமர், அமைச்சரவை, தேவாலயம், அரண்மனை அதிகாரிகள், அனுபவம் பெற்ற அலுவலர்கள் ஆகியோரின் தூண்டுதல்களால் அரச குடும்ப அந்தஸ்தை காப்பாற்ற பத்திரிகை முதலாளிகள் மறைமுகமாக உதவினார்கள்.

ஜேம்ஸ் ஹெவிற்றுக்கு டயானா எழுதிய காதல் கடிதங்கள் ஏற்கனவே அம்பலமாகியிருந்தன.

பண ஆசையாலும், டயானாவின் காதலர் என்று உலகெங்கும் பிரபலமாவதற்காகவும் டயானாவுக்குத் துரோகம் செய்தார் ஹெவிற்.

டயானா எழுதிய அந்தரங்கமான கடிதங்களை பத்திரிகைகளுக்கு விற்பனை செய்தார்.

மேலும் வெளியிட கடிதங்கள் இல்லாத நிலையில், அந்தக் காதல் கடித்ங்கள் எப்படி

## காதல் கடிதம் அம்பலமான கதை



அன்னா

வெளியாகின? என்பதே சுவாரசியமான கதையாக பத்திரிகைகளில் வெளியாகியது.

அவற்றிலிருந்த சில புதிய தகவல்கள் இவை:

1990ல் வளைகுடா யுத்தத்தின்போது, ஈராக்குக்கு எதிராக அணிவகுத்து தனது அணியை போர் முனைக்கு இட்டுச் செல்லத் தயாரானார் ஹெவிற்.

தனது 'சலேஞ்சர்' டாங்கியில் இருந்த வண்ணம் படையணிக்கு அறிவுறுத்தல்களை வழங்கினார்.

"உங்களிடம் உள்ள தனி உடமைகள் அனைத்தையும் இப்பொழுதே அழித்தொழித்து விடுங்கள். உங்கள் நெருங்கிய உறவினர்கள் எழுதியுள்ள கடிதங்களைக்கூட உங்களுடன் வைத்திருக்க வேண்டாம். கிழித்தெறியுங்கள். எதிரிகளான ஈராக்கியர்களிடம் அவை எதுவும் சிக்கிவிடக்கூடாது. எனது கடவுச் சீட்டையே கீழித்தெறிந்து விட்டேன்!" என்று கூறினார் ஹெவிற்.

அவ்வாறு கூறிய ஹெவிற்றின் சட்டைப்பையில் டயானா எழுதிய கடிதங்கள் பத்திரமாக இருந்தன.

அக் கடிதங்களின் பெறுமதி தெரிந்தே தன்னோடு பத்திரமாக வைத்திருந்தார்.

டயானா ஹெவிற்றுக்கு எழுதிய கடிதங்களில் 'டார்லிங் ஜேம்ஸ்', 'மை டார்லிங் ஜேம்ஸ்', 'டியரஸ்ட் ஜேம்ஸ்' என்றுதான் ஆரம்பிப்பார்.

டயானா எழுதிய கடிதங்களை ஹெவிற் பத்திரமாக வைத்திருந்தார். ஒவ்வொன்றாக விற்றுக் கொண்டிருந்தார்.

### திருட்டு

அக்கட்டத்தில் ஹெவிற்றுக்கே தெரியாமல் கடிதங்கள் சில 'மிரர்' பத்திரிகைக்கு கிடைத்தன.

தான் கொடுக்காமல் தனக்கு டயானா எழுதிய கடிதங்கள் எப்படி 'மிரர்' பத்திரிகைக்குத் கிடைத்தன என்று ஆச்சரியப்பட்டார் ஹெவிற்.

'மிரர்' பத்திரிகையோ தனக்கு அக் கடிதங்கள் எப்படிக் கிடைத்தன என்று கூறமறுத்தது.

'மிரர்' பத்திரிகையில் இருந்த ஹெவிற்றின் நண்பர் ஒருவர் மூலமாக உண்மை தெரிய வந்தது. ஹெவிற்றுக்கு பலத்த அதிர்ச்சி.

ஹெவிற்றிடம் கடிதங்களைத் திருடி 'மிரர்' பத்திரிகைக்கு கொடுத்தவர் இத்தாலிய அழகியான அன்னா ஸ்ரெய்யானோ பெரெட்டிபேட்டி. இவரும் ஹெவிற்றின் காதலிகளில் ஒருவர்.

மொண்டிகார்லோ என்ற இடத்தில் டிசம்பர் மாதத்தில் ஒருநாள் அன்னாவை சந்தித்தார் ஹெவிற்.

பார்த்ததும் ஒருவரையொருவர் கவர்ந்து கொண்டனர். அன்னாவின் கவர்ச்சியான தோற்றம் ஹெவிற்றுக்கு மிகவும் பிடித்திருந்தது. உடனடியாகவே அன்னாவை முழுதாக அறியவேண்டும் என்ற ஆவல் மேலோங்கியது.

ஹெவிற்றின் துடிதுடிப்பான போக்கால் கவரப்பட்ட அன்னாவும் அவருடன் சில நாட்களைத் தனிமையில் பகிர்ந்து கொள்ள விரும்பினார்.

இருவரும் ஹொட்டல் ஒன்றில் தம்பதி போன்று தங்கிக் கொண்டனர்.

அன்னாவின் ஆர்வம் ஹெவிற்றை வளைத்தது. ஹெவிற்றின் வேகம் அன்னாவைக் கவர்ந்தது.

அதனால் உறவைத் தொடர இருவரும் தீர்மானித்தனர். ஹொட்டலில் தங்கியவர்கள் பின்னர் வீட்டிலேயே சந்தித்தனர்.

டேலோனில் உள்ள ஈவேர்ஸ் பீல்ட் மேனோரில்- ஹெவிற்றின் வீடு இருந்தது. அந்த வீட்டின் ஒருபகுதியை, வாடகைக்கு கொடுப்பது போல அன்னாவை அங்கு தங்கவைத்தார் ஹெவிற்.

ஹெவிற்றின் பெற்றோர்கள் தூங்கச் சென்ற பின்னர் பூனைபோல பதுங்கிப் பதுங்கி அன்னாவின் அறைக்குள் சென்று கதவை மூடிக்கொள்வார் ஹெவிற்.

ஹெவிற் சில சமயம் தன்னை நாடி வருவது தாமதமானால் அன்னாவே இரவு உடையுடன் ஹெவிற்றின் அறைக்கு வந்துவிடுவார்.

இருவரும் கட்டியணைத்தபடி களியாட்டம்



புரிந்ததை ஹெவிற் வீட்டு பணிப்பெண் ஒருநாள் கண்டுவிட்டார்.

அந்தப் பணிப்பெண்ணுக்கும் ஹெவிற்றுக்கும் தொடர்பு இருந்தது. அதனால் தான் கண்ட காட்சியை வெளியே சொல்லவில்லை.

ஹெவிற்றின் அறையில் சோபாவையே கட்டிலாக்கி இருவரும் உல்லாசம் கண்டனர். அசதியில் ஹெவிற் அப்படியே தூங்கிப்போக அன்னா எழுந்து தண்ணீர் குடித்தாள்.

ஹெவிட்டின் மேசையில் கிடந்த டயரியை ஏதேச்சையாகப் புரட்டினாள். அவள் கண்களில் சில கடிதங்கள் பட்டன.

அச் சமயத்தில் ஹெவிற்றுக்கு தூக்கம் கலைந்தது.

(அடுத்த வாரமும் வரும்)


## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?

## வவுனியா வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் - பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி

இவர்தான் ☞ **செ. மகிழினி,**

மே-பா- ஆ. வேதாரணியம், சோயா ஒழுங்கை, வவுனியா.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.


அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.




படிப்பகம்





நெஞ்சில் உரமுமின்றி
நேர்மைத் திறமு மின்றி
வஞ்சனை சொல்வா ரடி!- கிளியே!
வாய்ச் சொல்லில் வீரரடி!

–சுப்பிரமணிய பாரதியார்.

**பாப்பா முரசு சிறுகதை**

# என்ன காரணம்?



ஒரு வீட்டில் நாய்க்குட்டியொன்றை எடுத்து வளர்த்து வந்தார்கள். அந்த நாய்க்குட்டி ஒரு காகத்துடன் நட்பாக இருந்தது.

ஒருநாள் காகம் மிகவும் கவலையுடன் அமர்ந்திருந்தது.

இதைக் கண்ட நாய்க்குட்டி காகத்திடம் சென்று,

"என்ன காக்கையாரே! ஏன் ஒன்றும் பேசாமல் வருத்தமாக இருக்கிறீர்?" என்று கேட்டது.

"மற்றப் பறவைகளை அன்புடன் வளர்க்கிறார்கள். அவைகளின் செயல்களைப் பாராட்டுகிறார்கள். ஆனால் என்னை வெறுத்து, கல்லால் எறிந்து துரத்துகிறார்களே ஏன்?" என்று கேட்டது காகம்.

"இதற்குக் காரணம் உங்கள் தீய குணங்கள்தான். இதை இல்லாதொழித்தால் உங்களையும் அன்பாக நடத்துவார்கள்," என்றது நாய்க்குட்டி.

"எங்களிடம் அப்படியென்ன தீய குணங்கள் உள்ளன? கடமை, சுத்தம், இப்படிப் பல நல்ல குணங்களில் நாங்கள்தான் சிறந்தவர்கள்!" என்று சொன்னது காகம்.

"உண்மைதான்!" என்றது நாய்க்குட்டி.

"பகிர்ந்துண்ணும் பண்பைக் கற்றுத் தந்தது நாங்கள்தான்!" என்று பெருமையோடு சொன்னது காகம்.

"ஆமாம் அதுவும் உண்மைதான்!" என்று மறுபடி சொன்னது நாய்க்குட்டி.

"இப்படி நல்ல குணங்கள் எம்மிடம் இருந்தும், மற்றப் பறவைகளுக்கு உள்ள மதிப்பு எங்களுக்கு இல்லையே ஏன்?

குயில் கூவும்போது அதன் இனிமையை இரசிக்கிறார்கள். மயில் ஆடும்போது அதை இரசித்துப் பாராட்டுகிறார்கள். கிளியை வீட்டில் வளர்த்து பேசக் கற்றுக் கொடுக்கிறார்கள். ஆனால் எவ்வளவோ நல்ல குணங்கள் இருந்தும் எம்மினத்தைக் கண்டாலே துரத்துகிறார்களே ஏன்?" என்று மீண்டும் கேட்டது காகம்.

"ஏன் என்று நான் சொல்கிறேன். உங்களிடம் எவ்வளவு நல்ல குணங்கள் இருந்தாலும், உங்களிடம் இருக்கும் சில தீய குணங்களால் தான் அவர்கள் உங்களை வெறுக்கிறார்கள்," என்று கூறியது நாய்க்குட்டி.

"அப்படியென்ன தீய குணங்கள்?" என்று கேட்டது காகம்.

"திருடுதல், ஏமாற்றுதல்," என்று சொன்னது நாய்க்குட்டி. காகம் தலை குனிந்தது.

ஒருவரிடம் எவ்வளவு நல்ல குணங்கள் இருந்தாலும், ஒரு தீய பழக்கம் இருந்தால் நல்ல குணங்களை எல்லாம் மூழ்கடித்து விடும். ஒரு பானை பாலுக்குள் எப்படி ஒரு துளி விஷம் கலந்தால்.. யாரும் அந்தப் பாலைச் சீண்ட மாட்டார்களோ, அதுபோல.

## அதிசயம் – ஆனால் உண்மை!



ரஷ்யாவைச் சேர்ந்த பியோபர் வெஸ் பெட் என்பவரின் மனைவி 18ம் நூற்றாண்டின் மத்தியில் 16 இரட்டைக் குழந்தைகளைப் பெற்றார். அது சாதனையாகப் பாராட்டுப் பெற்று; அப்போது ரஷ்யாவை ஆண்ட இரண்டாம் அலெக்சாண்டரிடம் வெகுமதியும் பெற்றார்.



சல்மோன் எனப்படும் மீன் இனம் கடலில் வசிக்கும். முட்டையிடும் நேரத்தில் நதிகளின் முகததுவாரத்தில் வந்து முட்டையிட்டு விட்டு மீண்டும் கடலுக்கு சென்றுவிடும்.



கசகசா செடியின் பூ ஒன்றில் மட்டும் 3 ஆயிரம் விதைகள் இருக்கும். இந்த விதைகள் அனைத்தும் முளைத்துப் பூத்தால் 5 வருடங்களுக்குள் இதன் விதைகள் முழுவதிலுள்ள நிலப்பரப்பில் கசகசா செடியைப் பயிரிட முடியும்.



அவுஸ்திரேலியாவில் உள்ள புருஷ் என்ற வான்கோழிகள் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும். குஞ்சுகள் பொரித்து சில மணிநேரங்களின் பின் பறக்க ஆரம்பித்து விடும்!

## வாரம் ஒரு நாடு

### பங்களாதேஷ்

தலைநகர்– டாக்கா.
பரப்பு– 148, 393 சதுர கிலோமீட்டர்.
மக்கள் தொகை– 12.04 கோடி.
மொழி– வங்காளி, சக்மா, மாக்.
எழுத்தறிவு– 47%
சமயம்– இஸ்லாம், இந்து.
நாணயம்– டாகா.
தனிநபர் வருமானம்– 220 டொலர்.

அமைவிடம்:

மேற்கிலும் வடமேற்கிலும் மேற்கு வங்காளமும்; வடக்கில் அஸாமும்; கிழக்கில் அஸாம், திரிபுரா மற்றும் பர்மாவும்; தெற்கில் வங்காள விரிகுடாவும் இதன் எல்லைகள்.

வரலாறு:


பாகிஸ்தானின் ஒரு பகுதியாக 1971 வரை இருந்தது. உள்நாட்டுக் கலவரங்களால் அதே ஆண்டில் சுதந்திர நாடாகியது. முஜிபுர் ரஹ்மான் முதல் பிரதமராகப் பதவியேற்றார். ஆனால் 1975ல் ஏற்பட்ட இராணுவக் கலவரங்களால் இராணுவ ஆட்சி. பின் 1982ல் ஏற்பட்ட மௌன இராணுவப் புரட்சியின் மூலம் எர்ஷாத் அதிபரானார். 1990ல் அவர் பதவி விலக, 1991ல் ஏற்பட்ட பொதுத் தேர்தலில் கலீ. தாலியா பிரதமரானார். 1995ல் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு ஹேஸினா பேகம் பிரதமராகியுள்ளார்.



பொருளாதாரம்:

உலக சணல் உற்பத்தியில் 80 சதவிகிதமும் பங்களாதேஷின் பங்களிப்பாகும். அடுத்த முக்கிய விளைபொருள் நெல். மீன் பிடித்தல் முக்கிய தொழில். தொழில்துறையில் பின் தங்கியுள்ளது.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 28.11.1998.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 272
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 269

பரிசுக்குரியவர்:
வி.கினோஷன்,
சென் மேரிஸ் பாடசாலை, பார் வீதி, மட்டக்களப்பு.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| தியாகமூர்த்தி விநுசாந், டிரைட்டன் த.வி, கொட்டகலை. | ரி.நித்தியகுமார், கார்மேல் பாத்திமா தேசிய பாடசாலை, கல்முனை. |
| அ.க.மனாசிர் கான், சாஹிரா கல்லூரி, தேசிய பாடசாலை, புத்தளம். | த.துஷாந்தன், எலிஹவுஸ் வீதி, கொழும்பு–15. |
| சி.திவ்யஹேசினி, அருணகிரி வீதி, திருகோணமலை. | செல்வன் எஸ்.ருமேஸ், நு/தமிழ் மகா வித்தியாலயம், கொட்டகலை. |
| எம்.என்.பாத்திமா சப்னா, அல்-ஹிலால்-மத்திய கல்லூரி, நீர்கொழும்பு. | குகாந்தினி முருகேசபிள்ளை, ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் வித்தியாலயம், மட்டக்களப்பு. |
| வே.பிர்விணா, ம.மா.கொ.அமிரி தமிழ் வித்தியாலயம், இறம்பொட. | எம்.சீ.எ.ஃப். நுசைபா, தாறுல் ஹம்றா, சம்மாந்துறை. |

## உலகின் முக்கிய போக்குவரத்து வழிகள்

**உலகின் முக்கிய கடல்வழிகள்:**

1. வட அட்லாண்டிக் வழி.
2. பிரசாந்த மகாசாகர் வழி
3. பூமுட்
4. தென்னமெரிக்க வழி
5. தென்னாபிரிக்க வழி.

**உலகின் முக்கிய ஆகாய வழிகள்:**

1. இலண்டன்– மெல்போர்ண் வழி.
2. இலண்டன்-கேப்டவுன் வழி
3. சான்பிரான்ஸிஸ்கோ– பீகிங் வழி.
4. சிக்காகோ– போனர்ஸ் அயர்ஸ் வழி.
5. நியூயோர்க்– விலாடி வாஸ்டொக் வழி

**உலகின் முக்கிய துறைமுகங்கள்:**

| | |
|---|---|
| 1. கிளாஸ்கோ | 2. லிவர் பூல் |
| 3. மாஞ்செஸ்டர் | 4. இலண்டன் |
| 5. சான் பிரான்ஸிஸ்கோ | 6. யொக்கோகாமா |
| 7. ஹொங்கொங் | 8. லிஸ்பன் |
| 9. சிட்னி | 10. டர்பன் |

**உலகின் முக்கிய விமான நிலையங்கள்:**

| | |
|---|---|
| 1. ஹவாய் தீவு | 2. டோக்கியோ |
| 3. சாந்தோ குரூஸ் | 4. பாரிஸ் |
| 5. பக்தாத் | 6. கனடியன் |
| 7. மனிலா | 8. ட்ரினிடாட் |
| 9. நேதல் | 10. மொஸ்கோ. |

## அக்ரோனியம்

நீளமான ஆங்கிலப் பெயரைச் சுருக்கி அவற்றின் முதல் எழுத்துக்களை மட்டும் ஒன்று சேர்த்து, ஒரு சொல் ஆக்கும் முறைக்கு அக்ரோனியம் என்று பெயர்.

உதாரணமாக:
**TELE VISION**
**TV.**

## ஹெலிக்கொப்டர் பற்றிய செய்திகள்

- ✦ கி.மு. 1500ல் லியார்னடோ டாவின்ஸி என்ற ஓவியர் முதன் முதலாக மிகப் பெரிய ஹெலிக்கொப்டர் படத்தை வரைந்தார். அதை நிஜத்தில் உருவாக்கிச் செயற்படுத்த வேண்டும் என்று யாருக்குமே தோன்றவில்லை.
- ✦ 1783ல் 'சைனீஸ் ரொப்' என்ற பெயரில் ஹெலிக்கொப்டர் பொம்மை ஒன்று உருவாக்கப்பட்டது.
- ✦ 1796ல் சேர் ஜோர்ஜ் கேலே என்பவர் பொம்மையிலேயே விதவிதமான ஹெலிக்கொப்டர்களை உருவாக்கிச் சோதனை செய்தார்.
- ✦ நூறு வருடங்களுக்குப் பிறகு, முதல் உலகப் போர் நடந்த சமயம், எஞ்ஜினுடன், மனிதன் உட்காரக்கூடிய ஹெலிக்கொப்டர் உருவாக்கப் பட்டது.
- ✦ இகோர் சிகோர் ஸ்கை என்பவர் 1909 மற்றும் 1910ல் இரண்டு ஹெலிக்கொப்டர்களை அமைத்தார்.
- ✦ 1936ல் ஜெர்மனியின் ஃபோக் வுல்ஃப் என்ற நிறுவனம் முதன் முதலாக வெற்றிகரமான ஹெலிக்கொப்டரை உருவாக்கியது.
- ✦ 1937ல் முதல் ஹெலிக்கொப்டர் ஜெர்மன் நாட்டைக் கடந்து ஒரு மணி நேரத்திற்கு 70 மைல் வேகத்தில் பறந்தது.



- ✦ 1940ல் இகோர் சிகோர் ஸ்கை இன்னொரு ஹெலிக்கொப்டர் செய்து, 1942ல் அமெரிக்க போர்ப்படைக்கு அதைக் கொடுத்து விட்டார்.

## தபால் தகவல்கள்



✉ 16ம் நூற்றாண்டில்தான் முதன் முதலாக முறையான அஞ்சல் முறை ஆரம்பமானது. அதற்கு முன்பு வரை புறா, அன்னம் போன்றவற்றின் மூலம் தூது விடும் முறையே இருந்தது.

✉ மன்னர்களது சந்தேக புத்தியைத் தடுக்கவும், நாட்டிற்கு வருமானத்தைப் பெருக்கவும், பொதுமக்களுக்கு உதவவும் என்ற மூன்று காரணங்களுக்காகவே தபால் முறை முறைப்படுத்தப்பட்டது.

✉ எட்டாம் ஹென்றி முதன் முதலாக இங்கிலாந்தில் அரசாங்க அஞ்சல் சேவையைத் தொடங்கினார்.

✉ அரசாங்க அங்கீகாரமில்லாமல் யாரும் தபால் சேவையில் ஈடுபடக்கூடாது என 1609ல் சட்டம் ஒன்று இயற்றப்பட்டது.

✉ 1680ல் இலண்டனைச் சேர்ந்த வியாபாரி ஒருவர் சொந்தமாகத் தபால் சேவையை ஆரம்பித்தார். பிறகு அரசாங்கம் அதைத் தன்வசம் எடுத்துக் கொண்டு 1801 வரை வெற்றிகரமாக நடத்தியது.

✉ இப்போதுள்ளது போன்று முறையான தபால் சேவை 1840ல் ஆரம்பமானது. இங்கிலாந்தின் ஆரம்பகால தபால் முறையையே இப்போதும் எல்லா நாடுகளும் பின்பற்றுகின்றன..

## பிட்டா

குருவி இனத்தில் மிக உயரத்தில் கூடுகளைக் கட்டும் குருவி என்ற பெருமைக்குரியது பிட்டா. இதைப் பற்றி மேலும் சில சுவாரஸ்யமான தகவல்கள்:

- ⋆ இதன் எடை 10 கிராம். தினமும் இக்குருவி இதேயளவு எடையுள்ள உணவை உண்ணும்.
- ⋆ இவற்றின் பிரதான உணவு நத்தை.
- ⋆ இவை தனித்தனியே வாழும். முட்டையிடும் காலத்தில் தான் ஆண்குருவியுடன் வசிக்கும்.
- ⋆ இவற்றின் கூடுகள் 30 அடி உயரத்தில் இருக்கும். இக்கூட்டுக்குள் நுழையும் வழியை வேறு எந்தப் பறவையும், பிராணியும் கண்டுபிடிக்க முடியாத வகையில் அமைத்திருக்கும்.
- ⋆ இவை மோப்ப சக்தியால் தான் உணவு இருக்கும் இடத்தை அறிகின்றன.



- ⋆ வெளிச்சமே இல்லாத பகுதிகளில்தான் இவை வாழ்கின்றன. காரணம் இவற்றின் பளிச் நிறம் எதிரிகளிடம் காட்டிக் கொடுத்துவிடும் என்பதால்.
- ⋆ இவற்றில் 26 வகைகள் உண்டு. ஆசிய, ஆபிரிக்க நாடுகளில் இவை அதிகம் உள்ளன.



படிப்பகம்

www.padippakam.com

# டிசம்பர் பௌர்ணமி

## 04

**மர்மம், காதல் குடும்ப நயம் கலந்த விறு விறு தொடர்**

**இதுவரை**

பிரபல தொழிலதிபர் ருத்ரமூர்த்தியின் ஒரே மகன் நித்தியன். பம்பாயில் சிறையிலிருந்து விடுதலையாகி வருபவனை வெளிநாட்டில் இருந்து வருபவனாகக் கூறி விசாலிக்கு மணம்முடிக்க திட்டமிடுகிறான். நித்தியனோ சாந்தாவைக் காதலிக்கிறான். சாந்தாவும் நித்தியனும் ரெஸ்டாரண்டில் சந்திக்கின்றனர். தமது திருமண விடயமாக பேசிக்கொண்டிருக்கையில் நித்தியனுக்கு ஃபோன் வருகிறது.

**இனி......**

நித்தியன் முகம் பூராவும் ஒரு குழப்ப போஸ்டர் ஒட்டி மிருக்க டெலிஃபோன் பண்ணினது யாராக இருக்கும் என்று யோசித்துக் கொண்டே பில்லிங் கௌண்டருக்குப் போனான்.

கௌண்டரில் இருந்த இளைஞன் கேட்டான்.

"நீங்க மிஸ்டர் நித்தியன்?"

"எஸ்"

"போன் உங்களுக்குத்தான்" மேஜை யின் மேல் ஒருக்களித்து விழுந்து கிடந்த ஊதா வண்ண ரிஸீவரை எடுத்துக் கொடுக்க நித்தியன் அதை வாங்கி இடது காதுக்கு ஒட்ட வைத்து "ஹலோ!" என்று மெல்ல குரல் கொடுத்தான்.

மறு முனையில் ஒரு பெண் குரல் இனித்தது.

"நான் யார்ன்னு கெஸ் பண்ணுங்க பார்க்கலாம்"

நித்தியனுக்கு அந்தக் குரல் பிடி பட்டது.

"விசாலி...?"

"பரவாயில்லையே! என்னோட குரல் உங்களுக்கு நல்லாவே மனப்பாடம். ஆகியிருக்கு. இதுக்காகவே உங்களுக்கு மந்திரம் ஜெபிக்கிற மாதிரி நூத்தியெட்டு முறை 'தாங்க்ஸ்' சொல்லலாம்..."

"விசாலி."

"ம்...."

"நான் இந்த ரெஸ்டாரெண்டில் இருக்கிறது உனக்கு எப்படி தெரியும்?

"இந்த மெட்ராஸ் சிட்டியில் நீங்க எங்கே போனாலும் சரி அது அடுத்த நிமிஷமே எனக்கு தெரிஞ்சுடும்.... கபர்தார்" விசாலி சொல்லிவிட்டு மறுபடியும் சிரிக்க நித்தியன் எரிச்சலை அடக்கிக் கொண்டு கேட்டான்.

"ப்ளீஸ்... எப்படின்னு சொல்லு விசாலி?"

"டென்ஷன் ஆயிட்டீங்க போலிருக்கு. பயப்படாதீங்க, ரெஸ்டாரெண்டுக்கு வெளியே பார்க்கிங்கில் இருந்த உங்க காரை அப்பா பார்த்தாராம். அதை என்கிட்ட வந்து சொன்னார். நீங்க ரெஸ்டாரெண்டில் உண்மையாகவே இருக்கீங்களா இல்லையான்னு தெரிஞ்சுக் கிறதுக்காகத்தான் டெலிஃபோன் டைரக் டரியில் அந்த ரெஸ்டாரெண்ட் ஃபோன் நெம்பரை கண்டு பிடிச்சு டயல் பண்ணி னேன். மை காட்ஸ் கிரேஸ், லைன்ல நீங்க கிடைச்சீங்க... அது சரி மாப்பிள்ளை ஸார் ஃபாரினிலிருந்து வந்ததும் வராத துமா அப்படியென்ன அந்த ரெஸ்டா ரெண்ட் மேல அவ்வளவு மோகம்....? எனிதிங் ஸ்பெஷல்....?"

"ஒண்ணுமில்லை.... ஒரு ஃப்ரண்ட்டை பார்க்கிறதுக்காக காரை எடுத்துக்கிட்டு கிளம்பினேன். வீட்ல அவன் இல்லை. இந்த ரெஸ்டாரெண்ட்ல இருப்பான்னு அவங்க வீட்ல சொன்னாங்க... அதான் வந்தேன்...."

"ஃப்ரண்ட்டை பார்த்துட்டீங்களா?"

"ம்.... பார்த்துட்டேன்..."

"பேசி முடிச்சாச்சா?"

"ம்... ஆச்சு..."

"இப்ப நீங்க ஃப்ரீயா?"

"ஃப்ரீதான்...."

"எங்க வீட்டுக்கு ஒரு அஞ்சு நிமிஷம் வந்துட்டு போகக்கூடாதா?"

"சாயந்தரம்தான் சோழா ஹோட்டல் பார்ட்டியில் மீட் பண்ணப் போறோமே..?"

"அங்கே ஃப்ரீயா பேச முடியாதே..?"

"இப்ப என்ன பேசணும்?"

"என்னோட அப்பா உங்ககிட்ட ஏதோ ஒரு முக்கியமான விஷயத்தைப் பத்தி பேசணுமாம்..."

நித்தியன் மௌனித்தான்.

"என்ன பேச்சையே காணோம்...? கல்யாணத்துக்கு முன்னாடி மாமனார் வீட்டுக்கு வர்றதுக்கு சங்கோஜமா இருக்கா?"

"அதெல்லாம் ஒண்ணுமில்லை..."

"அப்படீன்னா நீங்க வர்றீங்க?"

"வ... வர்றேன்"

"ஒரு பதினஞ்சு நிமிஷத்துல எதிர் பார்க்கலாமா?"

"ம்..."

"குரல்ல சுரத்தையே காணோம். உங்களுக்கு இஷ்டமில்லேன்னா வேண்டாம்..."

"இல்லை வர்றேன்..."

நித்தியன் ரிஸீவரை வைத்துவிட்டு நெற்றி யில் அரும்பிவிட்ட வியர்வையோடு சாந்தா விடம் வந்தான்.

சந்தன நிற மோவாயை கையால் தாங்கியபடி வெளியே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த சாந்தா திரும்பினாள்.

"யாருங்க ஃபோன்ல...?"

"விசாலி..."

"அய்யய்யோ..."

"ஏன் பயப்படறே? நீயும் நானும் தான் இந்த ரெஸ்டாரெண்டுக்கு வந் தோம்ன்னு விசாலிக்குத் தெரியாது. என்னோட காரை ரெஸ்டாரெண்ட் பார்க்கிங்கில் விசாலியோட அப்பா பார்த்துட்டுப் போய் அவகிட்ட சொல்லி யிருக்கார். அவ உடனே ஃபோன் பண் ணிட்டா."

"ரெஸ்டாரெண்டுக்கு யார்கூட வந்தீங்கன்னு விசாலி கேட்டாளா?"

"அப்படியெல்லாம் கேட்கலை. ஃபாரினிலிருந்து வந்ததும் வராததுமா இந்த ரெஸ்டாரெண்டுக்கு போயிருக் கீங்களே என்ன ஸ்பெஷல்னு கேட்டா. அதுக்கு நான் ஒரு ஃப்ரெண்டைப் பார்க்க வந்ததா சொன்னேன்."

"எனக்கென்னவோ பயமாயிருக் குங்க."

"எதுக்கு பயம்?"

"நான் உங்ககூட இங்கே வந்திருக் கிறது ஒரு வேளை விசாலிக்கு தெரிஞ் சிருந்தா...?"

"கண்டிப்பா அவளுக்குத் தெரி யலை."

"எப்படி சொல்றீங்க?"

"அவளுக்கு விஷயம் தெரிஞ்சிருந்தா ஃபோன்ல அவ்வளவு சந்தோஷமா பேசியிருக்க மாட்டா. நல்ல ஜோவியல் மூட்லதான் இருந்தா. என்னை இப்போ வீட்டுக்கும் கூப்பிட்டிருக்கா"

"எதுக்கு?"

"தெரியலை. அவளோட அப்பா என் கிட்ட ஏதோ ஒரு முக்கியமான விஷயத்தை பேசணுமாம்."

"என்ன விஷயமாம்?"

"தெரியலை."

"வர்றேன்னு சொல்லிட்டீங்களா?"

"சொல்லிட்டேன். அவங்க பேசப் போற விஷயம் என்னான்னு எனக்குத் தெரியாது. ஆனா இந்த சந்தர்ப்பத்தை உபயோகப் படுத்திக்கிட்டு நான் ஜெயிலுக்கு போய்ட்டு வந்த விஷயத்தை சொல்லிடப் போறேன்."

"அவசரப்படாதீங்க. இது யோசனை பண்ணிப் பேச வேண்டிய விஷயம்."

"இல்லை சாந்தா... இந்த விஷயத்துல நான் நிதானிக்கிற ஒவ்வொரு நிமிஷமும் எனக்கு பாதகமாகத்தான் முடியும். விஷ யத்தை சொல்லிட்டா அவங்களும் சுதாரிச் சுக்கிட்டு விசாலிக்கு வேற இடத்துல மாப் பிள்ளை பார்க்க முயற்சி பண்ணுவாங்க.



**கிரைம் சக்கரவர்த்தி**

**ராஜேஸ்குமார்**

லைன் க்ளியரானால் ரெண்டு பேருக்குமே பிரச்சனையில்லை"

"எனக்கென்னமோ அது சுமுகமா முடியற பிரச்சனை மாதிரி தெரியலை."

நித்தியன் சாந்தாவின் நுனி மூக்கை தன் வலது கை ஆட்காட்டி விரலால் மெல்ல சுண்டினான்.

"உனக்கு எப்பவுமே எதிலுமே அவ நம்பிக்கைதான். எதையுமே பாஸிட்டிவா திங்க் பண்ண பழகிக்கணும். சரி... கிளம்ப லாமா? விசாலியோட ஃபேமிலி எனக்காக அங்கே வெயிட் பண்ணிட்டிருப்பாங்க..."

நித்தியன் எழுந்தான்.

கௌண்டரில் பில்லுக்குரிய பணத்தைக் கொடுத்துவிட்டு கார் பார்க்கிங்குக்கு வந்தார் கள்.

"சாந்தா, உன்னை எங்கே டிராப் பண் ணட்டும்?"

"நீங்க கிளம்புங்க. நான் ஒரு ஆட்டோ பிடிச்சு போயிடுறேன்..."

"இன்னிக்கு உனக்கு எந்த ஏரியா டியூட்டி?"

"மேற்கு மாம்பலம்."

"ஈவினிங் பார்க்கலாமா?"

"ம்..."

"எங்கே...?"

"கபாலீஸ்வரர் கோயில்."

"டயம்?"

"நீங்களே சொல்லுங்க..."

"ஆறு மணி...."

"சரி...."

சாந்தா தலையாட்டிக் கொண்டே காலி யாய்ப் போன ஆட்டோ ஒன்றை கைகாட்டி நிறுத்தினாள்.

"வரட்டுமா?"

"ம்..."

"விசாலியோட அப்பாகிட்ட பார்த்துப் பேசுங்க. நம்ம காதல் விவகாரத்தை இப் போதைக்கே போட்டு உடைச்சுடாதீங்க. அதை பின்னாடி சொல்லிக்கலாம்."

●●●

**"வா**ங்க மாப்ளே...!

வீட்டு வாசலிலேயே நின்றிருந்த விசாலி யின் அப்பா விஜயராகவனும் அம்மா புவனேசுவரியும் கடைவாய் வரைக்கும் சிரித்துக் கொண்டு வரவேற்றார்கள்.

"விசாலியோட பேச்சுக்கு இவ்வளவு மதிப்பு கொடுப்பீங்கன்னு நினைக்கலை. சொன்ன மாதிரியே பதினைஞ்சு நிமி ஷத்துக்குள்ள வந்துட்டீங்க..."

நித்தியன் அவஸ்தையாய் புன்ன கைத்துக் கொண்டே காரினின்றும் இறங்கி போர்டிகோ படிகள் ஏறினான். கண்கள் விசாலி எங்கே என்று தேடின.

விஜயராகவன் கண் சிமிட்டினார். "என்ன மாப்ளே, எம் பொண்ணு விசாலி யைத் தேடறீங்களா...? நீங்க வீட்டுக்கு வர்றீங்கன்னு தெரிஞ்சதும் டிரஸ் சேஞ்ச் பண்றதுக்காக அவ ரூமுக்குள்ள போனவ இன்னும் வெளியே வரலை..."

ஹாலுக்கு கூட்டிப் போய் சிவப்பு வெல்வெட் மொய்த்திருந்த சோபாவில் உட்கார வைத்தார்கள்.

"இங்கே வரச் சொன்னதினால உங்க ஷெட்யூல்ட் புரோக்ராம் எதுவும் ஸ்பாய்ல் ஆயிடலையே...?"

"நோ... நோ...."

"ஹலோ..." பின்பக்கம் குரல் கேட்டு நித்தியன் திரும்பினான்.

ஒரு பெரிய ரோஜாப்பூ பூத்த மாதிரி ரோஸ் நிற பட்டுப்புடவையில் நின்றிருந் தாள் விசாலி. நெற்றியில் ஜகினா ஸ்டிக்கர் பொட்டு ஒரு குட்டி நட்சத்திரமாய் மினு மினுத்தது.

நித்தியன் புன்னகைத்தான்.

விசாலி அவனுக்கு எதிரே இருந்த சோபாவுக்கு சாய்ந்தாள்.

"தேங்ஸ் எ லாட்."

"எதுக்கு?"

"என்னோட அழைப்பை அக்செப்ட் பண்ணிகிட்டு நீங்க வந்ததுக்கு."

"உங்க ஃபாதர் என்கிட்ட ஏதோ முக்கியமான விஷயம் பேச விரும் பறதா சொன்னியே...? அதுக்கு நான் மதிப்பு கொடுக்க வேண்டாமா?"

விஜயராகவன் குறுக்கிட்டார். "மாப்ளே! அது ஒண்ணும் அவ்வளவு பெரிய முக்கியமான விஷயமில்லை. எனக்கு சொந்தத்துல நாலைஞ்சு கம்பெனிகள் இருக்கிறது. உங்களுக் குத் தெரியும். அதுல ரெண்டு கம் பெனிகளுக்கு உங்களையும் ஒரு போர்டு மெம்பரா போட்டுடலாம்னு இருக்கேன். கல்யாண இன்விடே ஷனை பிரிண்ட் பண்ணும்போது உங்க பேர்க்கு கீழே அந்த க்வாலி ஃபிகேஷனையும் போட்டா எங்க ளுக்கு பெருமையா இருக்கும்..."

நித்தியன் சிரித்தான்.

"என்ன மாப்ளே! சிரிக்கறீங்க?"

"சிரிக்காம என்ன பண்றது அங்கிள். என்னோட இப்போதைய உண்மையான க்வாலிஃபிகேஷன் என்னான்னு உங்களுக்குத் தெரி யுமா? அது தெரிஞ்சா நீங்க என்னை இப்படி உட்கார்த்தி வெச்சு பேசிட்டி ருக்க மாட்டீங்க?"

எல்லோரும் முகம் மாறினார் கள். விஜயராகவன் குழப்பமாய் கேட் டார்.

"என்ன மாப்ளே சொல்றீங்க?"

"அங்கிள்! இன்னிக்கு காலையில் நீங்க எல்லோரும் ஏர்போர்ட்டுக்கு ஃபாரி னிலிருந்து ரிட்டர்னாகி வந்த என்னை ரிஸீவ் பண்ண வந்தீங்க... இல்லையா?"

"ஆமா...."

"அதுல ஒரு சின்ன திருத்தம்."

"என்ன?"

"நான் உண்மையில் ஃபாரின் போகலை. ஒரு குற்றத்தைப் பண்ணிட்டு அதுக்கு தண்டனையா பம்பாய் ஜெயில்ல ஒரு வருஷம் இருந்துட்டு வர்றேன். இது வெளியுலகத்துக்கு தெரியக்கூடாதுன்னு என்னோட அப்பா நான் ஃபாரின் போயிருக்கிறதாக சொல்லி...."

விசாலி குறுக்கிட்டு புன்னகைத்தாள் "அதுவும் எங்களுக்குத் தெரியும்."

(பௌர்ணமி தொடரும்)

---

**அமெரிக்க வல்லாதிக்கத்துக்கு பணியாத இரும்பு மனிதர் ஈராக் அதிபர் சதாமின் உண்மைக் கதை**

# சதாம் உசேன்

## 16

**1966**ல் சதாம் மறுமலர்ச்சிக் கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் ஆக் கப்பட்டார்.

உறுதியும், சாதுரியமும் நிறைந்த சதாம், உறுப்பினர்களைக் கண்காணிக்கும் பணியை திறமையாகச் செய்தார். தவிர, சாதாரண மக்களுடன் சகஜமாகவும் இனி மையாகவும் பழகும் தன்மையும் பேச்சாற் றலும் பெற்றிருந்ததால் வெகுஜனங்களை தன்கட்சியின்பால் ஈர்ப்பதில் அவர் கணிச மாக வெற்றி கண்டார்.

இரண்டே ஆண்டுகளில் நேரம் கனிந்து வந்தது! ஆட்சி...தொட்டுவிடும் தூரம்தான்!

1968 ஜூலை 17ந் திகதி இருள் பிரியாத அதிகாலைப் பொழுது.

விசாலமான ஜனாதிபதி மாளிகை இருளும் வெளிச்சமும் கலந்த கலவையைப் பூசிக்கொண்டு மிடுக்குடன் காட்சி தந்தது.

மாளிகையின் வளாகத்துக்குள் 'குடியரசு காவலர் படை' என்ற விசேஷ இராணுவப் பிரிவின் அதிரடிப்படையினர் காவலுக்கு நின்றிருந்தார்கள். அவர்கள் தோளில் துப்பாக்கிகள் சோம்பேறிகளாய் தூங்கிக்கொண்டிருந்தன.

பாதுகாப்பு பலமாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்தில் அவர்களுக் குத் துணையாக நான்கு நவீன டாங்குகள் நிறுத்தி வைக்கப் பட்டிருந்தன. டாங்க் மீது வீரர் கள் இரண்டிரண்டு பேராய் உட்கார்ந்து சன்னமான குர லில் ஏதோ பேசிக்கொண்டி ருந்தார்கள்.

திடீரென மெலிதான இரைச்சல்.

ஜனாதிபதி மாளிகையில் வெளிச்சுவரோரம் இருட் டோடு இருட்டாய் ஒரு வேன் வந்து நின்றது. அதன் ஹெட் லைட்டுகள் முன்னெச்சரிக் கையுடன் முன்பே அணைக்கப் பட்டிருந்தன...

வேனிலிருந்து சதாம் குதித்து இறங்கினார். அவ ரைத் தொடர்ந்து மறுமலர்ச்சிக் கட்சியின் அதிரடிப்படையினர் எந்திரத் துப்பாக்கிகள் சகிதம் கீழே இறங்கி சதாமை பின்தொடர்ந் தார்கள். ஓசைபடாமல் ஜனாதிபதி மாளிகை யின் சுவரேறி உள்ளே குதித்தார்கள்...

உள்ளேயிருந்த குடியரசு காவலர் படை யினரும், டாங்க் படையினரும் சதாம் கோஷ்டி யினரை வெறுமனே பார்த்துக் கொண்டிருந் தார்கள்.

சதாம் முன்கூட்டியே செய்திருந்த முறை யான முன்னேற்பாடுதான் இதற்கு காரணம்.



ஆட்சியைக் கைப்பற்ற தக்க தருணம் வந்துவிட்டது. என்று கணக்குப்போட்ட மறு மலர்ச்சிக் கட்சி பொதுச் செயலாளர் பக்கரும், துணைப்பொதுச் செய லாளர் சதாமும் தங்கள் திட்டத்துக்கு உதவக் கூடிய இராணுவ உயர் அதிகாரிகள் கிடைப்பார் களா? என்று வலைவீசி னார்கள். இரண்டு உயர் அதிகாரிகள் அந்த வலை யில் விழுந்தார்கள்.

ஒருவர் இராணுவ உளவுத்துறை துணை இயக்குநர் அப்துல் ரசாக் அல்-நயீஃப்!

இன்னொருவர் குடியரசு காவல் படையின் கமாண்டர் இப்ராகிம் அல்-தாவூத்!

ஆட்சியைக் கைப்பற்றுவதற்கான தேதி குறித்தவுடனே, அந்த நாளில் தன் சொற்படி ஆடக்கூடிய குடியரசு காவல் படையினரை ஜனாதிபதி மாளிகை பாதுகாப்பு ட்யூட்டியில் நிறுத்தி, "சதாமும், அவரது புரட்சிப் படையின ரும் அதிகாலையில் வருவார்கள். அவர்களை எதுவும் செய்யவேண்டாம்!" என்று இரகசிய உத்தரவும் பிறப்பித்திருந்தார் தாவூத்.

நயீஃப் இராணுவ உளவுத்துறை துணை இயக்குநராக இருந்ததால், மறுமலர்ச்சிக் கட்சியின் ஆட்சிக் கவிழ்ப்புத் திட்டம் பற்றிய உளவுத்துறை அறிக்கை எதுவும் மேலிடத்துக் குப் போய்விடாமல் அவர் பார்த்துக் கொண் டார்.

இத்தனை முன்னேற்பாடுகள் ஏற்கனவே செய்யப்பட்டிருந்ததால்தான், ஜனாதிபதி மாளிகையில் பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டி ருந்த வீரர்கள், சதாம் தலைமையிலான புரட்சி யாளர்களை எதிர்க்கவில்லை.

சதாம் ஜனாதிபதி மாளிகையின் உட்புறம் புகுந்தார்.

ஜனாதிபதி தூங்கிக்கொண்டிருக்கும் அறைக்குள் நுழைந்தார்...

1963-ல் மறுமலர்ச்சிக் கட்சியினரைக் கழற்றிவிட்டுவிட்டு, ஆட்சியைத் தக்க வைத்துக்கொண்ட ஆரீஃப் 1966-ல் ஒரு 'மர்மமான' ஹெலி கொப்டர் விபத்தில் உயிரிழந்து விட்ட தால், அவரது தம்பி யான இன்னொரு ஆரீஃப் ஜனாதிபதியாக பொறுப்பேற்றி ருந்தார்.

அவர் தூங்கிக்கொண்டிருந்த அறைக் குள் எந்திரத் துப்பாக்கியுடன் சதாம் நுழைந்த சிறிது நேரத்தில்-

புரட்சி கீதம் போல் துப்பாக்கி வெடிக்கும் ஓசை, அந்த அறைக்குள்ளிருந்து வெளியே கிளம்பி வந்து காற்றை நிறைத்தது...!

★★★

அதிரடிப் புரட்சி மூலம் ஆரீஃப் ஆட்சி கவிழ்க்கப்பட்டவுடன் பக்கர் புதிய ஜனாதிபதி ஆனார்.

ஆட்சியிலிருந்து அகற்றப்பட்ட ஐந்தே ஆண்டுகளில் மறுமலர்ச்சிக் கட்சி மீண்டும் ஆட்சியைப் பிடித்ததற்காக அக்கட்சியின் ஆதரவாளர்கள் ஈராக் முழுவதும் கோலா கலமாக விழா கொண்டாடினார்கள்.

(தொடர்ந்து வரும்)



படிப்பகம்

www.padippakam.com

# உதட்டில் ஒரு மச்சம்

# 05

### சுபா

"ஜ்யோதி..." அரவிந்த் தன் விரலை அவள் நெற்றியில் நடத்தி முக்கில் இறக்கி, உதடுகளைச் சீண்டி, கழுத்தில் நகர்த்தி...

"ம்ம்ம்" ஜ்யோதி சிணுங்கினாள். பூனைக்குட்டிபோல அவன் மார்பில் சுருண்டு கொண்டாள்.

"ஜில்ஜிட்டா"

துள்ளி விழுந்து அவன் மார்பில் குத்தினாள். "நீ ரொம்ப மோசம்."

"உனக்கு பூக்கள் என்றால் பிரியமாயிற்றே என்று ஃப்ரெஷ்ஷாகப் பார்த்துப் பார்த்து வாங்கி வந்தேன்டா."

"காலையில் விக்ரமும் வாங்கி வந்திருந்தான் அரவிந்த்..."

"மறுபடியும் பேச்சில் அவன் வந்து விட்டானா?"

"நினைத்தாலே பற்றிக்கொண்டு வருகிறது. என்னவெல்லாம் சொல்லி

**இதுவரை**

அரவிந்த்
ஒரு பைலட்.
அவனது மனைவி ஜ்யோதி.
அவர்களது நண்பன் விக்ரம்.
அவனுக்கு ஜ்யோதி மீது ஆசை.
இதற்கிடையே அரவிந்த்,
அமைச்சர் பிரகாஷ் குப்தாவுடன்
பைலட்டாக ஒடக்கரை
கிராமத்திற்கு செல்கிறான்.
அக்கிராமத்தை வளைத்துப்போட
அமைச்சர் திட்டமிட
அதை எதிர்க்கிறார்கள்
கிராம இளைஞர்கள்.
பொலிஸ் சுடுகிறது.
சீனு காயமடைகிறான்.

**இனி....**



விட்டுப் போனான் தெரியுமா? 'அரவிந்த்தின் வெண்ணெய் முஞ்சிதானே உன்னை மயக்கியிருக்கிறது. அவனை நீ வெறுக்கும்படி பண்ணுகிறேன் பார்!' என்று கத்தி விட்டுப் போகிறான்."

"மறுபடியும் அழ ஆரம்பித்து விட்டாய். விக்ரம் பாவம், ஜ்யோதி. பொம்மை பறிபோன குழந்தை போல இருக்கிறான். அந்தப் பரிதாபம்தான் ஆத்திரமாகவும், சோகமாகவும், வெறியாகவும், பிடிவாதமாகவும் மாற்றுகிறது அவனை."

"நீ இன்னொரு தடவை விக்ரமுக்குப் பரிந்து கொண்டு வந்தால் நான் என்ன செய்வேன் என்று எனக்கே தெரியாது!"

"விக்ரம் நல்ல நண்பன், ஜ்யோதி."

"நல்ல என்பதை எடுத்து விடு. அவனே அந்த வார்த்தையை அழித்து விட்டான்."

"நான் அவனிடம் பேசுகிறேன்."

"பேசாதே... ஓங்கி முகத்தில் குத்து. கையை முறித்து எறி. குதுப்மினாரின் உச்சியிலிருந்து கீழே தூக்கி எறி... உன்னை அவன் ஏதாவது செய்து விடுவானோ என்று எனக்குப் பயமாக இருக்கிறது அரவிந்த்."

"வேண்டாம்... விக்ரம் பற்றி இன்னொரு கணம் பேசவேண்டாம். அவன் உன்னை இன்றைக்கு ரொம்ப அப்செட் பண்ணியிருக்கிறான். ஐ வில் மீட் ஹிம்..."

"இனிமேல் பூங்கொத்து வாங்கி வராதே, அரவிந்த்."

"ஸோன் பப்டி? சும்மா சர்க்கரை போல் கரைகிறது- வாயில் போட்டவுடன். சேட்ஜி புதுசாகப் போட்டவுடன் எடுத்து எனக்கு பேக் பண்ணித் தந்தான்."

"எனக்கு புது ஸ்வீட் வேண்டாம் அரவிந்த். பழைய ஸ்வீட்தான் பிடித்திருக்கிறது!" என்று கண்ணடித்தாள் ஜ்யோதி.

❀✱

ஒடக்கரை

செந்தில் வெட்டப்பட்டான். வீச்சரிவாள் வயிற்றில் குத்திக் கிழித்த வேகத்தில் அவன் அந்தரத்திற்குத் தூக்கப்பட்டான்.

சைக்கிள் அவனிடமிருந்து விடுபட்டு எஜமானன் இல்லாமல் சற்றுத் தூரம் ஓடி ஒரு மரத்தின் வேர்மீது ஏறிக் கவிழ்ந்தது. பின், சக்கரம் ஓடிக்களைத்து ஓய்ந்தது.

பச்சைப்புல்லிலும், பழுத்த சருகுகளிலும் சிகப்பு இரத்தம். செந்திலைச் சுற்றி மூன்று ஜோடிக் கால்கள்.

"என்னடா, இந்த ஊரு உனக்குப் பட்டா எழுதிக் கொடுத்ததா? என்னவோ எங்க தலைவரை எதிர்த்து போராட்டம் நடத்தப் போகிறேன் என்று மிரட்டினாயாமே? உன் ஊர்க்காரர்கள் எல்லோருக்கும் இதுதான் பதில்!" என்று ஒருவன் ஆக்ரோஷமாகச் சொன்னது எதுவும் செந்திலின் மூளையில் பதிவாகவில்லை.

உயிர் அலை அலையாய்- சிகப்புக் குமிழ்களாக அவனிடமிருந்து வெளியேறுவது மட்டும்தான் அவனுக்குப் புரிந்தது. இமைகள் அவன் முயற்சியை மீறி மூடின. வெயில் இமைகளைத் தாண்டி கண்ணில் இருட்டாக இறங்கியது.

அவனைக் காலால் புரட்டி சைக்கிளை அவன்மீது எறிந்தார்கள்.

ஏதோ பேசுவதற்காக அவன் வாய் திறந்தபோது, வழி கிடைத்து விட்ட வெறியோடு மூச்சுக்காற்று ஸ்ஸ்ஸ் என்ற சத்தத்துடன் வெளியேறியது.

பட்சிகள் கீச் கீச் கீச் என்று விடாமல் கத்திக்கொண்டே இருந்தன.

🚲 🚲 🚲

ஒற்றை மெழுகுவர்த்தி எரிந்தது.

சுற்றி நின்றவர்களைத் தாண்டி காற்றுத் தீண்ட முடியாததால், சுடர் நேராக செங்குத்தாக நிமிர்ந்திருந்தது, அந்த ஆரஞ்சு ஜோதி. சூழ்நிலையில் ஒரு மின்சாரத்தைக் கலந்திருந்தது.

உஷ்ணமான மூச்சுக் காற்றுக்களில் வெளிப்படுத்தத் தயாராய் ஒரு ஆவேசம் ஒளிந்திருந்தது. வட்டமாக நின்றிருந்தவர்களை நகர்த்தி விட்டுத் தன் செயற்கைக்கால் ஒலிக்க தேவேந்திரன் முன் வரிசைக்குள் வந்தான். கூர்மையான கண்களால் ஒவ்வொரு முகத்தையும் துருவிப் பார்த்தான்.

அவன் நின்றிருந்த அருகாமையின் காரணமாக வெளிச்சம் கீழிருந்து அவன் முகத்தில் நடந்திருந்தது. நாசியின் நிழல் நெற்றியில் நீண்டிருந்தது. தாடை எலும்புகளால் கண்களில் நிழல் விழுந்திருந்தது. திட்டுத்திட்டான வெளிச்ச அமைப்பில் அவன் முகம் ஜெராக்ஸ் எடுத்த ஃபோட்டோ பிரதிபோல் இருந்தது.

தேவேந்திரன் மெழுகுச் சுடரைப் பார்த்துவிட்டுப் பேசலானான்:

"நம் முயற்சிகள் எல்லாம் தோற்று விட்டன. முதலில் நம் மனுக்களையெல்லாம் மந்திரி வீட்டுக் குழந்தைகள் மழைக்காலத்தில் கப்பல் விட்டன. அப்புறம் போராடப் புறப்பட்டால் நம்மீது துப்பாக்கிப் பிரயோகம். சமாதானமாகப் பேசுவோம் என்று நானும் செந்தில் அண்ணனும் அனுமதி பெற்று அமைச்சரையே சந்தித்தோம். எங்கள் ஊரைச் சிதைக்காதீர்கள் என்று கெஞ்சினோம். மீறிச் சிதைத்தால் எங்கள் இளைஞர்கள் மீண்டும் போராட்டத்தில் இறங்குவார்கள் என்றோம். அதற்கு அவன் என்ன சொன்னான் தெரியுமா? 'நான் ஒரு இடத்தை ஆசைப்பட்ட பிறகு அதைச் சொந்தமாக்கிக் கொள்ளாமல் விட்டதில்லை. வேண்டுமானால் உங்கள் இருவருக்கும் ஆளுக்கொரு இலட்சம் கூடுதலாகத் தரச் சொல்கிறேன். இரகசியமாக வாங்கிக் கொள்ளுங்கள். போராட்டம்தான் முடிவு என்று நீங்கள் இறங்கினால் இந்த மாதிரி ஆட்களை இரவோடிரவாக சீவுவதற்காகவே தீனி போட்டு ஒரு கூட்டமே வைத்திருக்கிறேன். ஜாக்கிரதை' என்று கொள்ளைக் கூட்டத் தலைவன்போல் மிரட்டினான்...

சொன்னதோடு, இல்லை, செந்தில் அண்ணன் ஒற்றையடிப் பாதையில் சைக்கிளில் திரும்பிக்கொண்டிருந்தபோது, அவன் மறிக்கப்பட்டான். கழுத்து முறிக்கப்பட்டது. வயிற்றில் கத்தி செருகப்பட்டது. ஊர்ப்பகை, 'பங்காளிச் சண்டை என்று கூசாமல் பொலிஸ் ஃபைலை மூடிவிட்டது.

நாம் கையைத் தூக்கிக் குரல் எழுப்பினால், கைது செய்ய ஜீப்கள் காத்திருக்கின்றன. வாயைத் திறந்தால் நாக்கை வெட்டு. குரல் கொடுத்தால் தொண்டையைக் கிழி என்று அவர்கள் அலைகிறார்கள். கடவுள்கள் செவிட்டுக் கற்களாய் நிற்கின்றன. இனி யார் காலிலும் விழுந்து நாம் எதையும் சாதிக்க முடியாது."

வட்டமான மண்டபத்தின் சுவர்கள் தேவேந்திரனின் வார்த்தைகளை எதிரொலித்து வீசின. சுற்றி இருந்த இளைஞர்கள் சூடாகியிருந்தார்கள்.

"பூமிக்குள் தூங்குகிற நம் சகோதரர்களை இரக்கமில்லாத புல்டோசர்களால் எலும்புகளாக அள்ளுகிறார்கள். நம் உணர்வுகளுக்கு இந்த மண்ணில் மரியாதை இல்லை. அயோக்கியர்கள் தந்திரசாலிகளாக இருக்கிறார்கள். சதி செய்து முதுகில் குத்துகிறார்கள். நாமும் மாறுவோம். வெள்ளத்தை வெள்ளத்தால் தடுப்போம். நெருப்பை நெருப்பால் சுடுவோம். அந்த முயற்சியில் நம் உயிர்கூடப் பிரியலாம்."

"எல்லையில் கொடுக்கத் தயாரான உயிர்தானே? எங்கள் ஊருக்குத் தரமாட்டோமா? எத்தனை உயிர்கள் வேண்டும் தேவ்? எடுத்துக்கொள்!"

சுவரில் எறியப்பட்டிருந்த நீளமான நிழல்கள் குரல் கொடுத்தன.

தேவேந்திரன் அந்த இளைஞர்களைப் பெருமையுடன் பார்த்தான்.

"கத்தியை எடுத்தோம், கழுத்தில் பாய்ச்சினோம் என்பது போன்ற சுலபமான வேலை இல்லை இது. இயந்திரத் துப்பாக்கிகளோடு அவனைச் சுற்றி எப்போதும் காவல். குண்டு தொட முடியாத கார்கள். தோட்டா துளைக்க முடியாத மேடை. திட்டமிட்டு ஒவ்வொரு காயாக நகர்த்தி, அவன் கோட்டைக்குள் நாம் நுழைய வேண்டும். திட்டமிடும் வேலையை என்னிடத்தில் விடுங்கள்."

"உன் மேல் பூரண நம்பிக்கை இருக்கிறது தேவ்."

"இனி நாம் உணர்ச்சிவசப்படக் கூடாது."

"சரி தேவ்!"

"கடைசி வரை ஒற்றுமையாக இருக்க வேண்டும்."

"இறுதிவரை இணைந்தே இருப்போம்."

தேவ் தன் முஷ்டியை மடக்கினான். ஆவேசக் குரலில் முழங்கினான்.

"பாதுகாப்புக்களைத் தகர்ப்போம்! நம் எதிரியை மண்ணில் சாய்ப்போம்!"

(○–வரும்–○)

## யார் இவர்?

உலகிலுள்ள அனைவராலும் மிகவும் விரும்பப்பட்ட இந்த இளம் பெண் யார் என்று தெரிகிறதா? மறைந்த அன்னை தெரேசா. 1910ம் ஆண்டு அல்பேனியாவில் வசித்த மிகப்பெரிய பணக்காரக் குடும்பத்தில் பிறந்தவர். அன்னை தெரேசாவுக்கு ஒன்பது வயதாக இருந்த போது, பணக்கார வியாபாரியான தந்தை இறந்து விட்டார்.





திடீரென இவர்களது குடும்பம் வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டது. இந்த அனுபவம்தான் தெரேசாவின் மனதை மாற்றியது. அதன் பிறகே கன்னியாஸ்திரியாக மாறி இந்தியாவில் உள்ள ஏழை மக்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற முடிவுக்கு வந்தார். ○

# கவியரசுவின் சுயசரிதை

# 24

**கவியரசு கண்ணதாசன் எழுதிய–அவரது சுயசரிதத்தின் முக்கிய பக்கங்கள் உங்கள் முன் விரிகின்றன. 'எப்படி வாழ வேண்டும் என்பதற்காக அல்ல; எப்படி வாழக்கூடாது என்பதற்கான வழிகாட்டிகள்' இவை....**

சூழ்நிலைகளாலும் சந்தர்ப்பங்களாலும் அப்போது கிடைத்த நண்பர்களாலும் அரசியல்வாதியாக மாறிய அவன், அதை ஒரு பெரிய விளையாட்டு மைதானமாகக் கருதி விளையாடத் துவங்கினான்.

கட்சியில் அவனது போக்கு ஒரே சீராக இருந்ததில்லை. கட்சி எப்படி ஒரே சீராக இருக்கவில்லையோ- அப்படியே அவனும் இயங்கினான். மனித நாகரிகத்தின் சாதாரண வரம்புகளைக்கூட அவன் கடைப்பிடிக்கவில்லை. சேர்க்கையின் பாவம் அவனைப் பெரிதும் தொத்திக்கொண்டது. கீழ்த்தரமான ரசனையே அவன் மனதில் ஒரு பெரிய நியாயமாக உருக்கொண்டிருந்தது. கட்சியின் தொண்டர்களும் தலைவர்களும் வேடிக்கை காட்டுவதே அரசியல் என்று நினைத்துக் கொண்டிருந்தார்கள்.

அதுதான் அரசியல் என்று அவனும் நம்பினான்.

'திராவிடத் தனிநாடு' என்பது சாத்தியமானதே என்று அவனும் கருதினான். 'இதைவிடச் சிறிய நாடுகள் சுதந்திரமாக வாழும்போது இது ஏன் வாழ முடியாது?' என்ற கட்சியின் கருத்தை அவன் ஒப்புக்கொண்டான். பார்ப்பன ஆதிக்கம் ஒழிக்கப்படவேண்டும் என்றும் தெய்வ நம்பிக்கை தகர்க்கப்பட வேண்டும் என்றும் 1956வரை கட்சி பலமாக



வாதிட்டது. ஆகவே பிரச்சாரத்திற்காக வாய்ப்பு, பேச்சாளர்களுக்கு அதிகமாகவே இருந்தது. மூச்சு விடாமல் மூன்று மணிநேரம் பேசுவதற்கு, கட்சியின் கருத்துக்கள் பெருந்துணை புரிந்தன.

இது வெறும் அரசியல் கட்சி அல்ல; மாபெரும் விடுதலை இயக்கம், பிரஞ்சுப் புரட்சிபோலவும் ரஷ்யப் புரட்சிபோலவும் பெரும் புரட்சி ஒன்றை நடத்தப்போகிற ஓர் இயக்கம்.

'இத்தாலிய வீரன் கரிபால்டி- துருக்கியின் கமால்பாட்சா, தத்துவமேதை இங்கர்சால்- கிரேக்க நாட்டு சாக்ரடீஸ், சோவியத் நாட்டு லெனின்- இவர்களெல்லாம் ஒன்று சேர்ந்து வந்து பிறந்த வடிவமே அண்ணாத்துரை!' இப்படிக் கட்சிப் பேச்சாளர்களும் பேசினார்கள். அவனும் முழு நம்பிக்கையோடு பேசினான்.

'சமூகம்- பொருளாதாரம்- அரசியல் விடுதலைக் கிளர்ச்சி' என்று எல்லாத் தலைப்பிலும் பேசினான்.

கானல் நீரிலே விண்மீனை வேட்டையாடுவதுபோல், இல்லாத ஒன்றிலே எல்லாவற்றையும் சுட்டிக் காட்டிய ஓர் அரசியல் கட்சியாக அன்று தி.மு.கழகம் இயங்கியது உண்மை. இது பகையினால் வரும் வார்த்தை அன்று. காலம் உணர்த்தி விட்ட ஒன்றாகும்.

ஆனால் அன்றைக்கு இந்தக் கருத்துக்களெல்லாம் ஒரு நாள் பொய்யாகும் என்று அவன் கருதியதில்லை. மந்திரவாதியிடம் நம்பிக்கை வைத்த மலடியைப்போல்- கட்சியின் கருத்துக்களில் அவன் நம்பிக்கை வைத்திருந்தான். என்னதான் மந்திரம் ஜபித்தாலும் கடைசிவரை பிள்ளை பிறக்காது என்று தெரிந்தே மந்திரவாதி ஜபித்தான். மலடிதான் மகனை எதிர்பார்த்து ஏமாந்தாள்.

எத்தனை கூட்டங்கள்- எத்தனை மாநாடுகள் எத்தனை ஊர்வலங்கள்- எத்தனை- தலைப்புக்களிலே முழக்கங்கள் திராவிடப் பொன்னாடுபற்றி எத்தனை இசைப் பாடல்கள்- எத்தனை சினிமாக்களிலே பிரசாரம்-தொண்டர்களின் உள்ளத்தில்தான் எவ்வளவு ஆழ்ந்த நம்பிக்கை- பகலிலும் இரவிலும் தொடர்ந்து வந்த அந்த மாபெரும் கனவு பல உள்ளங்களை வெறிகொள்ளச் செய்தது. அந்த உள்ளங்களில் அவன் உள்ளமும் ஒன்று.

மேடைமீது ஏறிவிட்டால் சாமியாடும் பூசாரியைப்போல் ஆடித்தீர்ப்பான். 'அடைந்தால் திராவிட நாடு-இல்லையேல் சுடுகாடு'- என்ற முழக்கத்தின் ஓசை நயம் அந்தப் பிஞ்சு மனத்தின் ஆசை நயத்துக்கும் தூபம் போட்டது. பின்னாளில் திரு. சம்பத் சொன்னதுபோல் 'அது ஒரு பயங்கரமான அரசியல் மோசடி' என்பதை யாரும் சிந்திக்கக்கூட இல்லை. கட்சியின்மீது நம்பிக்கை; கருத்துக்களின் மீது நம்பிக்கை. தலைவர்மீது பக்தி. ஆம் அது ஒரு கட்சியாக இல்லை. மதமாகவே இயங்கிற்று.

1954ல் இருந்து 56 வரை அவன் பெரிய இலக்கிய விமர்சகனாகவும், அரசியல் ஆர்ப்பாட்டக்காரனாகவும், கவிஞனாகவும், வசனகர்த்தாவாகவும் தன்னை வெளிப்படுத்திக் கொண்டான்.

கவிஞன் என்பதைத் தவிர மற்ற தகுதிகளை, மற்றவர்கள் ஒப்புக்கொள்ளவில்லையென்பதும் உண்மை. ஆனால் ஒவ்வொரு துறையிலும் தான் ஓங்கி வளர வேண்டும் என்று அவன் ஆசைப்பட்டான்.

இந்தக் காலங்களில் நடந்த நிகழ்ச்சிகளைத் தேதி வாரியாகவோ, மாதவாரியாகவோ விவரிப்பதில் அர்த்தமில்லை. காரணம் ஒரே மாதிரியான சிறுபிள்ளைத்தனத்தில்தான் அவன் வருடக் கணக்கில் வாழ்ந்தான். ஆட்டம், ஓட்டம், பரபரப்பு, அடிதடி ரகளை, கீழ்த்தரமான தாக்குதல், தள்ளாடும் பத்திரிகை- தலையில் ஏறிய கடன்-நன்றி மறந்த ஊழியர்கள்-நன்மை செய்யாத நண்பர்கள் இதுதான் அன்றையக் கட்சி வாழ்வில் அவன் கண்ட நிலை.

வாழ்க்கையில் ஒருவனுக்குத் திட்டமில்லாமல் போனால்- அவனது எல்லா அனுபவங்களும் கசப்பாக இருக்கும் என்பதற்கு அவன் உதாரணம். தெளிவில்லாத மனம் அலை பாய்வதினால் ஏற்படும் குழப்பம்- அவனுக்கே சொந்தமான ஒன்று.

(சரிதம் தொடரும்)



படிப்பகம்

www.padippakam.com

# தூரத்து மரியாதை

தொலைபேசி ஓய்வு ஒழிச்சலின்றி அலறியது. அந்த அலறலில் வந்த அனுதாபச் செய்திகளைச் சேகரித்துக் கொண்டிருந்தான் சங்கர். மூன்று நான்கு இரவுகளாகக் கண்விழித்த காரணத்தால் அவனையறியாமலே இமைகள் மூடியபோது... மீண்டும் தொலைபேசி சிணுங்கியது.



ரூபராணி

"ஹலோ சங்கர் ஹியர்" என்றான் சுரத்தில்லாமல்.

"ஹாய் சங்கர்.." மறுமுனையில் இருந்து வந்த குரல் கலாவினுடையது.

"டடியின்ர ஃபியூன்றல் அரேஞ்ச்மன்ற்ஸ் எல்லாம் றெடியா?" என்று கேட்டாள்."

"றெடிதான்...." என்றான் சலிப்பாக.

"சரி ஒரு குறையும் வைக்காத, மம்மி, பேர்ல ஆனந்த் பேர்ல, என் பேர்ல, ஒக்கிறஸ் றீத்ஸ் வாங்கிவச்சியா?"

"வைச்சாச்சு.....!"

"பெட்டி?... வீடியோ பண்ணினியா?"

"முதிரைப்பெட்டி-வீடியோ பண்ணியாச்சு"

தொடர்பு துண்டிக்கப்பட்டது.

திடீரென்று எதையோ நினைத்த சங்கர் நாக்கைக் கடித்துக் கொண்டு தன் மணிக்கட்டைத் திருப்பி நேரத்தைப் பார்த்தான். வானொலியின் மரண அறிவித்தல் ஞாபகம் வந்தது. மெதுவாக அதை முடுக்கிவிட்டான்.

முன்னாள் கணக்காளர் குருபரன் காலமானார். அவர் மல்லிகாவின் (கனடா) அன்புக் கணவரும், ஆனந்த் (அமெரிக்கா) கலா (கனடா) ஆகியோரின் அருமைத் தந்தையுமாவார். நல்லடக்கம் நாளை பிற்பகல் நாலு மணிக்கு நடைபெறும்.

தகவல்-சங்கர்

சூழ உள்ளவர்களின் உதவியுடன் குருமூர்த்தியின் இறுதிக்கிரிகைகளை நடத்தி முடித்து விட்டு அவன் வீடுவந்து சேர்ந்தபோது அது சூனியமாகத் தெரிந்தது. இருந்த இரண்டொரு நண்பர்கள்கூட இல்லாமல் போனது அவனுக்கு என்னவோ போலிருந்தது.

சங்கர் தன்னந் தனியனாய் குருமூர்த்தியின் படத்தில் பார்வையைப் பதிய, விட்டு அவருடைய சாய்மனையில் சாய்ந்திருந்தான். அவன் கண்களில் இருந்து வடிந்த நீர் கன்னம் வழியாய் ஓடிக் கழுத்தைச் சரணடைந்தது. தான் தனித்து விட்டதாய் நினைத்தபோது "சங்கர்.... மை சண்...! யூ ஆர் நொட் எலோன்..... ஐ ஆம் ஹியர்!" என்று குரல் கேட்பதுபோல் அவனுக்குள். ஒரு பிரமை.

"அப்பா... அப்பா.." என்று குழந்தையைப் போல் விம்மி விம்மி அழுதான். அவனுடைய சின்னப்பராயம் அவன் எதிரே நிழலாடியது.

சங்கருக்கு அப்போது வயது பத்து இருக்கும். பார்ப்பதற்கு அழகாய் இருப்பான். கண்டோரைச் சுண்டி இழுக்கும் சுறுசுறுப்பு அவனுக்கே சொந்தம். அந்தப் பகுதியில் உள்ள மாணிக்கத்தின் அப்பக் கடையில் அவன் எடுபிடி. இத்தனைக்கும் அவன் பெற்றவர்களை அறியாதவன். ஆனால் தனக்கு அம்மா அப்பா இல்லை என்று சொல்லப் பிடிக்காதவன். யாராவது கேட்டு விட்டால் அந்தக் கடைக்கு வரும் யாரையாவது காட்டிவிட்டு ஓடுவான். 'சுப்பு' என்று அழைப்பதை விரும்பாமல் 'சங்கர்' என்று தனக்குத்தானே பெயர் சூட்டிக் கொண்டான் அவன்.

அப்பக்கடைக்கு வந்த குருபரன் அடையாள அட்டையை விழுத்திவிட்டுப் போவதைக் கண்டுவிட்டான் சங்கர். குருபரன் இதையறியாதவராய் தெருவைக் கடந்த போது, சங்கர் அதை எடுத்துக்கொண்டு பின்னால் ஓடி அவரின் நடையை நிறுத்தினான்.

"ஐயா இதக் கீழ போட்டிட்டீங்களே?" அடையாள அட்டையை நீட்டினான்.

குருபரனுக்கு உயிர் போய் மீண்டது போல் இருந்தது. "நல்ல காரியம் பண்ணினாய்!" அவர் கண்களில் நன்றி சுரந்தது. இருபது ரூபாயைக் கொடுத்தபோது "வேண்டாங்க..." என்றான்.

"அப்போ உனக்கு என்ன வேணும்"?

"அப்பா"

"அப்பாவா?" குருபரன் தான் நிற்பது தெரு என்பதையும் மறந்து கடகடவென்று சிரித்தார்.

மீண்டும் அவன்... "தருவீங்களா?" என்றான், குருபரன் செயலிழந்து போனார். அவர் கண்களில் ஈரம் கசிந்தது. அவர் எதையும் சிந்திக்கவில்லை. அவன் கையை இறுகப் பற்றியபடி வீடுபோய்ச் சேர்ந்தார்.

மல்லிகா அவர் மனைவி. வீட்டு வேலைக்கு அளவான பெடியன் என்றாள். ஆனந்த், கலா குருபரனின் பிள்ளைகள். முகங் கோணித் தம் வெறுப்பை வெளியிட்டனர்.

குருபரன் சங்கரனை மகனாய் ஏற்று அவனை ஆளாக்கினார். ஏனையோர் அவனை வேற்று மனிதனாய் நடத்தியது கண்டு மனம் மிக வருந்தினார். பிள்ளைகள் எல்லாரும் மணம் முடித்து வெளிநாடுபோக எண்ணியபோது... பக்கவாத நோயில் வீழ்ந்தார் குருபரன்.

"சங்கர் டடியை நல்லாக் கவனிப்பியா?" ஆனந்த் அமெரிக்கா போகுமுன் பாசத்தைப் பொழிந்தான்.

"சங்கர் உன்ன நம்பியே நான் டடிய விட்டுப்போறன். பணத்தப் பாக்காத.... புரிஞ்சதா?" கனடா போகுமுன் கட்டளையிட்டுச் சென்றாள் கலா.

குருபரனின் மனைவிக்கு எல்லாவகையிலும் ஒத்தாசையாக இருந்தான் சங்கர். தனக்குக் கிடைத்த அப்பாவில் உயிரையே வைத்திருந்தான். இரவு பகல் பாராமல் அவருக்குப் பணிவிடை செய்தான். நோயின் பிடியில் இருந்து குருபரனால் விடுபடமுடியவில்லை. அவர் இருபத்தி ஏழு வயதுச் சங்கரைக் கட்டியணைத்து "நான்தாண்டா உன் அப்பா... நான்தாண்டா உன் அப்பா" என்று உணர்ச்சி வசப்பட்டு நாத் தழுதழுக்கக் கூறினார்.

கலாவிடமிருந்து வந்த கடிதத்தைக் கையில் எடுத்துக் கொண்டு மல்லிகா தன் கணவனை நெருங்கினாள். "என்னங்க கலாவுக்குக் கொழந்த பொறந்திருக்காம். அதக் கவனிக்க பேபி சிற்றர் வச்சுக்க எவ்வளவோ டாலர் செலவாகுமாம். அதனால உதவிக்கு என்னை, வரட்டுமாம்."

குருபரன் மௌனத்திலாழ்ந்தார். அதைச் சம்மதமாக எடுத்து மல்லிகா பயண ஏற்பாடுகளில் இறங்கிவிட்டாள். சங்கர் அவளை விமான நிலையத்துக்கு வழியனுப்பச் சென்றபோது... "சங்கர்! பிளீஸ் உன் அப்பாவையும் வீட்டையும் நல்லாக் கவனிச்சுக்க... நான் ஆறு மாதங்களில் திரும்பிடுவேன். உன்ன நம்பி ஐயாவையும் வீட்டையும் ஒப்படைக்கிறன்!" வார்த்தைகளில் அன்பு வடிந்தது.

"நீங்க எந்தக் கவலையும் இல்லாமப் போய்வாங்க. நான் எல்லாத்தையும் கவனிக்க மாட்டனா?" சங்கரின் கண்களில் நீராடியது.

விமான நிலையத்திலிருந்து வீடு திரும்பிய சங்கரைக் குருபரன் குழந்தையைப் போல் அணைத்து முத்தமாரி பொழிந்தார். அவர் வாய் 'மை சண் மை சண்' என்று முணுமுணுத்தது. நாட்கள் நகர்ந்து மாதங்களாகின. குருபரன் நிலை கவலைக்கு இடமாகியது. சங்கரின் கைகளைப் பற்றியவாறு கண்களை மூடிவிட்டார்.

கொல்லும் நினைவுகளில் மூழ்கித் தனிமையில் தவித்த அவனை மீண்டும் தொலைபேசி உலுக்கியது.

"எஸ்.. சங்கர் ஹியர்....."

"அம்மா பேசிறன். ஐயாவின்ர ஆத்ம சாந்திக்காகப் பிள்ளையார் கோயில்ல பூசை கட்டு. அடுத்தமாதம் நான் வருவேன். வீட்டு ஒழுங்குகளைக் கவனித்துவிட்டு திரும்பவும் கனடா வரவேண்டும்....."

சங்கர் நடைப்பிணமாகப் பிள்ளையார் கோயிலை நோக்கி நடக்கிறான்... ■

# கப்பல் வருமா?

பட்டப்படிப்பை முடித்துவிட்டு வேலைக்காக அலைந்து திரிந்த முகுந்தனும், நிஷாந்தும், தலைநகரில் 'யாரையாவது' பிடித்தால்தான் இலகுவில் வேலை கிடைக்கும் என்பதைப் புரிந்து கொண்டு தலைநகர் புறப்பட்டு வந்தவர்கள் இன்று திருமலை உதவி அரசாங்க அதிபர் அலுவலக விறாந்தையில் கப்பலுக்காக நிதமும் தவங்கிடக்கின்றனர்.

"டேய் மச்சான் இண்டைக்கேனும் கப்பல்

நிஷாந், அம்மா, அங்கினேக்க கிடந்து தனிய கஸ்ரப் படுவா... நான் இல்லாம மனிசி சாப்பிடவும் மாட்டா....." என்று புலம்புவான். சாதாரணமாக இடம் விட்டு இடம் பிரிவதற்கே கண்கலங்கும் நண்பனிடம் 'எப்படி இதை நான் சொல்வது... எப்படி தேற்றுவது?' என்று நிஷாந் குழம்பித் தவித்தான், துடிதுடித்தான்.

"முகுந்தன் எனக்கு அவசரமாக யாழ்ப்பாணம் போக வேணுமடா, போய்



எஸ்.ஜெசி

வருமோ...?" என்று ஆற்றாமையோடு கேட்ட முகுந்தனிடம் எதை, எப்படி, என்னவென்று சொல்ல முடியாத நிலையில் நிஷாந்தன் நினைவினை பின்னோக்கிப் பார்க்கின்றான்.

முகுந்தன் பிறந்த வீட்டிற்குள்ளேயே அவன் தந்தை இறந்துவிட யாருடைய உதவியும் இன்றி, நாலு வீடுகளில் வேலை செய்து, தன் ஒரே மைந்தன் முகுந்தனை அன்போடு வளர்த்து, இன்று அவன் பட்டப் படிப்பை முடிக்கும் நிலைமட்டும் தந்தையாக, தாயாக, தனயனாக நல்ல நண்பனாக இருந்தவர் முகுந்தனின் அன்னை செல்லம்மாதான். நிஷாந்துடன் முகுந்தன் தலைநகர் புறப்பட, அன்னையவள் கண்கலங்கினாள்.

"மகனே! சுகமாகப் போய் வெற்றியோட திரும்பி வா ராசா" என்று வழி அனுப்பி வைத்தார். முகுந்தனும், தாயைப் பிரிந்து வர மனமில்லாமல் தான் வந்தவன்...

ஒவ்வொரு நிமிடமும், "டேய் அலுவலை முடித்துப்போட்டு திரும்பி, கொழும்பு வருவோம், என்று பொய் சொல்லி கப்பலுக்காக இருவரும் திருமலை வந்தே இரு வாரங்களிற்கு மேலாகிப் போச்சுது... ஆனால் ஒவ்வொரு நாளும் ஏமாற்றம்தான் மிச்சம்.

"டேய் நிஷாந், அம்மா, இப்ப காங்கேசன் துறைமுகத்தடியில நின்று கொண்டு... பிள்ள எப்ப வருவான் என்று பார்த்துக் கொண்டிருப்பா... இல்லையாடா....?" என்று ஜோக் அடித்த முகுந்தனுக்கு தெரியாமல் தன் கன்னங்களில் சூடாக வடியும் கண்ணீரை சுண்டிவிட்டான் நிஷாந்.

'டேய் உன்ர அம்மா, காங்கேசன் துறையில மட்டுமில்லடா எந்த இடத்தில நின்றும் உன்னை எதிர்பார்க்கமாட்டாடா... டேய் முகுந்தன் இப்ப... இப்ப அம்மா... உயிரோடு இல்லையடா...' என்று கூறி உரத்து ஓலமிடவேணும் போல கிடந்தாலும் மிகவும் கஷ்ரப்பட்டு தன்னை அடக்கி கொள்கிறான் நிஷாந்.

தாய் இறந்த செய்தி தெரியாமல் முகுந்தன் கப்பலுக்காகக் காத்திருக்கிறான். இப்படி ஒரு முகுந்தன் மட்டும்தானா? ●

# மனதில் இடமில்லை

"சுகுமாரா, இங்கே வா...!" என்று தெருவில் விளையாடிக் கொண்டிருந்தவனுக்கு சமையலறையிலிருந்து கட்டளை பறந்தது.

வாணலியில் வாழைக்காயை பொரியல் என்ற பெயரில் சித்திரவதை செய்து வதைத்துக் கொண்டிருந்தாள் லீலா.

தான் பெற்ற பிள்ளையிடம் எப்படியெல்லாம் இருக்க வேண்டும் என்றே தெரியாத மரமண்டையாகத்தான் நடந்து கொள்கிறாள் அவள்..

சுகுமாரன் தற்போது எட்டாம் ஆண்டு படித்துக் கொண்டிருக்கிறான். அவனுக்கு படிப்பு என்றால் கிலி. ஆனால் விளையாட்டில் மட்டும் புலி. அம்மாவின் குரல் அவன் காதில் விழுந்துவிட்டாலே போதும். எங்கிருந்தாலும் உடனே ஓடோடி வந்துவிட வேண்டும். இல்லையென்றால் தன்பாடு திண்டாட்டம்தான். என்ன? கன்னத்தில் நெருப்புப் பொறி பறக்கும். அல்லது நெருப்பில் பழுத்த கம்பி தேகத்தில் பதம் பார்க்கும். அல்லது ஊதாங்குழல் தாக்குதல் நடக்கும்... அவ்வளவுதான்!



மீரா

அந்த அளவுக்கு லீலா சுகுமாரனை பொத்தி பொத்தி முன்னெச்சரிக்கையாக வளர்த்துக்கொண்டிருந்தாள்.

"என்னம்மா?"

"குழாயில தண்ணி வருதா பாரு. வந்ததுன்னா குடத்தையெல்லாம் எடுத்துக்கிட்டுப் போய் தண்ணி புடிச்சுக்கொண்டா போ." என்ற சிடுசிடுப்புக் கட்டளை கேட்டு அப்படியே செய்தான்.

"ஸ்கூலுக்கு நேரமாயிட்டு. நான் போறேன்மா...." சுகுமாரன் பயந்து, பயந்து சொன்னான்.

"என்னடா, அதுக்குள்ளால அவசரம்? உன்னை மாதிரி சீக்கிரம், சீக்கிரமா போய் படிச்சவங்க எல்லாம் என்ன ஒரு உத்தியோகத்துலயா இருக்கிறாங்க?, தண்டச் சோறு தின்னுகிட்டு ஊரைச் சுத்தறாங்க. ஸ்கூலுக்கு இப்ப ஒண்ணும் அவசரமில்ல. நீ பொறுமையாகப் போனால் பள்ளிக்கூடம் எங்கேயும் ஓடாது. மதியம் சாப்பாட்டுக்கு சட்னி அரைச்சு இரவு சுட்ட தோசை இருக்குது... டிஃபின் பொக்ஸிலே வெச்சு எடுத்துட்டு அப்புறமா போ!" என்று சொல்ல... சுகுமாரனுக்கு எரிச்சலாக இருந்தது.

புத்தகங்களை எல்லாம் கழுதைப் பொதி மாதிரி முதுகில் சுமந்து கொண்டான்.

"நான் போகட்டுமாம்மா."

"டேய் மதியம் ரசம் வெச்சு அப்பளம் எல்லாம் பொரிச்சு வைக்கிறேன். ரசம் வைக்க பூண்டு, மிளகு எல்லாம் இல்ல. மூலையில் இருக்கிற கடைவரைக்கும் போய் அதெல்லாம் வாங்கிக் கொடுத்துட்டுப் போ." என்றாள் லீலா.

"எனக்கு டைம் ஆயிடுச்சும்மா. நீ போய் வாங்கிக்க..." என்றான். லீலாவுக்குக் கோபம் வந்துவிட்டது! தன்பேச்சை மதிக்காமல் எதிர்த்துப் பேசி விட்டானே என்று.

சுகுமாரன் கன்னத்தில் அறை.

மாலையில் வீட்டுக்கு வந்ததும், வராததுமாக புத்தக மூட்டையை முதுகிலிருந்து அவசரமாக இறக்கி வைத்துவிட்டு, பயணக் களைப்பில் படுத்துக் கொண்டிருந்த அப்பாவை உலுக்கி உலுக்கி எழுப்பினான். அவன் கண்களில் நீர் முட்டி மோதிக் கொண்டிருந்தது. எழுந்து கொண்டவர் பதை பதைப்புடன் சுகுமாரனிடம் "எதுக்குடா இப்படி அழறே?" என்றார்.

"அப்பா நீங்க ஊருக்குப் போனதிலேர்ந்து சித்தி என்னை தினமும் கொடுமைப் படுத்திக்கிட்டே இருந்தாங்கப்பா."

"யார்றா உனக்கு சித்தி?" என்ற அப்பாவின் கேள்விக்கு சமையலறையிலிருந்து வெளிப்பட்ட லீலாவை விரலால் சுட்டிக் காட்டினான்.

"அம்மாவை சித்தி என்று சொல்லாதே! சித்தி என்று சொல்லாதே!" என்று பக்குவமாக பலமுறை அப்பா சொல்லி பாடம் நடத்தியும்கூட சுகுமாரனுக்கு அம்மாவா? சித்தியா? என்ற கேள்வி மட்டும் ஆழ்மனதில் நிலையான ஒரு இடத்தைப் பிடித்துக் கொண்டிருந்தது! ●

# குழப்பம்

சுகுணா ஒரு முடிவோடு காத்திருந்தாள். 'ரகு இன்றைக்கு வரட்டும். இரண்டுல ஒண்ணு நாக்கை பிடுங்கறாப்ல கேட்டுடணும்.'

'இத்தனை நாளா என்னைதான் கல்யாணம் பண்ணிக்கப்போறதாக ஊர் முழுக்க பறைசாற்றி விட்டு, இன்னிக்கு வேற எவளையோ பொண்ணு பார்க்க போயிருக்கிறாராமே...! எவ்வளவு நெஞ்சழுத்தம்! அப்ப என்கூட எதுக்கு பழகணும்... ஆசை வார்த்தையை தூவணும்...!' மனதுக்குள் கருவிக் கொண்டிருக்கும் போதே...எதிரில் வந்து உட்கார்ந்தான் ரகு.



முத்துராஜா

சுகுணா பார்வையில் அனலை வீசினாள். "என்ன சுகுணா.. ஏன் அப்படி பார்க்கிற...? என்ன நடந்தது...?" அவள் பார்வையின் பொருள் புரிந்து ரகுதான் கேட்டான்.

"இன்னும் என்ன நடக்கணும்...?" வெடித்தாள் சுகுணா.

"கொஞ்சம் புரியும்படியா பேசேன்..."

"இன்னிக்கு பொண்ணு பார்க்க சங்கரன் கோவில் போனீங்களா?"

"ஆமாம் யார் சொன்னது...?"

"சொன்னது யாராயிருந்தா என்ன, அதுதானே உண்மை! இங்க நான் ஒருத்தி குத்துக்கல்லாட்டம் இருக்கும்போது... இன்னொருத்தியை போய் பார்க்க உங்களுக்கு எப்படி மனசு வந்தது...?" இத்தனை நேரம் இருந்த ஆவேசம் போய் சுகுணா விசும்பத் தொடங்கினாள்.

"ஏய்... சுகுணா... நான் பொண்ணு பார்க்கப் போனது... எனக்கில்லை... என் ஃபிரண்ட் சுகுமாரனுக்கு... உனக்கு யார் இதை சொன்னது?"

அவன் விளக்கத்தை கேட்டு விழிகளை துடைத்தவள். பஸ் புறப்படும் அவசரத்தில் தன் தோழி சொன்னதை சரியாக காதில் வாங்காததால்தான் இத்தனை குழப்பம் என்பதை உணர்ந்து தலை குனிந்தாள் சுகுணா. ■

# உயரங்கள்

பிரபல வர்த்தகர் சுரேஷ் தன் பார்ட்ணருடன் புறப்பட்டு தன் பங்களாவை விட்டு வெளியே வந்தார்.

போர்டிக்கோவில்- காரை பளபளவென துடைத்து நிறுத்தியிருந்தான் டிரைவர் கணேசன்.

சுரேஷுக்கு வணக்கம் சொன்னான். தலையாட்டிக்கொண்டே, "மிஸ்டர், நாத் இதுதான் போனவாரம் நான் வாங்கின பென்ஸ்கார்."

பேசிக்கொண்டே காரின் இடது பக்கக் கதவில் கீறல் விழுந்து பெயிண்ட் போனதைக் கண்டு அதிர்ந்தார். கணேசனை முறைத்தார்.

"பூர்ணா இந்தப் பயலுக்கு இந்த மாசச் சம்பளத்துல பாதியை கட்பண்ணு. கார் டிரைவ் பண்ணற லட்சணத் தப்பாரு? ஆயிரம்தான் இருந்தாலும் நம்ம டிரைவிங்தான் சரியா வரும் போல இருக்கு. என்னாட்டம் எவனும் ஓட்டமாட்டேங்கிறானே?" பேசிக்கொண்டே-டிரைவிங் சீட்டில் அமர்ந்தார். தன் பார்ட்ணரை உட்கார வைத்துக்கொண்டு வெளியில் சிகரட் வாங்கப் போய்விட்டார்.



பூர்ணா டிரைவரைக் கூப்பிட்டாள்.

"நேத்துதான் உனக்கு லீவாச்சே. நீ காரை எப்படி எடுத்துட்டு போயிருக்க முடியும்...? ஐயாகிட்ட சொல்லாம எதுக்கு பேசாம இருந்த...?" பூர்ணா அதட்ட.

"அவ்ங்க பார்ட்ணரு முன்னால நான் அவர்தான் கார ஓட்டி இடிச்சாருண்ணு சொன்னேன்னா அவரு மரியாதை என்னங்கம்மா ஆகறது...? என்னத் திட்டினதுல எனக்கு வருத்தமில்லை. நான் திருப்பி பேசியிருந்தாத் தாம்மா அவருக்கு மரியாதைக் கொறைச்சல். அதான் நான் வாய் திறக்கல." கணேசன் அமைதியாய் சொல்ல,

விஜயன்

'நேர்ல புகழ்ந்துட்டு-முதுகுக்குப் பின்னால் திட்டும் உலகத்துல, இப்படியும் ஒருவனா? மனிதரிலும் சில உயரங்கள் இருக்கத்தான் செய்கிறார்கள்.' நினைத்துக் கொண்டாள் பூர்ணா.


படிப்பகம்

## இலக்கிய நயம்



# துன்பம் நேரினும்

சம்யுக்தா!
சம்யுக்தா!
என் சுவாசமே
சம்யுக்தா!

பிருதிவிராஜின்
உதடுகள்- அந்த
வாசனைப் பெயரை
வாசித்துக் கொண்டிருந்தன!

டில்லி மன்னன்
பிருதிவிராஜ்
கன்னோசி மன்னன்
மகளை
கண்ணிலும் மேலாய்
மனதார நேசிக்கிறான்!

ஓலை பறந்தது
கன்னோசி நாட்டுக்கு!
வேலை எதுவும் ஓயாமல்
விடையறியும் துடிப்போடு
காலை முதல் காத்திருக்கிறான்
மன்னன் பிருதிவிராஜ்!

பிருதிவிராஜ்
வில்லெடுத்தால் போதும்
எதிரிகள் தலை உருளும்!

கண்ணிமைக்கும் நேரத்தில்
மண்ணிலிருக்கும் பகைவர்
காணாமல் போவர்!

சம்யுக்தா
வில் புருவத்தில்
விழியம்பு தொடுத்தபோது
பிருதிவிராஜும்
தோற்றுத்தான் போனான்!

தேன் இருக்கும்
செவ்விதழ்!
கனி இருக்கும்
நெஞ்செழில்!

விழிகளில் மது
இதழ்களில் அமுது!

கன்னத்தில் மாங்கனி
கடித்திட தீஞ்சுவை!

பிடித்திட இடையில்லை
வடித்திட வார்த்தையில்லை!

சிரித்திடும் போதினில்
வெறித்திடும் மனது!
குவிந்தது முத்து
குதித்தது மனது!

"சம்யுக்தா!"
உச்சரிக்கும்போதே
உள்ளூறும் போதை!

"சம்யுக்தா!"
நினைக்கும் போதே
நெஞ்சுக்குள் மழை!

"எப்போது
எனக்காகப் போகிறாய்?
எப்போது-நான்
உனக்காகப் போகிறேன்?"

கன்னோசி நாட்டில்
எழிலரசி
சம்யுக்தாவும்
அதே வினாவைத்தான்
பெருமூச்சோடு கலந்து
வெளியேற்றிக்
கொண்டிருந்தாள்!

'திரண்ட தோள்களில்
சாய்வது எப்போது?
விரிந்த மார்பில்
சரிந்திருப்பது எப்போது!

கல்தூண் போன்ற
அவர் கால்களோடு
கால்கள் சோர்வதும்,
வில் ஏந்தும்
அவர் கைகளோடு
கை சேர்வதும்
எப்போது? எப்போது?

இம்சை தாங்காமல்
நான் துவள வேண்டும்!

கட்டில் தாங்காமல்
அவர் ஆட வேண்டும்!'

சம்யுக்தா
நினைப்பிலேயே
நெஞ்சுருகினாள்!

சம்யுக்தா
இன்பக் கனவில்
தணலானாள்!

இருவரின் நினைப்புக்கும்
நேர்மாறாக இருந்தது
கன்னோசி மன்னனின்
முடிவு!

"பேடிகளுக்கு
நான் பெண்கொடேன்!
முடிந்தால்
போரிட்டு பெற்றுக்கொள்!"

பதில் கண்டு
தீயானான் பிருதிவிராஜ்

"சுயம்வரமா?- என்
சுயகௌவரத்திற்கு
சவாலா?"

"புயலை எதிர்த்து
புழுதிப்படைகள்!

அலையை எதிர்த்து
மண் கரைகள்!

புறப்படட்டும்
எம் புயல் அணிகள்!"

எதிரியின்
கோட்டை வாயிலில்
படைகள் குவிந்தன!

தன் படைகளை
திரும்பி நோக்கினான்
பிருதிவிராஜ்!

"தலைகளா? மலைகளா?
கடல் அலைகளா?"
பெருமிதம் பொங்கியது.

"நில்லுங்கள்!
கோட்டைக் கதவுகளை
உடையுங்கள் போதும்!

உள்ளே நுழைவதும்
நிலவை மீட்டு
வெளியே வருவதும்
என் பொறுப்பு!

என் காதலுக்காக
என் வீரர்கள் சாவதா?
என்னால் முடியும்
முன்னால் வருபவர்
வாளுக்கு தீனி!"

உடைந்தது கதவு
விரைந்தது புரவி!

புரவியின் முதுகில்
பிருதிவிராஜ்!
உயர்ந்தது வாள்
பிளந்தது பகை
திறந்தது அரண்மனை
கதவு!

சம்யுக்தாவை
சுமந்தபடி
விரைந்தான் பிருதிவிராஜ்!

ராணி சம்யுக்தா
நாணி நின்றாள்
மன்னன் பிடியில்!

"முறைப்படி கேட்டேன்
உன் தந்தை
குளப்படி செய்தார்!"
என்றான் மன்னன்!

"ஆனாலும் உங்கள்
துணிச்சல் அதிகம்!

தனி ஒருவனாக
வியூகத்திற்குள் புகுந்தீர்!
வீரம் இருக்கலாம்
விவேகமும் தேவை!"

அவன் மேனியில்
எதிரிகளின் அம்புகளும்
சுழன்ற வாள்களும்
உற்பத்தி செய்த
காயங்கள்!

அத்தனை காயங்களையும்
இதழால் ஒற்றி
நாவினால் வருடினாள்!

"இப்படித் தெரிந்திருந்தால்
காயத்தை மேலும்
வாங்கி வந்திருப்பேனே!"
என்று கண்ணடித்தான்.

"மருந்து
கட்ட வேண்டும்!
வைத்தியர் எங்கே?"
என்று எழுந்தவளை
கையிழுத்து தடுத்தான்!

"உலகில் இல்லாத
மருந்தெல்லாம்
உன் இதழில்
இருக்கிறது!"

பைத்தியம் நான்
வைத்தியர் நீ!

மருத்துவம் செய்
மகத்துவம் தா!"

சிணுங்கியது
எழில் ஓவியம்!

துன்பம் நேர்கையில்
இது என்ன பேச்சு!
என்று கேட்டாள்!

பிருதிவிராஜ்
நகைத்தான்!

"திருவள்ளுவர் என்று
ஒரு தமிழ்ப் புலவன்
எழுதியதை படித்தால்
எழாது இக் கேள்வி!"

அவளுக்கு புரியவில்லை
விழி விரித்தாள்!
அவனே விளக்கினான்!

"விளைவது இன்பம்
என்றால்
வியர்வை போல்
துன்பம் சகிக்கலாம்!

வரப்போகும் இன்பத்துக்காக
தரப்போகும் விலைக்கு
துணிந்தால்,
துன்பம் ஜெயித்து
இன்பம் துய்க்கலாம்!"

அவள் கேட்டாள்:
"உங்களுக்கு
இன்பம் தரும் செயல்
எதுவோ?"

"உன்னை
நான் கைப்பிடித்தது!
இன்னொன்றும் உண்டு
அது..."
என்று நிறுத்தினான்.

"எது?" என்றாள்.
இடக்காக.

பதில் சொற்களில்
கிடைக்கவில்லை!
செயல் அங்கே
ஆக்கிரமித்தது!

"துன்பம் உறவரினும் செய்க
—துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை"

அதிகாரம்: 67, குறள்: 669

---

## தருவது ரசிகன்

★ தோல்விகளால் களைப்படைந்துள்ள எனக்கு உமது ஆலோசனை என்ன?

எம். மஸீனா மன்சூர், முகத்துவாரம்.

தோமஸ் அல்வா எடிசன் மின்சார பல்பைக் கண்டறிந்தவர்.

எடிசனிடம் நிருபர்கள் கேட்டனர்: "999 தடவை தோற்ற பின்னர்தானே இந்த வெற்றி கிடைத்தது?"

அதற்கு எடிசன் சிரித்தபடியே சொன்னாராம்:

"யார் சொன்னது 999 தடவை நான் தோற்றுப்போனேன் என்று? 999 முறையும் ஒரு மின்சார பல்பை எப்படியெல்லாம் செய்யக்கூடாது என்பதை நான் கற்றுக் கொண்டேன்!"

○❖○

★ சிந்தியா! தமிழக சஞ்சிகை ஒன்றுமீது பாரதிராஜா கோபப்படுகிறாரே. அப்படி என்ன எழுதினார்கள்.

செ. துஷ்யந்தன், கொழும்பு-09.

'அவர் ஒரு பெண் பித்தர். புதுமுகங்களுடன்தான் 'ரிலாக்ஸ்' செய்வார்' என்று சித்திரக் கதையாகப் போட்டுவிட்டனர். 'சாரதி ராஜா' என்ற பெயரில் படு கிண்டல். அதுதான் புகைச்சல் கிளம்பியிருக்கிறது.

○❖○

★ தமிழ்க் கட்சிகளுக்கு பத்திரிகைகள்மீது ஏன் இத்தனை கோபம்? எல்லோரும் அவர்களை மட்டும் ஏன் விமர்சித்துத் தள்ளுகிறீர்கள்?

ஆர். கிருஷ்ணராஜ், மட்டக்களப்பு.

"மனிதன் கழுதை போல் நடக்கும்போது மற்றவர்கள் தன்மேல் சவாரி செய்கிறார்கள் என்று குறைபட்டுக் கொள்ளக் கூடாது." இது அமெரிக்கப் பழமொழி.

○❖○

★ நடிகர் ஜெமினி கணேசன் பற்றி என்ன கூறுகிறீர்?

பா. சந்தோசம், மட்டக்களப்பு.

காதல் மன்னன்!

○❖○



ஜெமினி – நம்பியார்

★ டாக்டர்கள் சிலருக்கு கடமையுணர்ச்சி குன்றிவிட்டது என்கிறேன் நான். நீர் என்ன கூறுகிறீர்?

செல்வி சி. குமுதினி, வத்தளை.

ஒரு புகழ்பெற்ற டாக்டர் ஒரு விருந்துபசாரத்தில் குடித்துக் கொண்டே இருந்தாரு. அப்போது ஒரு நண்பர் அவரிடம் வந்து: "உங்களை நம்பி மருத்துவமனையில் ஏராளம் நோயாளர்கள் இருக்கின்றனர். அவர்களைப் பற்றி கவலைப் படாமல் இப்படிக் குடித்துக்கொண்டிருக்கிறீர்களே! இது நியாயமா?" என்று கேட்டார்.

அதற்கு டாக்டர் கூறினார்: "என்னிடமிருக்கும் நோயாளிகளில் பாதிப்பேரை உலகில் சிறந்த டாக்டர்கள் வந்தாலும் காப்பாற்ற முடியாது. மீதிப் பேரை உலகிலேயே மோசமான டாக்டர்கள் வந்தாலும் கொல்ல முடியாது. அதனால் கவலைப்பட ஏதுமில்லை!" என்றுவிட்டு மறுபடி குடிக்கத் தொடங்கினாராம்.

○❖○

★ 'படையப்பா'வில் சிவாஜிக்கு என்ன பாத்திரம்?

கே. நஜீம், மன்னார்.

படையப்பாவுக்கு அப்பா!

○❖○

★ பச்சையாகச் சொல்வது என்றால் என்ன?

எம். ரூபன், திருமலை.

பிரபல இசையமைப்பாளர் ஜோர்ஜ் கெஷ்வின் மறைந்தபோது, ஒரு வளர்ந்துவரும் இசையமைப்பாளர் அவரைப் பற்றிய இரங்கற் கவிதை ஒன்றை எழுதி இசையமைத்துக் கொண்டு போனார்.

ஒஸ்கார் லெவண்ட் என்ற மற்றொரு புகழ்பெற்ற இசையமைப்பாளரிடம் தனது இரங்கற் கவிதையை இசைத்துக் காண்பித்து விட்டு, "எப்படியிருக்கிறது?" என்று கேட்டார்.

அதற்கு ஒரே வார்த்தையில் வந்தது பதில்: "நீங்கள் செத்து, ஜோர்ஜ் கெஷ்வின் இசையமைத்திருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும்!"

○❖○

★ முரளிதரன் இல்லாத இலங்கை கிரிக்கெட் அணி சகல போட்டிகளிலும் தோல்வி கண்டு விட்டதே?

எஸ். ஜெயா, கண்டி.

அதுவும் ஒரு காரணம். அணிக்குள் தலைதூக்கியிருக்கும் பிரச்சனைகளும் மற்றுமொரு காரணம்! சனத் போன்றோர் சூப்பர் ஸ்டார்களாகிவிட்டதால் தங்கள் இமேஜ் பற்றிய தயக்கங்கள் கைகளைக் கட்டிப்போடுவதும் துணைக் காரணம்.

○❖○

★ செம்மணி விவகாரம் மறக்கப்பட்டு விடுமா?

எம். சிவகுமார், யாழ்ப்பாணம்.

விடும் என்றுதான் அரசும், தமிழ்க் கட்சிகளும் நினைக்கின்றன. "தோண்டுவோம் தோண்டுவோம்!" என்று அரசு கூறிக்கொண்டிருக்கும், "தோண்டு, தோண்டு" என்று தமிழ்க் கட்சிகள் கேட்டுக் கொண்டிருக்கும். பின்னர் வேறொரு பிரச்சனை எழ மக்கள் செம்மணியை மறந்து போவார்கள் என்று நினைக்கப்படுகிறது. ஆனால் அது தப்புக்கணக்கு. செம்மணி விவகாரத்தில் அரசின் உருவம் அம்பலமானதால், அதனை ஆதரிக்கும் தமிழ்க் கட்சிகளின் நிலை தர்மசங்கடமாகியிருக்கிறது. மக்களுக்கு ஞாபக மறதி அதிகம்தான். அதற்காக எல்லாவற்றையும் மறந்து விடமாட்டார்கள்!

○❖○

★ 'தமிழ் மக்களுக்கு சொந்தமில்லை நாடு' என்பதற்கு விளக்கம் தரப்படுமா?

கே. வசிகரன், வவுனியா.

தேவையானது விளக்கமல்ல; தவறை ஒப்புக்கொண்டு வருத்தம்!

○❖○

★ நடிகர் விஜய் அவரது பெற்றோருக்கு ஒரே பிள்ளையா?

சி. மல்லிகா, பதுளை.

இப்போது ஒரே பிள்ளை. முன்னர் ஒரு தங்கை இருந்தார். இறந்து விட்டார்!

○❖○

## சிந்தியா பதில்கள்



மும்தாஜ்

★ சிந்தியா! புது மும்பை வரவுகளால் பாதிக்கப்பட்ட நடிகைகள் யார்?

ஜெ. எட்வின், தெகிவளை.

முன்னாள் மும்பை வரவுகள்.

○❖○

★ கல்லால் அடிப்பதைவிட சொல்லால் அடித்தால் காயம் பெரிதாம். எங்கே அடியுங்கள் பார்க்கலாம்?

வி. தயாநிதி, நீர்கொழும்பு.

புகழ்பெற்ற அமெரிக்க வழக்கறிஞர் மேக்ஸ் ஸ்டியர் ஒரு விருந்தில் கலந்துகொண்டார். அங்கே வந்திருந்த நீதிபதி ஒருவருடன் பேசிக்கொண்டிருந்தபோது, நீதிபதி கேட்டார்:

"மிஸ்டர் மேக்ஸ், கடவுள் உம்மை கழுதையாகவோ, குதிரையாகவோ மாற்ற விரும்பினால், உமக்கு கழுதையாக விருப்பமா, குதிரையாக விருப்பமா?"

அதற்கு மேக்ஸ் கூறினார்: "எனக்கு கழுதையாக மாறத்தான் விருப்பம்!" நீதிபதி திகைப்புடன் பார்க்க; மேக்ஸ் கூறினார்:

"ஆமாம். எந்தக் குதிரையும் இதுவரை நீதிபதியானதில்லையே!"

○❖○

★ பந்துவீச்சாளர் அஜித் அகார்கர் பற்றி என்ன கூறுகிறீர்?

சி. சின்னராசா, கந்தப்பளை.

இன்னொரு கபில்தேவ். இலங்கை அணிக்கு சிம்ம சொப்பனம்!

○❖○

★ ஈராக் பணிந்துவிட்டதா?

பி. நிர்மலன், கொழும்பு-05.

இல்லை! முரண்டுபிடித்து விட்டுக் கொடுப்பதும் இராஜதந்திரம்தான்! கேட்பதற்கெல்லாம் மறுபேச்சே இல்லாமல் விட்டுக் கொடுத்தால் இடம் கண்டு மடம் கட்டத் தொடங்கிவிடும் அமெரிக்கா.

---

ஸ்போர்ட்ஸ்

## ஒருநாள் போட்டிகள் 27 வருடங்கள்

சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டிகள் ஆரம்பித்து 27 ஆண்டுகளாகின்றன. இந்த 27 ஆண்டுகால வரலாற்றில் தொடர்ந்து 3 ஆண்டுகளாக அதாவது, 1996,1997,1998 ஆகிய ஆண்டுகளில் 100ற்கும் மேற்பட்ட போட்டிகள் நடந்துள்ளன.

1996ம் ஆண்டில் மட்டும் அதிகபட்சமாக 127 ஒருநாள் போட்டிகள் நடைபெற்றதுதான் சாதனை. இந்த வருடம் மொத்தம் 105 ஒருநாள் போட்டிகள் நடைபெற்றுள்ளன.

இந்த வருடம் 40 போட்டிகளில் பங்கு கொண்டு, உலகிலேயே ஒரு வருடத்தில் அதிக ஒருநாள் போட்டிகளில் விளையாடிய அணி என்ற சாதனையை இந்திய அணி படைத்துள்ளது.

இதற்கு முன் இந்தச் சாதனைக்குச் சொந்தக்காரராக இருந்தது பாகிஸ்தான் அணி. 1996ம் ஆண்டு 39 போட்டிகளில் விளையாடி சாதனை படைத்திருந்தது. அண்மையில் நடந்து முடிந்த கொக்கா கோலா இறுதியாட்டத்தில் விளையாடியதன் மூலம் இச்சாதனை இந்திய அணியிடம் கைமாறியது.

இந்த வருடத்தில் உலகின் கிரிக்கெட் அணிகள் பங்கேற்ற போட்டிகள், வெற்றி, தோல்வி, முடிவு தெரியாதவை, வெற்றிவீதம் போன்ற விபரங்கள் வருமாறு:

| அணி | போட்டி | வெற்றி | தோல்வி | முடிவு தெரியாதது | வெற்றி வீதம் |
|---|---|---|---|---|---|
| 1. இந்தியா | 40 | 24 | 14 | 02 | 61.53 |
| 2. அவுஸ்திரேலியா | 25 | 15 | 10 | - | 60.00 |
| 3. இலங்கை | 23 | 11 | 12 | - | 47.82 |
| 4. பாகிஸ்தான் | 23 | 10 | 13 | - | 43.47 |
| 5. நியூஸிலாந்து | 23 | 09 | 12 | 02 | 43.47 |
| 6. தென்னாபிரிக்கா | 22 | 17 | 05 | - | 77.27 |
| 7. ஸிம்பாப்வே | 23 | 05 | 18 | - | 22.72 |
| 8. இங்கிலாந்து | 12 | 03 | 09 | - | 25.00 |
| 9. மேற்கிந்தியத்தீவு | 08 | 06 | 02 | - | 75.00 |
| 10. பங்களாதேஷ் | 06 | 01 | 05 | - | 16.66 |
| 11. கென்யா | 05 | 02 | 03 | - | 40.00 |

## அகார்கர் சாதனை

குறைந்த அளவு ஒருநாள் போட்டிகளில் விளையாடி முதல் 50 விக்கெட்டுக்களைச் சாய்த்து சத்தமில்லாமல் சாதனை படைத்துள்ளார் இந்திய அணியின் இளம்புயல் அஜித் அகார்கர்.

ஸிம்பாப்வே நாட்டின் ஹராரே நகரில் நடைபெற்ற 3வது ஒருநாள் போட்டியில் 50வது விக்கெட்டை வீழ்த்தினார் அகார்கர். இது இவரது 23வது ஒருநாள் போட்டியாகும்.

இதற்கு முன்பு இந்தச் சாதனையை நிகழ்த்தியவர் அவுஸ்திரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர் டென்னிஸ் லில்லி. இவர் 24 போட்டிகளில் இந்தச் சாதனையைச் செய்தார்.

20 வயதான இந்த மும்பைக்காரர் 50 விக்கெட்டுக்களையும் 182 நாட்களுக்குள் வீழ்த்தியது இன்னொரு சாதனை. இத்தனை விக்கெட்டுக்களையும் வீழ்த்த அகார்கர் 1236 பந்துகளை வீசியுள்ளார். பாகிஸ்தானின் வேகப்பந்து வீச்சாளர் வக்கார் யூனுஸ் முதல் 50 விக்கெட்டுக்களை வீழ்த்த 1218 பந்துகளை மட்டுமே வீசினார். எனினும் இவர் 27வது போட்டியில்தான் 50வது விக்கெட்டைச் சாய்த்தார்.

30 ஒருநாள் போட்டிகளுக்குள் 50 விக்கெட்டுக்களை வீழ்த்தியவர்கள் பட்டியலில் அகார்கர் உட்பட உலகில் 8 பந்துவீச்சாளர்கள் அடங்கியுள்ளனர்.



அகார்கர்

## தொடரும் விசாரணை

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன்களான சலீம் மாலிக், வாஸிம் அக்ரம் மற்றும் இஜாஸ் அகமட் ஆகியோர் மீது இலஞ்சக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருப்பது தெரிந்ததே.

இதுபற்றி பாகிஸ்தானின் லாகூர் நகர் உயர்நீதிமன்ற நீதிபதி கையூம் விசாரணை நடத்தி வருகிறார். இது தொடர்பாக பாகிஸ்தான் மற்றும் அவுஸ்திரேலிய கிரிக்கெட் வீரர்கள் பலரை இவர் விசாரணை செய்தார்.

இந்நிலையில் "பாகிஸ்தான் வீரர்கள் தமது சொத்து விபரங்களை வெளியிட வேண்டும்!" என்று நீதிபதி கையூம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பாகிஸ்தானில், இலஞ்சக் குற்றச்சாட்டுக்குள்ளான வீரர்களை அணியில் சேர்க்கக்கூடாது என்ற பேச்சும் அடிபடுகிறது. ஆனால் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை இதைப்பற்றியெல்லாம் கவலைப் படாமல் அந்த வீரர்களுக்கு அணியில் வாய்ப்பளித்து வருகிறது.


www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# திருமறை தரும் பொது நெறி 36

ஆண்டவரின் ஆணைப்படி, இஸ்ரயேலரின் எதிர்கால மன்னன் தாவீது என்று திருப்பொழிவு செய்யப்பட்டார். அத்தகைய பெருமைக்குரிய தாவீதைத் தன்னால் ஒழித்துக் கட்டிவிட முடியாது என்பதனை சவுல் மன்னர் நன்கு அறிவார். தாவீதுக்கு எதிராக இனிமேல் எந்நடவடிக்கையும் எடுக்கப்போவதில்லை என்று மனதார எண்ணுவார் சவுல். ஆனால் தீய ஆவியால் ஆட்கொள்ளப்படும்போது தனது நல்ல எண்ணங்களனைத்தையும் மன்னர் மறந்துவிடுவார். இவ்வாறு சவுல் பல தடவைகள், தானே கூறிய வார்த்தைகளை மறந்து, தாவீதைக் கொல்லப் புறப்படுவார்.



சவுலின் மகனும் தாவீதின் உயிர் நண்பருமான யோனத்தான், தாவீதை வந்து சந்தித்து விட்டுத் திரும்பியதும், ஓர்சாவின் பாதுகாப்பான ஓரிடத்தில் அவர் தங்கியிருப்பதை அறிந்து கொண்டார் சவுல். தன் படைகளுடன் புறப்பட்டுச் சென்றார். இதனை அறிந்த தாவீது மாவோன் பாலை நிலத்திலுள்ள பாறை ஒன்றில் சென்று பதுங்கியிருந்தார். சவுலும் அவர் தம் படையினரும் அந்தப் பாறையைச் சுற்றி வளைத்துக் கொண்டனர்.

இந்நெருக்கடியான சந்தர்ப்பத்தில் கடவுள் தாவீதை, காப்பாற்றினார். அச்சமயம் பார்த்து சவுலின் தூதர் ஒருவன் ஓடோடி வந்து, பெலிஸ்தியரின் பெரும்படை நாட்டைத் தாக்குவதற்காகச் சென்றுகொண்டிருப்பதாகக் கூறினான். தாவீதைத் தொடர்வதை விடுத்து பெலிஸ்தியப்படையெடுப்பை முறியடிக்க சவுல் புறப்பட்டார்.

மற்றொரு முறை, ஏன்கேதிப் பாலை நிலத்திலிருந்த குகை ஒன்றினுள் சவுல் இயற்கைக் கடன் கழிப்பதற்காகச் சென்றார். அப்போது அக்குகையின் மற்றொரு புறத்தே ஒளிந்திருந்த தாவீதின் தோழர்கள், "சவுலைக் கொன்றுவிட அரிய சந்தர்ப்பம் கிட்டியிருக்கிறது!" என்று கூறினர். ஆனால் தாவீது அவ்வாறு செய்வதற்கு விரும்பவில்லை.

"இஸ்ரயேலரின் அரசனாக ஆண்டவரின் ஆணைப்படி திருப்பொழிவு செய்யப்பட்டவர் மன்னர் சவுல். அவரை எக்காரணம் கொண்டும் நான் கொலை செய்யமாட்டேன்!" என்று தாவீது கூறினார். அது மட்டுமல்லாமல, தன்னுடனுள்ள தோழர்களும் மன்னர் சவுலுக்கு எத்தகைய தீங்கும் செய்யலாகாது என்று கேட்டுக் கொண்டார். இருப்பினும் அக்குகைக்குள் வைத்து, சவுலுக்கோ அவருடைய காவலர்களுக்கோ தெரியாமல் மன்னரின் அங்கியில் ஒரு துண்டைத் தனது வாளினால் வெட்டி எடுத்துக்கொண்டார்.

குகைக்குள்ளிருந்து சவுல் வெளியேறியதை, ஒரு குன்றின் மேல் நின்றவாறு கண்ட தாவீது மன்னரை நோக்கி, "என் தலைவரே! தாங்கள் என்னைக் கொல்வதற்காகத் தேடி அலைகிறீர்கள். ஆனால் என்னிடம் அத்தகைய வெறி எதுவும் கிடையாது. கடவுளின் கருத்துப்படி திருப்பொழிவு செய்யப்பட்ட தங்களுக்கு எதிராக என் கரம் நீளப் போவதில்லை.

இதோ பாருங்கள் உங்கள் அங்கியின் ஒரு பகுதியை! இந்தத் துண்டை வெட்டி எடுத்த எனது வாளால் தங்களை நான் வெட்டி வீழ்த்தியிருக்கலாம். ஆனால் நான் அவ்வாறு செய்யத் துணியவில்லை. இனிமேலாவது என்னை உங்கள் எதிரியாக நினைப்பதை விட்டுவிடுங்கள்!"

## தாவீதின் பெருந்தன்மை

இவ்வாறு கூறிய தாவீது முகம் குப்புற விழுந்து மன்னர் சவுலுக்கு வணக்கம் செலுத்தினார்.

சவுல் தாவீதின் கூற்றைக் கேட்டு பெரிதாக அழுது, தான் பெரும் தவறு விட்டுவிட்டதாகக்கூறி, தன் தவறை மறந்து விடுமாறு கேட்டுக் கொண்டார். தனக்குப் பின் இஸ்ரயேலரின் அரசராக அரியணை ஏறுவதற்கு தாவீதே உரித்துடையவர் என்று கூறி ஆசிர்வதித்துவிட்டு அவ்விடம் விட்டகன்றார்.

மன்னர் சவுல் தாவீதிடம் கூறிய வார்த்தைகளை சில தினங்களில் மறந்துபோனார். மீண்டும் தனது படைகளுடன் தாவீதைக் கொல்லப்புறப்பட்டார். அப்போது தாவீதும் அவர் தோழர்களும் அக்கிலா குன்றில் இருந்தனர். அதன் அருகே மன்னரும் படையினரும் பாசறை அமைந்திருந்தனர். அன்றிரவு மன்னர் சவுலும் படையினரும் படுத்திருந்த இடத்துக்கு எவருக்கும் தெரியாமல் சென்ற தாவீது, மன்னருக்கு அருகே வைக்கப்பட்டிருந்த தண்ணீர்ப் பாத்திரத்தையும் மன்னரின் ஈட்டியையும் எடுத்துக் கொண்டார்.

பொழுது விடிந்ததும் சவுல் மன்னரும் படைகளும் தங்கியிருந்த இடத்துக்கு எதிரேயிருந்த ஒரு குன்றின் மீது ஏறி நின்ற

## எதிரிகளுடன் இணைந்து தாவீது

தாவீது, சவுல் மன்னரின் தளபதியாகிய அப்னேரைக் கூவி அழைத்தார். தன்னை அழைப்பது தாவீதுதான் என்பதை அறிந்து அப்னேர் எழுந்தான். மன்னரும் மற்றைய வீரர்களும் எழுந்து கொண்டனர்.

"இஸ்ரயேலின் இணையற்ற வீரனான அப்னேரே! எமது மன்னரைப் பாதுகாக்கும் முறை இதுதானா? மன்னர் அருகிலிருந்த அவருடைய ஈட்டியும் தண்ணீர்ப் பாத்திரமும் இதோ... என் கைகளில் இருக்கின்றனவே! இவை இரண்டையும் மன்னரின் அருகிலிருந்து எடுத்து வந்த என்னால், அவரை அங்கேயே குத்திக் கொன்றிருக்கலாம் அல்லவா? ஆனால் நான் அதைச் செய்யவில்லையே? இனிமேலாவது எனது நல்லெண்ணத்தை மன்னர் புரிந்துகொண்டு என்னைப் பின் தொடர்வதை நிறுத்துவாரா?"

தாவீது கூறிய வார்த்தைகள் ஒவ்வொன்றும் சவுல் மன்னரின் உள்ளத்தில் பல ஈட்டிகளாகப் பாய்ந்தன. மீண்டும் அழுது புரண்டு தன் பிழைகளை மன்னிக்குமாறு வேண்டியதுடன் தன்னுடன் சேர்ந்து நாடு திரும்புமாறு தாவீதைக் கேட்டுக்கொண்டார்.

கொடுத்த வாக்குறுதிகள் பல; செய்த சத்தியங்கள் பலப் பல... திடீர் திடீரென தன் நிலைப்பாட்டினை மாற்றிக் கொள்ளும் ஒருவருடைய வார்த்தைகளை எவ்வாறு நம்புவது? தாவீது தனது தோழர்களுடன் வேறுவழி சென்றார்.

## முரடனான மூடன்

தாவீதுடன் அவருடைய அறுநூறு தோழர்களும் உறவினரும் இருந்தனர். பாலை நிலங்களிலும் குன்றுகளிலும் குகைகளிலும் மறைந்து வாழ வேண்டிய நிலையில் அவர்கள் இருந்தமையினால் அவர்களுக்குப்போதுமான உணவு கிடைக்கவில்லை.

நாபால் என்ற செல்வந்தன் ஒருவன் இருந்தான். அவனிடம் ஆயிரக்கணக்கான செம்மறி ஆடுகள் இருந்தன. அவன் ஒரு முரடன்; அத்துடன் ஒரு மூடனாகவுமிருந்தான். ஆனால் அவனுடைய மனைவி அபிகாயில் அழகானவள்; அறிவாற்றலுமுடையவள்.

நாபாலுக்கு தாவீது ஒரு காலத்தில் உதவி புரிந்திருக்கிறார். கர்மேலி என்ற இடத்தில் தனது செம்மறி ஆடுகளின் உரோமத்தை இறக்குவதற்கான ஒரு விழாவினை ஏற்பாடு செய்திருந்தான் நாபால். அன்றைய தினம் பெரிய விருந்து வைபவம் ஒன்றும் வைப்பதற்கான ஏற்பாடுகளையும் செய்திருந்தான். இதனைக் கேள்வியுற்ற தாவீது தனது தோழர்களில் ஒருவரை நாபாலிடம் அனுப்பினார். தன் தோழர்களுக்கும் தனக்கும் உணவளித்து உதவுமாறு கோரிக்கை விடுத்திருந்தார்.

தாவீதின் வேண்டுகோளுடன் சென்றிருந்த தாவீதின் தோழரை நாபால் ஒரு பொருட்டாகக் கணக்கெடுக்கவில்லை. தாவீதைத் தனக்குத் தெரியாது என்றும் கூறிவிட்டான். தவிர தனது பணியாட்களுக்காக ஏற்பாடாகியிருக்கும் விருந்தை அந்நியர் எவருக்கும் பகிர்ந்தளிக்கத் தான் தயாரில்லை என்றும் இழிவாகப் பேசிவிட்டான். தாவீதை நாபாலின் இவ்வார்த்தைகள் சினங்கொள்ள வைத்து விட்டன. நாபாலைக் கொன்றுவிட தாவீது தயாரானார்.

நாபாலின் மனைவி அபிகாயில் தாவீதைப் பற்றி அறிந்திருந்தாள். தன் கணவனுக்குத் தெரியாமல் ரொட்டிகள், பழரசம், இறைச்சி மற்றும் பழங்களை போதுமான அளவு எடுத்துக் கொண்டு தன் பணியாளர்களுடன் புறப்பட்டாள். தாவீதும் தோழர்களும் தங்கியிருந்த இடத்துக்குச் சென்றாள். தனது கணவன் ஒரு முரட்டுத்தனமான மூடன் என்றும் அவரை ஒன்றும் செய்யாது விட்டுவிடுமாறும் தாவீதிடம் கோரினாள். அபிகாயிலின் கோரிக்கைக்கு இசைந்த தாவீது, அவள் கொண்டு வந்திருந்த உணவுப் பண்டங்களை ஏற்றுக் கொண்டார். தோழர்களுடன் பகிர்ந்துண்டார்.

அபிகாயில் தன் கணவனிடம் வந்து சேர்ந்தபோது, அவன் குடிபோதையில் தன் சகாக்களுடன் விருந்துண்டு மகிழ்ந்திருந்தான். அடுத்த நாள் காலை போதை சற்றுத் தெளிந்திருக்கும்போது அபிகாயில் நாபாலிடம், முதல் நாளன்று தான் தாவீதிடம் போய் வந்த விவரத்தைக் கூறினாள். நாபால்



அதிர்ச்சிக்குள்ளாகி எதுவுமே பேசாதிருந்தான். அன்றிலிருந்து அவன் நோய்வாய்ப்பட்டு பத்தாவது நாளன்று மரணமடைந்தான்.

நாபால் இறந்ததைக் கேள்வியுற்ற தாவீது அபிகாயிலைத் தனது மனைவியாக்கிக் கொண்டார்.

## சாமுவேலின் மறைவு

ஆண்டவரின் ஆணைகளை ஏற்று அரும் பணிகளைப் புரிந்து வந்த சாமுவேல் மூப்படைந்து மரணமடைந்தார். இஸ்ரயேல் மக்கள் அனைவரும் துக்கம் அனுஷ்டித்தனர். அவருடைய சடலம் அவருடைய நகரான இராமாவில் அடக்கம் செய்யப்பட்டது.

சவுல் மன்னன் எத்தனை சத்தியம் செய்தாலும் தன்னைக் கொலை செய்யத் தயங்கப் போவதில்லை என்பதை தாவீது உணர்ந்திருந்தார். தன்னை ஓர் எதிரியாகக் கருதும் மன்னர் சவுலை எந்த நிலையிலும் தன்கையால் கொல்லப்போவதில்லை என்பதை ஆண்டவர் மீது ஆணையிட்டு, அதனைத் தன் கொள்கையாகக் கடைப்பிடித்து வந்தார் தாவீது. இறைவன் சவுலுக்குரிய தண்டனையை வழங்கும் வரை தான் தலைமறைவாகத் தப்பி வாழ்வதே உசிதம் என்றும் கருதினார். தனது தோழர்களுடன்-தமது இனத்தவர்களின் பரம விரோதிகளான பெலிஸ்தியரிடம் சென்று வாழ்ந்தால் சவுலிடமிருந்து தப்பிக் கொள்ளலாம் என்று தீர்மானித்தனர்.

காத்து மன்னரான ஆக்கீசிடம் அடைக்கலம் கோரினர். ஆக்கீசு இவர்களை சிக்லாகு என்ற நகரில் வாழுமாறு கேட்டுக்கொண்டார். தனது அறுநூறு தோழர்களுடனும் தனது இரு மனைவியருடனும் தாவீது அங்கு ஒரு வருடமும் நான்கு மாதங்களும் வாழ்ந்தார்.

(தொடர்ந்து வரும்)

இராஜகுமாரன்

**திருமறை 34 விடை** பதினாயிரம் பேர்

**பரிசு பெறுவோர்:**

1. அ.ஜெயராதா, மில்கோ, கொட்டகலை.
2. எஸ்.மெஜர்லா, ஜெம்பட்டா வீதி, கொழும்பு-13.
3. எம்.பி.எஃப்.றினோஸா, நியூ எல்பிட்டியா வடக்கு, கெலி ஓயா.
4. எம்.சசிகலா, மார்காஸ் தோட்டம், நுவரெலியா.
5. உ.விஜி, பாடசாலை சந்தி, சாமிமலை.

**திருமறை 36** வினா:- சவுல் மன்னரிடமிருந்து மூன்று பொருட்களை தாவீது எடுத்தார். அவை எவை?

நவ. 28க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**திருமறை 39—தினமுரசு வாரமலர், த.பெ.இல—1772, கொழும்பு.**

## பயோடேட்டா

| | |
|---|---|
| பெயர் | : பட்ஜெட் |
| தொழில் | : வரவும், செலவும் பார்ப்பது. |
| உபதொழில் | : சுமையைக் கூட்டுவது. |
| நம்புவது | : மது வகைகளையும், சிகரெட்டையும்! |
| ரசிப்பது | : வெளிநாட்டு பொருளியல் அறிஞர்களின் மேற்கோள்களை. |
| சோதனை | : துண்டு விழும் தொகை. |
| சாதனை | : தொடர்ந்து கையேந்துவது. |
| பிடித்த சின்னம் | : திருவோடு |
| பிடிக்காத சின்னம் | : புலி |
| எதிர்காலத் திட்டம் | : கடன் வாங்காமல் மீதியாகவுள்ள நாடுகளை கண்டுபிடித்து கடன் கேட்பது! |

## தமிழ்க் கட்சித் தலைவர் பதிலளிக்கிறார்

தமிழ் மக்களின் கேள்விகளுக்கு தமிழ்க் கட்சித் தலைவர் ஒருவர் பதில் அளிக்கிறார். இவர் யார் என்று நாம் கூறமாட்டோம். தொப்பி அளவாக இருந்தால் அவரவர் போட்டும் கொள்ளலாம், நீங்கள் போட்டும் பார்க்கலாம்.

*நேரம் ஆறுமணி*
*இலங்கை ஒளிவு மறைவு*
*தொலைக்காட்சி நிலையம்.*

**அறிவிப்பாளர்:** வணக்கம் ஐயா! கொழும்பில் இருந்து குமரன் என்பவர் இக் கேள்வியை எறிந்துள்ளார். கனம் ஐயா! எங்களை அடிக்கடி மீண்டும் மீண்டும் கைது செய்கிறார்கள். இதற்கு முடிவே கிடையாதா?

**தலைவர்:** இப்போது கொழும்பில் உள்ள தமிழர்களுக்கு சனி அட்டமத்தில் நிற்கிறது. அதுதான் துஷ்டத்தனம் செய்கிறது. புலியும் உச்சத்தில் நிற்கிறது. இவையெல்லாம் இல்லையானால் தமிழர்களுக்கு ஒரு குறையும் இருக்காது. எதற்கும் பிரார்த்தனைகளில் ஈடுபடுங்கள். பரிகாரம் கிட்டும்.



**அ:** இக்கேள்வியை எழுதியவர் சமாதான விரும்பி, ஐயா தலைவரே! கைது செய்யப்பட்ட பின்னர் ஒருவர் மரணமானால் அதற்கு யார் பொறுப்பு ஏற்கவேண்டும்? என்று கூறுங்கள்.

**தலை:** படைத்தவன் பிரம்மன். அவன் படைப்பில் தவறு. தவிர பிரபாகரனிலும் தவறு. அவர்தான் இப்படியான பலிகளுக்கு காரணம். எங்களைப்போல அமைதி காத்திருந்தால், இப்படி பலிகள் நடக்குமா? தமிழ் மக்கள் சனிதோறும் நீராடி வந்தால் இதுபோன்ற மரணங்களை தவிர்க்கலாம். இடைக்கிடையே புலிகளையும் வசைபாடல் நன்று. அப்படியானால் தான் உங்கள்மேல் சந்தேகம் என்ற சத்துரு தோன்றாமல் இருக்கும். அடுத்த கேள்வி என்ன?

**அ:** ஐயா! பொறுமையின் சின்னமே! விவேகத்தின் சிங்கமே! அடங்கி நடக்கும் பணிவுக்குன்றே! பாலியல் வல்லுறவுகள் அதிகரித்து வருகிறதே ஐயா. நீங்கள் இதை தடுக்க முடியாதா?

**தலை:** பெண்கள் ஒடுக்கமாக வீடுகளுக்குள் இருந்தால் இம்மாதிரியான துஷ்ட ஆவித் தொல்லைகள் பீடிக்காது. அழகாக உடுத்தி, அடுத்தவர் கண்களை கவர்வது தான் துஷ்ட ஆவி சூழக் காரணம்.

**அ:** வீடுகளுக்குள் இருந்தவர்கள்தான் அதிகம் பாதிக்கப்பட்டதாக தகவல்கள் கூறுகின்றனவே?

**தலை:** வீட்டுக் கதவுகளை ஒழுங்காக பூட்டி, சன்னல் கதவுகளை நன்கு சாத்தி விட்டு, தியானத்தில் இருந்திருந்தால் இப்படி நேர்ந்திருக்காது. தவறு எம் பெண்களில் தான்.

**அ:** ஐயா! என் உறவினர் ஒருவர் விசாரணை இன்றி பலமாதங்கள் சிறையில் வாடுகிறார். எப்போது விடுதலையாவார்?

**தலை:** நாம் தாழ்மையுடன் எடுத்துக் கூறியிருப்பதால் எதிர்வரும் 2001ற்குள் வீடு திரும்புவார். தினமும் ஒரு தேங்காய் அடித்து மனதை பக்தி மார்க்கத்தில் செலுத்தினால் உங்கள் மனதில் கவலை, கோபம் போன்ற தீய உணர்ச்சிகள் எழாது.

**அ:** இன்னொரு கேள்வி, ஐயா! பொதி எங்கே? பொதி பயனளிக்குமா?

**தலை:** இரண்டாயிரம் ஆண்டுவரை சிங்க ராசி கடகத்துக்குள் பிரவேசிப்பதால், அதன் பின்னர்தான் சிங்கராசிக்கு ராஜ யோகம். ஆகவே 2001ற்குள் ஒரு முடிவு நிச்சயம் வரும். அப்போதுதான் பொதியை அவிழ்க்க சரியான நேரம்.

**அ:** கடைசிக் கேள்வி, தமிழ் பேசும் மக்களுக்கு விடிவு கிட்ட என்ன செய்ய வேண்டும்?

**தலை:** தினமும் மூன்று நேரமும் தியானம் செய்யுங்கள். மனம் அமைதியுறும்! சுற்றிலும் என்ன நடந்தாலும் எதுவும் நடவாதது போல கடலில் எறிந்த கட்டைபோல் இருக்கப் பழகுங்கள். எங்கு போய்ச் சேர வேண்டும் என்று அனுக்கிரகம் இருக்கிறதோ அங்கு போய்ச் சேர்வதுதான் விதி. இனம், மொழி என்று எதிலும் பற்றற்ற நிலையே சொர்க்கத்தை பற்றும் வழியாம். அதைப் பற்றுக.

(பேட்டி நிறைவுற்றது.)

## பொறுமை பூசணன் விருது

### மனித ஜடங்களாக அசத்தல்

### யாருக்கு விருது? முடிவு தாமதம்

இந்த ஆண்டுக்கான 'பொறுமை பூசணன்' விருது யாருக்கு என்பதை முடிவு செய்வதில் சிக்கல் தோன்றியுள்ளது.

தமிழ்க் கட்சித் தலைவர்களில் ஒருவருக்கே இவ் விருது வழங்கப்படுவது வழக்கமாகும்.

இம்முறை பொறுமை பூசணன் விருதைப் பெற தமிழ்க்கட்சித் தலைவர்கள் பலர் தகுதி பெற்றுள்ளனர். சகலரும் சம அளவான தர நிலையில் இருப்பதால் விருதை யார் தலையில் போடுவது என்று சிக்கல் எழுந்துள்ளது.

சில மாதங்களுக்கு முன்னர் மேற்கண்ட விருதுக்கான தகுதியை பரிசீலித்தபோது தமிழ்க் கட்சித் தலைவர்கள் இடையே ஏற்றத் தாழ்வுகள் இருந்தன.

இறுதிப்போட்டி சமீபத்தில் நடந்தது.

"தமிழர்கள் அடிமைகளாக இருக்க வேண்டியவர்கள். இந்த நாட்டுக்கு அடிமைகளாக கொண்டுவரப்பட்டவர்கள். இங்குள்ள புல்பூண்டுகூட இவர்களுக்கு சொந்தமல்ல" என்று கூறப்பட்டது.

அப்போதும் எந்த உணர்ச்சியுமற்று மரக்கட்டைபோல இருப்பவர்கள் யார் என்று பார்க்கப்பட்டது.

என்ன ஆச்சரியம், தமிழ்க் கட்சித் தலைவர்கள் ஒன்றுக்கு மேற்பட்டோரிடம் எந்தச் சலனமும் இல்லை. மரக்கட்டையை விட மேலான அசையாத நிலையில் இருந்து மனித ஜடங்களாக அசத்தினார்கள்.

இதனையடுத்தே பொறுமை பூசணன் விருதை யாருக்கு வழங்குவது என்று தீர்மானிக்க முடியாமல் உள்ளது.

அடுத்ததாக தமிழ்க் கட்சித் தலைவர்களது தலைகளை பந்துபோல் உதைத்து விளையாடும் பரீட்சை நடத்தப்படலாம்.



அப்போதும் சிரித்தபடியே உதை வாங்குவதில் யாரும் யாருக்கும் சளைக்காமல் இருந்தால் விருது வழங்குவோர் பாடு திண்டாட்டமாக இருக்கப்போகிறது.

## பேச்சாளர் பேரம்பலம்

பேட்டியும் பொய், அதில் சொன்னதும் பொய் என்று சங்கதி அண்ணர் கூறியபோது, இப்படி ஆதாரம் இருக்கும் என்று தெரியவே தெரியாது என்றும், தெரிந்திருந்தால் கருத்தே சொல்லாமல் நாவடக்கம் காத்திருப்பார் என்று தம்பிமார் யாவரும் அறிந்து கொள்ள வேண்டும், அதே நேரம், பேட்டிக்கு ஆதாரம் இருந்தமையால் வக்காலத்து வாங்க முடியாத கட்டத்தில்தான் கண்டிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது என்பதை மாண்புமிகு அரசாரும் அறிய வேண்டுமேயல்லாமல் நம்மீது யாரும் குறைவிளங்கக் கூடாது.

காதிலை பூ கந்தசாமி



படிப்பகம்

www.padippakam.com

Regd. as a News Paper at the G.P.O.(QD/21/NEWS/98)



அருள் ஜுவலர்ஸ்

பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.

கிளை: 105, காலி வீதி,வெள்ளவத்தை,கொழு-06 580230

3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
436331



↑ வட இந்தியாவில் இந்துக்கள் அனுஷ்டிக்கும் திருவிழாக்களுள் மாபெரியது 'கும்பமேளா' என்பதாகும். நாசிக், உஜ்ஜெய்னி, ஹரித்வார் மற்றும் பிரயாகை ஆகிய இடங்களிலுள்ள தீர்த்தமாடும் தலங்களில் இத்திருவிழா இடம் பெறுகிறது. மூன்று வருடங்களுக்கு ஒரு தடவை இந்த நான்கு தலங்களிலும் விழா மாறி மாறி நடைபெறும். ஆகவே ஒவ்வோர் இடத்திலும் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் கும்பமேளா இடம்பெறும்.

## பெருவிழா

கங்கைநதியும் ஜமுனா நதியும் சங்கமமாகும் பிரயாக் என்ற தலத்தில் 1995 ஜனவரி 30ம் திகதியன்று கும்பமேளா-தீர்த்தமாடிய பக்தர்கள் தொகை எவ்வளவு தெரியுமா? சுமார் இரண்டு கோடி. அன்றைய தினம் அப் புனித நதியில் தீர்த்தமாடினால் தங்களுடைய முற்பிறவிப் பாவங்களும் அற்றுப் புனிதமடைந்து விடுவார்கள் என்ற நம்பிக்கை இருப்பதால் உலகனைத்துமிருந்து இந்துயாத்திரீகர்கள் இத்தலத்துக்கு விரைகின்றனர்.

பிரயாகை தலத்தில் தீர்த்தோற்சவம் தொடங்குவதற்கு முன்னர் குருஒருவர் உரிய மந்திர உச்சாடனம் செய்யும் காட்சி இது. ○



SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
323657

## மணவிழா


↓ மொத்தம் 30 ஆயிரம் ஜோடிகள் ஒரே இடத்தில் கூடினார்கள். அமெரிக்காவின் தலைநகரான வாஷிங்டனில் உள்ள ஜே.எஃப். கென்னடி மைதானத்தில் 1997 நவம்பரில் இந்த ஒன்றுகூடல் நடந்தது.

இந்த ஜோடிகள் அனைத்தும் ஏற்கனவே மணம் முடித்தவர்கள்தான். உலக கிறிஸ்தவ ஒன்றிணைப்பை உறுதிப்படுத்துவதற்காக அத்தனை ஜோடிகளுக்கும் மறுமணவிழா நடத்தப்பட்டது.

ஆனாலும் இந்த மறுமணவிழா உலக சாதனை படைக்க முடியவில்லை. ஏனெனில் 1995ல் தென்கொரியாவின் தலைநகரான சியோலில் 35 ஆயிரம் ஜோடிகளுக்கு ஒரே மைதானத்தில் மறு மணவிழா நடத்தப்பட்டது. அதுதான் இன்று வரை உலக சாதனை மணவிழா.



## நவதக்காளி



↑ நவீன உத்திகளைக் கையாண்டு செயற்கை முறையில் உயிரினங்களை உற்பத்தி செய்து இயற்கைக்கு சவால் விடும் அளவு மனிதன் துணிந்துவிட்டான். [illegible] உற்பத்தி செய்யப்போவதாக அறிவியலாளர்கள் 'எச்சரிக்கை' விடுத்துள்ளனர்.

அமெரிக்காவில் மேற்படி முறையை அனுசரித்து தாவரங்களையும் காய்கறிகளையும் உருவாக்கி வருகின்றனர். இவ்வகையில் உருவாக்கப்பட்ட தக்காளி, மனித உணவுக்குத் தகுதியானது என்பதை 1994 மே 18ம் திகதி அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாக மையம் உறுதிசெய்து அனுமதி அளித்தது. இந்தரகத் தக்காளி மரத்திலிருந்து பறிக்கப்பட்டு நீண்ட நாட்கள் கெட்டுப்போகாமலிருக்கின்றன என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

படத்தில் காணப்படுவது மெக்ஸிகோவில் இயற்கையாகவே இஸ்ரேல் நாட்டுப் பண்ணையில் உற்பத்தி செய்யப்பட்ட விதைகளைக் கொண்டு- விளைவிக்கப்பட்ட தக்காளிப் பழங்கள். செயற்கை முறை உற்பத்திகளைப் போல் இந்த ரகமும் நீண்ட காலம் பழுதடையாமல் இருக்குமாம். இது உலக சாதனைகளில் ஒன்றாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

'தக்காளி தக்காளி தாவணி போட்ட தக்காளி' என்று நாம் பாடிக்கொண்டிருக்க, மேல்நாட்டில் தக்காளியை புதுவிதமாக உற்பத்தி செய்து காட்டிவிட்டனர். நாம் பாடிக்கொண்டே இருக்கவேண்டியதுதான். ▭

## விருந்து

→ஜெர்மனிலுள்ள பேர்லின் நகரில் கடந்த ஒன்பது வருடங்களாக-ஜூலை மாதம் 12ம் திகதி அன்று 'காதலர் ஊர்வலம்' என்ற நிகழ்ச்சி மிகக் கோலாகலமாக நடைபெற்று வருகிறது.

கிழக்கு பேர்லின்-மேற்கு பேர்லின் என்று இரு கூறுகளாக பெரும் சுவர் மூலம் பிரிக்கப்பட்டிருந்த பேர்லின் நகரம்-பெருஞ்சுவர், தகர்க்கப்பட்டு, ஒன்றிணைந்ததைக் குறிக்கும் தினத்தை கொண்டாடும் முகமாகவே 'காதலர் ஊர்வலம்' நடைபெற்று வருகிறது.



ஆண்-பெண் இருபாலாரும் வேடிக்கையான விநோத வேடங்களுடன்-காதலர்களாக ஆடிப்பாடி ஆனந்தமாக உலாவருவார்கள். 1997 ஜூலை 12ம் திகதியன்று நடைபெற்ற விழாவில் உலகனைத்திலுமிருந்து சென்ற இலட்சக்கணக்கானோர் இவ்வூர்வலத்தைக் கண்டு களித்தார்களாம்.

இந்த ஊர்வலத்தில் 38 அலங்கார ஊர்திகளும் பவனி வந்தனவாம். இந்த விழாவின்போது மொத்தம் 8 கோடி 40 இலட்சம் [illegible] சேர்ந்த [illegible] கணக்கிடப்பட்டது. நமநாட்டு மதிப்பில் 336 கோடி ரூபாய்கள். இது ஓர் உலக சாதனையாகும். களியாட்ட விழா எதிலும் இத்தனை பணம் சேர்ந்தது கிடையாது. காதலர் என்றால் சும்மாவா? கலக்கிவிட்டார்கள். அந்த விழாவில் கலந்துகொண்ட ஜோடிகளில் ஒன்றுதான் இது. ஜாலியோ ஜாலி. ○



## சாதனை

←ராசியில்லாத கப்டன் என்று ஒரு காலத்தில் இகழப்பட்ட அதே கப்டன் இன்று தோளில் தூக்கி வைத்து ஆடப்படுகிறார். அசாருதீனுக்கு இப்போது பொற்காலம்.

35 வயது என்று சொன்னால் யாரும் நம்பமாட்டார்கள். அத்தனை கச்சிதமாக உடம்மை வைத்திருப்பதால்தான் சாதனைமேல் சாதனை படைக்கிறார். யாரும் அவரிடம் 'போதுமடா தம்பி' என்று கூறப்போவதில்லை. மேலும் எதிர்பார்க்கிறார்கள்.

இந்திய அணிக்கு அசார் மீண்டும் தளபதியான பின்னர் எட்டு சாம்பியன் கோப்பை போட்டிகளில் இந்திய அணி பங்கு கொண்டது. ஐந்து கோப்பைகளை கைப்பற்றியது. அதில் இறுதியாகப் பெற்றது சார்ஜாவில்.

இந்திய அணியிடம் முன்னர் அரிதாகக் காணப்பட்ட உத்வேகம் இப்போது அடிக்கடி காணப்படுகிறது. அதுதான் வெற்றியின் இரகசியம்.

சர்வதேச ஒருநாள் போட்டிகளில் அதிக ரன் குவித்து உலகசாதனை படைத்திருக்கிறார் அசார்.

சகல துறை ஆட்டக்காரரான அசார் மேலும் பல உலக சாதனைகளைப் படைத்திருக்கிறார். இந்திய கிரிக்கெட் உலகில் அசார் தனியான அத்தியாயம். அந்தப் பொறாமையால் கல் எறிந்தவர்கள் எல்லாம் இப்போது வாய் மூடிவிட்டனர். ஏனென்றால், அசார் மீதான பழிச் சொற்களுக்கு இப்போது அவரது துடுப்பு பதில் சொல்லிக்கொண்டிருக்கிறது. ○

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

குரும்பசிட்டி நந்தன்-வசந்தி தம்பதியினரின் செல்வப் புதல்வன் **ந.ஜனகன்** தனது முதலாவது பிறந்தநாளை 15.09.1998ல் கனடா மொன்றியலில் உள்ள தனது இல்லத்தில் சிறப்பாகக் கொண்டாடினார். இவரை அன்பு, அப்பா, அம்மா, அப்பப்பா, அம்மப்பா, அம்மம்மா,-Norway மாமா-மாமி, சின்னமாமா, அன்ரா, பெரியப்பா குடும்பத்தினர், வவுனியா சித்தப்பா-சித்தி, மாமி குடும்பத்தினர்,



செல்வன் ந.ஜனகன் 15.09.1998

ஜேர்மனி சித்தப்பா மற்றும் கனடா, கொழும்பு, வவுனியா, கண்டியில் இருக்கும் உறவினர்களும் குரும்பசிட்டி முத்து மாரி அம்பாளின் அருளும் நல்லாசியும் பெற்று பண்பின் பிறப்பிடமாய் செல்வச் செழிப்புடன் சகல கலைகளும் பெற்று பல்லாண்டு காலம் நீடுழி வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.